548, POINT-PEDRO ROAD
NALLUR - JAFFNA

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 31 சனிக்கிழமை (14-06-1997) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம் - 2

# வன்னி நடவடிக்கை தற்காலிக நிறுத்தம்!

## தாண்டிக்குளம் காவலரண்கள் மீண்டும் பலப்படுத்தப்படும் வரை

கொழும்பு, ஜூன் 14

**கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதலுக்கு இலக்கான தாண்டிக்குளம், நொச்சிமோட்டை காவலரண்கள் பலப்படுத்தப்படும் வரை 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினரின் புளியங்குளம் நோக்கிய நகர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.**

பதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை நேற்று இவ்வாறு செய்தி வெளியிட்டது.

எதிரியின் பிரதேசத்துக்குள் மேலும் முன்னேறுவதற்கு முன்பாக தாண்டிக்குளம், நொச்சிமோட்டை பாதுகாப்பு நிலைகளின் நிலைமை குறித்து மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளதாலேயே இந்த நகர்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நூற்றுக்கணக்கான துருப்புக்கள் இந்தப் பகுதிகளில் குவிக்கப்பட்டு நிலைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஓமந்தைத் துருப்பினருக்கும், தாண்டிக்குளம் – நொச்சிமோட்டைப் பகுதித் துருப்பினருக்கும் இடையில் நிலவிய இடைவெளி நிரப்பப்பட்டுள்ளது.

—இவ்வாறு அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-3-150)

## காயமுற்ற படையினரை ஜனாதிபதி பார்த்தார்!

கொழும்பு, ஜூன் 14

தாண்டிக்குளம், நொச்சிமோட்டைத் தாக்குதல்களில் காயமடைந்து கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியிலும், இராணுவ ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ள படையினரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இச் சண்டையில் காயமுற்ற நாநூறு படையினர் பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தாண்டிக்குளத்தில் பிணவாடை வீசுகிறது!

''தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதியில் எங்கும் சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன. பிணவாடை வீசுகிறது.'' — இவ்வாறு படை வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தாண்டிக்குளம், நொச்சிமோட்டைப் பகுதியில் சடலங்களைத் தேடும் பணிகளை படையினர் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள்.

நேற்று முன்தினம் மாலை வரை 130 படையினரின் சடலங்களையும், 48 புலிகளின் சடலங்களையும் மீட்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

புளொட் அமைப்பைச் சேர்ந்த ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும்—

திக்குத்திசை தெரியாது ஓடிய மக்களைக் காப்பாற்றச் சென்ற தமது அமைப்பைச் சேர்ந்தவர்களில் ஏழு பேரைக் காணவில்லை என்றும்—

புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-150-3)

## கப்பல் சேவை

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று ''நியூகோ எண்டியூரன்ஸ்'' கப்பல் மூலம் பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 'வெற்றி உறுதி' நடவடிக்கைக்கு பாக். உதவி என்கின்றனர் புலிகள்

### ஆனால் அந்நாடும், இராணுவமும் மறுப்பு

வவுனியாவுக்கு வடக்கே ஆரம்பிக்கப்பட்டுள்ள 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை, பாகிஸ்தானின் விசேட இராணுவ நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றே மேற்கொள்ளப்படுகிறது என்று விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விசேட நிபுணர்கள் அநுராதபுரம் கூட்டுப்படை தலைமையகத்துக்கு வந்து ஆலோசனை வழங்கினர் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவரும், ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளும் இக் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

இலங்கை போன்ற நட்பு நாடு ஒன்றின் உள்விவகாரங்களில் ஒரு போதும் பாகிஸ்தான் தலையிட்டது கிடையாது என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் தெரிவித்தார்.

## தாண்டிக்குளத்தில் ஐந்நூறு புலிகள் பலி என்கின்றது இராணுவத் தரப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தாண்டிக்குளத்தில் கடந்த செவ்வாய் அதிகாலை புலிகள் நடத்திய தாக்குதலின் போது ஐந்நூறுக்கும் அதிகமான புலிகள் இறந்துள்ளதாக இராணுவத் தரப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையின் முழு

( 3ஆம் பக்கம் பார்க்க)

## 180 படையினர் பலி?

இராணுவ வட்டாரங்களில் கிடைக்கப்பட்ட— ஊர்ஜிதப் படுத்தப்படாத — செய்திகளின்படி தாண்டிக்குளம் மோதல்களில் 180 படையினர் பலியாகியிருப்பதாகத் தெரியவருகின்றது என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இம்மோதல்களில் 40 படையினர் வரையில் காணாமல் போனதாகவும் அப்பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

தாண்டிக்குளம் மோதலுக்கு முன்னர் நடந்த 'வெற்றி உறுதி' படை நடவடிக்கையில் 233 படையினர் பலியானதாகவும் படையினர் தரப்பில் அறுநூறு பேர் வரையில் காயமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மனித உரிமைமீறலில் புலிகளும் படையினரும்

### பல்கலை ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். குடாநாட்டில் இராணுவமும், விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் என்ற பெயரில் செயற்படும் மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பிலிருந்து இயங்கும் இந்த அமைப்பு தமது பிந்திய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் எழுநூறுக்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர். ஆனால் அது குறித்து விசாரணை நடத்தப்படும் என அறிவித்ததைத் தவிர வேறு எந்த உருப்படியான நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை.

தனது இராணுவம் ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்கும் ஓர் அமைப்பு எனக் காட்ட அரசு எடுத்த முயற்சி தோற்றுப் போய் விட்டது.

மனித உரிமைகளை அவமதித்து நடந்து, குற்ற

( 6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனேயே பேச்சு என்கிறார் ரணில்!

லண்டன், ஜூன் 14

புலிகளுடன் அரசு பேசுவது குறித்து ஐ. தே. கட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை. ஆனால்பேச்சுவார்த்தை நடத்துவதாயின் புலிகளுடன் மட்டுமே அரசு பேச வேண்டும். வேறு அமைப்புகளுடன் பேசி தீர்வு காண முடியாது.

— இவ்வாறு கூறியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் அழைப்பை ஏற்று லண்டன் சென்றிருக்கும் ரணில் அங்கு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

(அவரது பேட்டியின் மேலதிக விவரங்கள் நாளைய உதயனில் பிரசுரமாகும்.)

### ஒந்தாச்சி மடத்தில்

## மூன்று பொலீஸாரும் 2 முஸ்லிம்களும் பலி!

மட்டக்களப்பு —கல்முனை வீதியில் தனியார் பஸ் ஒன்றில் சென்றுகொண்டிருந்த மூன்று பொலீஸார் ஒந்தாச்சி மடம் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த பஸ்ஸில் பயணம் செய்த மற்றும் இரு முஸ்லிம்களும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத்தில் பணிபுரியும் சார்ஜண்ட் ஒருவரும் மற்றும் இரு பொலீஸாருமே விடுமுறையில் சென்று கொண்டிருந்த சமயம் — நேற்றுக் காலை — 7.15 மணியளவில் அவர்கள் சென்ற பஸ் வழிமறிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் நால்வரின் சடலங்களை விடுதலைப் புலிகள் வாகரையில் வைத்துள்ளதாகவும் —

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக படையினரிடம் இச்சடலங்களை இன்று கையளிக்க புலிகள் ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும் —

நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-3-5-21)

## அதிகாரி, சிப்பாய் உட்பட மூவர் வெலிகந்தவில் பலி!

மட்டக்களப்பு, ஜூன் 14

பொலன்னறுவை மாவட்டத்தில் வெலிகந்தவில் நாகஸ்தன்ன என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவ காவலரண் மீது நேற்றுக் காலை 7.15 மணிக்கு விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஓர் அதிகாரியும், மற்றொரு சிப்பாயும் ஒரு விவசாயியும் உயிரிழந்தனர்; ஆறு படையினரும், இரு பொதுமக்களும் காயமடைந்தனர்.

காயமுற்றோர் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்,

அப்பகுதி விவசாயிகளுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த படையினர் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது. (உ-3-5-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தேவை

சாவகச்சேரியில் மின்சார வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு, விலைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. தொடர்பு: மே/பா இல 625, உதயன், யாழ்ப்பாணம். [47777]

படம் பிறேம் போடும் வேலையில் அனுபவமுள்ள தொழிலாளர்களும், அவை சார்ந்த உபகரணங்களும், அத்துடன் நல்ல நிலையிலுள்ள தமிழ் தட்டச்சு இயந்திரமும் தேவை. தொடர்பு: மே/பா இல. 626, உதயன், யாழ்ப்பாணம். (47778)

### விற்பனைக்கு

தேநீர்க் கடைக்குத் தேவையான 2 சோக்கேஸ் மற்றும் சகலவிதமான தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- S. சுதர்சன் 150, சிவன் பண்ணை வீதி, கொட்டடி யாழ்ப்பாணம். (சிற்றி (Boy) போய் ரெயிலர் முன்னால்) [47759]

கொடிகாமம் மகாவித்தியாலயம் அருகில் ஸ்ரேசனுக்கு முன்பாக வீட்டுடன் கூடிய 10 பரப்புக் காணி (நன்னீருடன் சகல வசதிகளையும் கொண்டது), கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் K.K.M. Mill என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: C. கைலாயர், ஸ்ரேசன் றோட், கொடிகாமம். [47741]

Honda CD 125 Twin மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. இன்று (14-6-97) தொடர்புகொள்ளவும். 368/11, பிரதான வீதி, அச்சுக்கூட ஒழுங்கை, யாழ்ப்பாணம். [47787]

### மணப்பெண்கள் தேவை

குறைவான பாவமுள்ள, 34 – 38 வயதுள்ள ஏழு ஆசிரியர்களுக்கு (பட்டதாரிகளும்) அழகான மணப்பெண்கள் தேவை. தொழிலுள்ளவருக்கு முன்னுரிமை. புகைப்படம், சாதகத்துடன் நேரில் காலை வேளையில் தொடர்பு; முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன். [47786]

### தவறிவிட்டது

ரவிச்சந்திரன் கமலநாயகி என்பவருடைய விசேட அடையாள அட்டை இல. 0905016942 வடலியடைப்பில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த. யோகேஸ்வரி, புது மதவடி, சுதுமலை வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (47271)

### சோதிடம்

வெளிநாட்டு, உள்நாட்டு ஜாதகம் கணிக்கவும், வெளிநாட்டுப் பிரயாண, திருமண ஆருட பலன்களுக்கும், திருமணப் பொருத்தம் முகூர்த்தம் நிச்சயிக்கவும் நாடுங்கள்; ''வரோதயன்'' திருவீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (47774)

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர, கல்வித்தடை, விவாகத் தடை, தொழில் தடை தீர ஆலோசனைகள் வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ''பொய்யா மொழி'' சோதிடம், ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூர். (47775)

## புதிய இடத்தில் அலுவலகம்

வடபிராந்திய கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் தலைமைப் பணிமனை தற்போது சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது. (ஐ-4)

### இறைச்சிக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சி. சிவசுரேஸ், 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் அருகாமை). (47784)

### மரம்

மரம் இல்லாமல் மனிதன் வாழமுடியாது. சர்க்கரை வேம்பு, பலா, வேம்பு, மூலிகை, கரிசலாங்கண்ணி, கற்பூரவல்லி, பொன்னாவரசு, மில்க்வைற் நீலசோப் 10 உறைக்கு அல்லது ரூபா. 10/- உங்களுக்கு உதவிட எங்களுக்கு உதவுங்கள் 'மில்க் வைற்'. [சி/928]

## கண்ணீர் அஞ்சலி

### இராசையா மகாலிங்கம்

(இளைப்பாறிய அதிபர்)

கட்டுடை சைவ வித்தியாசாலையின் ஆசிரியராகவும், அதிபராகவும் நீண்ட நாள் பணியாற்றியவரும், கட்டுடைக் கிராமத்தின் வளர்ச்சிக்காக பல கோணங்களில் நின்று தன்னலமற்ற சேவை புரிந்தவருமான

**அமரர் இராசையா மகாலிங்கம்**

அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல அரசடி விநாயகனை வேண்டி நிற்கும்:

ச. சிவகுமாரன்
கிராம அலுவலர்,
கட்டுடை.

(47792)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை கந்தசாமி

(பிரபல வர்த்தகர், நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தசாமி அவர்கள் 12-06-97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பவானி (பூபதி)யின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, கனகம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரரும், தவமலர், இராசசூரியர், கணநாதன், சந்திரமலர் (லண்டன்), உதயமலர், வனிதமலர், கமலநாதன் (கனடா), ஞானமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சபாநாதன், கலாராணி, தவமணிதேவி, விக்கினேஸ்வரன் (லண்டன்), ஜெகதீசன், தவவிநாயகன் (கனடா), சசிதரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆராதனா, நிமலன், சங்கீதா, புருசோத்தமன், தர்சினி, மிலானி, பிரணன், வாகீசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 13-6-97 மாலை நயினாதீவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

(47797)

### சின்னத்தம்பி ஜெகநாதன்

(Retired Shroff of Cargills Company)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ஜெகநாதன் அவர்கள் 11. 6. 97 புதன் கிழமை அன்று காலமானர்.

இவர் யாகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை, வல்வெட்டி இந்துக் கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், வசந்தராஜ் (லண்டன்), வசந்தரூபி (கனடா), ஜெயரூபி (கனடா), சுபரூபி, வனஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சாரங்கன் (கனடா), இராதாகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷாந்தியின் அன்புப் பேரனும், தர்மேஸ்வரி, இராமகிருஷ்ணன், விநாயகமூர்த்தி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-6-97) காலை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி. யாகேஸ்வரி
(மனைவி)

உதவி அரசாங்க அதிபர் ஒழுங்கை,
உடுவில், கிழக்கு சுன்னாகம். (47795)

### திருமதி வைத்தியநாதி தெய்வானை

அனலைதீவைப்பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வைத்தியநாதி தெய்வானை அவர்கள் நேற்று (13-06-1997) காலமானார்.

அன்னார் முன்னைநாள் பலப்பிட்டி வர்த்தகர் க. வைத்தியநாதி அவர்களின் அன்பு மனைவியும் குணரட்ணம், புஸ்பமணி, செல்வராணி ஆகியோரின் அருமைத்தாயாரும், வைத்தியநாதன் (இளைப்பாறிய தபால் அதிபர்), குலசேகரம் (கணக்காய்வாளர், கனடா), இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (14-06-1997) பகல் 10-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அனலைதீவு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

தகவல்:
வை. [illegible]
([illegible])

6 ஆம் வட்டாரம்,
அனலைதீவு. (47799)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலையில்
# தனியார் லொறிகள் சேவையில் இல்லை!
## வேலை நிறுத்தம் தொடர்கிறது

திருகோணமலை, ஜூன், 14

இராணுவ நடவடிக்கைகளுக்கு என தனியாருக்குச் சொந்தமான லொறிகளைச் சுவீகரிப்பதை நிறுத்துமாறு கோரி தனியார் லொறிச் சொந்தக்காரர்கள் திருகோணமலையில் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் தொடர்பாக அங்கு நேற்று நடந்த பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்தன.

தனியார் லொறிகளை இராணுவ நடவடிக்கைகளுக்காகச் சுவீகரிக்கக் கூடாது என்று முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை இலங்கை முழுவதும் உள்ள லொறி உரிமையாளர்கள் சார்பில் விடுக்கப்படும் கோரிக்கை என்று நேற்று தனியார் லொறி உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

சுமார் முந்நூறு லொறிகள் திருமலை பிரிமா ஆலைக்கு முன்பாக தற்போது நிறுத்தப்பட்டுள்ளன. (உ-150-3)

## நினைவு தின போட்டிகள்

வடமராட்சி, ஜூன் 14

தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் நினைவுதினத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான உளச்சார்பு, கட்டுரை, பேச்சு, மனனப் போட்டிகள் இன்று சனிக்கிழமை புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன,

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 250 பாடசாலை மாணவர்கள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். (ஐ-173)

## மிதிவெடியில் காயம்

மீளக்குடியேறி ஒருவருடத்திற்கு மேலாக வசித்து வந்த வீட்டின் வளவில் உள்ள கிணற்றுக்கு தண்ணீர் அள்ளச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

நீர்வேலி மத்தியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வநாயகம் சிவபாக்கியம் (வயது 46) என்பவரே படுகாயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கோரிக்கை

யாழ் ஆஸ்பத்திரியில் கடந்த 7 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட — கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சிவரத்தினம் — மறுநாள் இறந்துவிட்டதாகவும்—

யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள அவரது சடலத்தை அவரது உறவினர்களைப் பொறுப்பேற்குமாறும்—

யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (உ-3)

## தவறிவிட்டது

இல. 44, தேவாலய வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **செல்வி யோகேஸ்வரி வினாசித்தம்பியின்** தேசிய அடையாள அட்டை இல. 376360822 V யும், யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளை நடைமுறைக் கணக்கு இலக்கம் P 17065 காசோலைப் புத்தகமும், ஒருதொகைப் பணமும் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ''யாழ் மருந்தகத்திற்கும், வை. ஜீ. மருந்தகத்திற்கும்'' இடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மனிதாபிமானத்துடன் தயவுசெய்து திருமதி செ. ரகு. இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி கிளையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(47798)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

### புலோலி தமிழ் இளைஞர் கழகமும் புற்றளை சனசமூக நிலையமும்

இணைந்து இன்று 14 — 06 — 97 இல் நடத்தவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். சீட்டிழுப்பு எதிர்வரும் 13—08—97 இல் நடைபெறும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போ. பிரதீபன்,
செயலாளர்,
புற்றளை சனசமூக நிலையம்.

(47793)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### திருமதி சுந்தரம் ஆச்சாரி பார்வதி

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், ஜெயபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்டு, அங்கு இறைபதமெய்திய திருமதி சுந்தரம் ஆச்சாரி பார்வதியின் நாளை நடைபெறும் (15-06-97) 16 ஆம் நாள் நினைவஞ்சலியிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

சு. நற்குணராஜா
(சற்குணம்)
(மகன்)

முகவரி:
இல. 6/6, பெருமாள் கோயில்,
வடக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (47772)

# அரசியல் கொந்தளிப்பு நிலைக்களன்களாக மாறி வருகின்ற மேற்கு ஆபிரிக்க நாடுகள்!

உலக உலா
என்.பி.சீலன்

35 ஆண்டுகளின் பின் கொங்கோ என்ற பெயர் சர்வதேச அரங்கில் மீண்டும் அடிபட்டுக்கொண்டிருக்கின்றது.

ஒரு கொங்கோவில் யுத்தம் முடிவடைய மற்றைய கொங்கோவில் தற்போது யுத்தம் ஆரம்பித்திருக்கின்றது.

அரசியல் குழப்பங்கள் ஆபிரிக்க நாடுகளுக்கு ஒரு சாபக் கேடு ஆகும்.

### கொங்கோ ஜனநாயக குடியரசு

1960 ஆம் ஆண்டு ''பெல்ஜியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்றபோது பெல்ஜியம் கொங்கோ'' என்று அழைக்கப்பட்ட நாடு தான் பின்னர் ஸயர் (Zaire) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

தற்போது லோரன்ற் கபீலா தலைமையிலான அரசாங்கத்தினால் கொங்கோ ஜனநாயகக் குடியரசு Democratic Republic of (Congo) என்று மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சர்வாதிகாரி முபுட்டுவின் காலத்தில் இதன் தலைநகர் கின்ஸாசா.

தற்பொழுது லோரன்ற் கபீலா தலைமையிலான

## ஒரு கொங்கோவில் அமைதி திரும்ப மறு கொங்கோவில் யுத்தம் மூண்டது

ஆட்சியாளர்கள் கனன்கா என்ற இடத்தை (Kanango) தலைநகரமாக மாற்றி உள்ளனர்.

### கொங்கோ பிரஸ்ஸவில்

மற்றைய நாடு கொங்கோ குடியரசு (Republic of the Conog) ஆகும்.

இதன் தலைநகர் பிரஸ்ஸவில் ((Brazzaville).

ஆனால் மற்றைய கொங்கோவில் இருந்து பிரித்துக் காட்டுவதற்காகக் கொங்கோ -- பிரஸ்ஸவில் என்று இந்த நாடு அழைக்கப்படுகிறது. கொங்கோ — பிரஸ்ஸவில் பிரான்ஸின் குடியேற்ற நாடாக ஒரு காலத்தில் இருந்தது.

கொங்கோ— பிரஸ்ஸவிலில் தற்பொழுது நடைபெறும் சண்டையை நிறுத்துவதற்கு பிரெஞ்சு அதிபர் ஜக் ஷிராக் முயற்சிகள் மேற்கொண்டிருப்பது இதனால் தான்.

### கொங்கோ நதி

பிரஸ்ஸவிலுக்கும், கின்ஸாசாவுக்கும் இடையில் உள்ள கொங்கோ நதிதான் இந்த இரண்டு நாடுகளுக்கும் எல்லை.

லோரன்ற் கபீலா தலைமையிலான படைகள் கின்ஸாசாவை நெருங்கியபோது கொங்கோ நதியைக் கடந்து ஆயிரக்கணக்கான அகதிகள் கொங்கோ — பிரஸ்ஸவிலுக்குச் சென்றனர்.

தற்பொழுது கொங்கோ— பிரஸ்ஸவிலில் இருந்து அகதிகள் கொங்கோ நதியைக் கடந்து கின்ஸாசாவுக்குள் தப்பி வந்துகொண்டிருக்கின்றனர்.

இந்த இரு கொங்கோ நாடுகளும் சியராலியோனும் தற்போது மேற்காபிரிக்காவில் கொந்தளிக்கும் மையப் பகுதியாக இருந்து வருகின்றன.

### பிரெஞ்சு அதிபர் முயற்சி

கொங்கோ - பிரஸ்ஸவிலில் தற்பொழுது நடைபெற்று வரும் சண்டையை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சியில் பிரெஞ்சு அதிபர் ஜக் ஷிராக் வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் சண்டை இன்னும் நிற்கவில்லை.

ஜனாதிபதி பஸ்கால் லிசூபா (Pascal Lissouba) முன்னாள் ஜனாதிபதியும் பலம் வாய்ந்த மார்க்சிய தலைவருமான டெனிஸ் சாசூ என்கியூசோ (Denis Sassou Nguesso) ஆகியோருடன் பிரெஞ்சு அதிபர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு கோரினார்.

அண்டை நாடான கபொனின் ஜனாதிபதி ஒமார் பொங்கோவின் மத்தியஸ்தத்துடன் சமரசம் ஒன்றுக்கு வருமாறு கேட்டிருந்தார்.

சண்டையில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் இதற்கு இணங்கினர்.

எனினும் கொங்கோ — பிரஸ்ஸவிலில் சண்டை இன்னும் நிற்கவில்லை.

### சண்டைக்கு? காரணம் என்ன

ஜூலை 27 ஆம் திகதி கொங்கோ — பிரஸ்ஸவிலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது.

தனிப்பட்ட இராணுவம் ஒன்றை வைத்திருக்கும் டெனிஸ் சாசூ என்கியூசோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு, ஜனாதிபதி பஸ்கால் லிசூபா முட்டுக்கட்டைபோட முயன்றதே தற்போதைய உள்நாட்டுச் சண்டைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் பிரஸ்ஸவிலில் பெரும் பகுதியை என்கியூசோவின் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொங்கோ—பிரஸ்ஸவிலில் இதே போன்ற குழப்பங்கள் 1993 நாடாளுமன்றத் தேர்தலின் பின்பும் இடம்பெற்றன.

அப்பொழுது இடம்பெற்ற மோதல்களில் 2 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.

ஆனால் தற்போதைய சண்டைகள் அரசை ஆட்டம் கொள்ள வைக்கும் அளவுக்கு நாட்டைஇட்டுச் சென்றுள்ளது.

பனிப்போர்க்காலமாக இது இருந்திருந்தால் ஆபிரிக்க நாடுகளில் பெரும் இரத்தக் களரி ஏற்பட்டிருக்கும்.

### அறுபதுகளில் கொங்கோ

தற்போது லோரன்ற் கபீலாவைத் தலைவராகக் கொண்ட அண்டை நாடான கொங்கோ ஜனநாயகக் குடியரசு 1960 ஆம் ஆண்டுகளில் இதனை விட மோசமான நெருக்கடிகளை எதிர் நோக்கியது.

தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இடதுசாரிப் பிரதமர் பற்றிக் லுமும்பா படுகொலை செய்யப்பட்டார். மொயஸ் சோம்பே என்பவர் பெல்ஜிய கூலிப் படைகளின் உதவியுடன் கரங்கா (Katanga) மாகாணத்தை தனிநாடாக பிரகடனம் செய்தார். கரங்கா மாகாணம் தற்போது ஷபா (Shaba) என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்த குழப்பங்களின் போது கொங்கோவின் இராணுவத் தளபதியாக இருந்தவர்தான் முபுட்டு.

1964 ஆம் ஆண்டு அவர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக்கைப்பற்றி கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்தார். 1970 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியின்றி அவர் வெற்றி பெற்றார்.

தமது மகன் முபுட்டு என்ஜிலாவை தனது அரசியல் வாரிசாக முபுட்டு வளர்த்து வந்தார். ஆனால் எயிட்ஸ் நோய்காரணமாக முபுட்டுவின்மகன் இறந்து போனார்.

கொங்கோ — பிரஸ்ஸவில் ஒரு சிறிய நாடு. ஆனால் லோரன்ற் கபீலா தலைமையிலான கொங்கோ ஜனநாயகக் குடியரசு ஆபிரிக்காவிலேயே மூன்றாவது பெரிய நாடு ஆகும். அத்துடன் கனிய வளங்கள் நிறைந்தது.

1960 களில் கொங்கோவின் உள்நாட்டு விவகாரங்களில் மேற்கு நாடுகள் அக்கறை செலுத்தியதற்கு இந்த கனிவளமும் ஒரு காரணம்.

1964 இல் முபுட்டு அதிகாரத்தைக் கைப்பற்றியதுடன் மேற்கு நாடுகளின் நோக்கம் பெரும்பாலும் நிறைவேறி விட்டது என்றே சொல்ல வேண்டும்.

அங்கோலா மார்க்சிய எதிர்ப்பு கிளர்ச்சி வாதத் தலைவரான யோனஸ் சாவிம்பிக்கு ஆதரவாக தனது நாட்டில் சி. ஐ. ஏ. இயங்குவதற்கு முபுட்டு இடம் கொடுத்தார்,

தற்பொழுது மொரோக்கோவில் தற்காலிகமாகத் தங்கி உள்ள முபுட்டுவுக்கு எந்த ஒரு வெளிநாடும் தஞ்சம் அளிக்க முன்வரவில்லை.

1986 ஆம் ஆண்டு பிலிப்பீன்ஸில் இருந்து வெளியேற்றப்பட்ட பேர்டினன்ட் மார்க்கோஸுக்கு ஏற்பட்ட கதி தான் முபுட்டுவுக்கும் தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

### பிரான்ஸ் மீது குற்றச்சாட்டு

தற்பொழுது முபுட்டுவிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி உள்ள லோரன்ற் கபீலா, கொங்கோ -பிரஸ்ஸவிலில் உள்ள பிரெஞ்சுப் படைகள் கொங்கோ நதி வழியாக தமது அரசியல் எதிரிகளுக்கு ஆயுதங்களை வழங்குவதாகக் குற்றஞ் சாட்டி வருகிறார்.

ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றுக்கிணங்க கொங்கோ— பிரஸ்ஸவிலில் பிரான்ஸ் ஒரு சிறிய அளவு படையை வைத்திருக்கிறது.

எனினும் சியராலியோன் நெருக்கடியில் நைஜீரியா தலை[illegible] போன்று கொங்கோ — பிரஸ்ஸவில் நெருக்கடியில் வெளிநாடு எதுவும் நேரடியாகத் தலையிடக் கூடிய நிலைமை இல்லை.

மேற்காபிரிக்க நாடுகளுக்கான பொருளாதார அமைப்பு(Economic Community for West African States) என்ற ஓர் அமைப்பு மூலமே நைஜீரிய அதிபர் சனி அபாச்சா சியராலியோன் உள்நாட்டுப் போரில் தலையிட்டுள்ளார்.

நைஜீரியாவில் பதவியில் இருந்த மக்களால் தெரிவு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்)

விவரம் வருமாறு:-

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் பாதுகாப்பு படையினரின் பாரிய தாக்குதல் காரணமாக தோல்வியடைந்துள்ள புலிகள் தலைவர், மக்கள் மத்தியில் தமது இயக்கத்தின் பெயரை பாதுகாத்துக்கொள்வதற்காக கடந்த 10ஆம் திகதி இரவு வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் மேற்கொண்ட தாக்குதல், பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதல் காரணமாகபலவீனமடைந்து விட்டது.

குறிப்பாக இந்த சம்பவம் குறித்து தொடர்பு சாதனங்களூடாகவும், பத்திரிகை மூலமாகவும், வெவ்வேறு தகவல் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும் சம்பவம் பற்றிய உண்மைத் தகவல் தற்போது கொஞ்சம்கொஞ்சமாகதெரிய வருகின்றது. புலிகள் இயக்கம் தனது 'புலிகளின் குரல்' வானொலி மூலமாக இயக்கத்திற்குப் பக்கச் சார்பாக தகவல்களை அறிவித்துள்ளது. 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து வவுனியாவுக்கு வந்துள்ள மக்கள் தெரிவிக்கும் கருத்துக்களின் படி புலிகள் இயக்கம் கூறுவது பெரும் பொய் எனவும் தெரியவருகின்றது.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் போது இயக்கத்திற்கு பாரிய சேதங்களை ஏற்படுத்திய பீரங்கிகளைத் தாக்கி அழிப்பது என முடிவு செய்த புலிகள் 1,500 இயக்க உறுப்பினர்களை இந்தத் தாக்குதலுக்கு பயன்படுத்தியுள்ளனர். பாதுகாப்பு படையினர் வவுனியாவின் வடபகுதியில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததால், தாண்டிக்குளம் பகுதிக்குள் ஊடுருவிய புலிகள் இந்தப் பகுதியில் வாழும் சாதாரண தமிழ் மக்களை கருத்திற் கொள்ளாமல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்,

இவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட திடீர்த்தாக்குதல்காரணமாக பீரங்கிப் படையினர் நிலைக்கொண்டிருந்த இடங்களுக்கு அவர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சமரின் போது பாதுகாப்புப் படையினரிடம் மேலதிகமாக இருந்த வெடிமருந்துப் பெட்டிகள் தீப்பற்றிக் கொண்டதுடன், தாண்டிக்குளம் சோதனைச் சாவடிக்கருகில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களும் கடைகளும், வீடுகளும், தீயினால் பாதிக்கப்பட்டன. திடீரென ஏற்பட்ட இந்தச் சூழ்நிலையில் பீரங்கிகளை பாதுகாத்துக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் எதிரிகளிடம் இருந்து இந்த ஆயுதங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே படையினரால் பீரங்கிகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையில் பெரும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை புலிகள் ஈடுபடுத்தியிருந்ததாகவும் —

இந்தப் பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கு புலிகள் பெரும் முயற்சி செய்ததாகவும்—

இந்தப் பகுதியை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது பெரும் எண்ணிக்கையிலான இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும்—

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாதுகாப்புப் படையினரின் தாக்குதல் காரணமாக காயமடைந்த இயக்க உறுப்பினர்களைவாகனங்களில் ஏற்றிச் செல்லும் போது விமானப்படையினரின் கபீர், புக்காரா, எம். ஐ. 24 ரக ஹெலிகொப்டர்கள் ஆகியவை மூலம் படையினர் தாக்குதலை மேற்கொண்டுள்ளதால், புலிகளுக்குத் தப்பிச்செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும்—

தப்பிச்செல்ல முடியாத இயக்க உறுப்பினர்கள் மீதும் பாதுகாப்புப்படையினர் அதிகாலையில் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும்—

தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச்சண்டையில் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையிலான இயக்க உறுப்பினர்களில் ஐந்நூறுக்கும் அதிகமான இயக்க உறுப்பினர்களும், இயக்கத் தலைவர்களும் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்பற்ற பகுதியில் இருந்து கிடைக்கும்செய்திகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை ஆயிரத்துக்கும் மேற்பட்ட இயக்க உறுப்பினர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும்—

காயமடைந்துள்ள உறுப்பினர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும்—

காயமடைந்த உறுப்பினர்களை, இடம்பெயர்ந்த மக்களிடம் ஒப்படைத்து விட்டு ஏனைய இயக்க உறுப்பினர்கள் பாதுகாப்பான பகுதிக்குத் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இந்த தாக்குதலின்போது சுமார் ஐம்பது பாதுகாப்புப் படையினர் உயிரிழந்துள்ளனர்; 70 படைவீரர்கள் காயமடைந்துள்ளனர்; வெடிமருந்துகள் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது இந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தமது பலத்தை பலப்படுத்தியுள்ளனர். 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் படையினர் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள்.

மேலும் இந்த மோதலின் போது இந்தப் 'பகுதிகளில் வாழ்ந்த சாதாரண மக்கள் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக சிறுவர்கள், முதியோர் உட்பட 20 பேர் பலியாகியுள்ளனர்; 40-க்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தோர் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். அவர்களுக்குத்தேவையான உதவிகளை படையினர் செய்து வருகின்றனர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுடன் நல்லுறவை பேணுவதே யுத்த வெற்றிகளை உறுதிப்படுத்தும்!

'சாண் ஏற முழம் சறுக்குவது' போலத்தான் இருக்கின்றது படைகளுக்கு.

புலிகளின் பலம் வாய்ந்த கட்டுப்பாட்டுப் பிரதேசமாக விளங்கிய யாழ். குடாநாட்டின் பெரும்பகுதியை கடந்த வருடம் ஏப்ரலில் படையினர் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்தனர்.

ஆனால் அடுத்த இரண்டரை மாத காலத்துக்குள் அதற்கு அபராதமாக முல்லைத்தீவு முகாமை முழுதாகக் காவு கொடுக்க வேண்டிய நிலை படைகளுக்கு ஏற்பட்டது.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான முயற்சியாக குடாநாட்டிலிருந்து தெற்கு நோக்கி கிளிநொச்சி வரையிலும், வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி ஓமந்தைக்கு அப்பாலும் படை நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் படை நகர்வு மிக வெற்றிகரமாக அமைந்திருப்பதாகவும்—

முல்லைத்தீவில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்கியிருக்கும் புலிகளின் தலைமைப் பணிமனை கூட விரைவில் சுற்றிவளைக்கப்படும் நிலை உள்ளதாகவும்—

மூத்த படை அதிகாரிகள் தகவல் வெளியிட்டுக் கொண்டிருந்த போதே நொச்சிமோட்டை, தாண்டிக்குளம் பகுதிக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தி பல ஆயுதங்களை அழித்துவிட்டு பின் வாங்கியிருக்கின்றார்கள்.

கிழக்கில் அடிக்கடி புலிகள் நடத்தி வரும் அதிரடித் தாக்குதல்களுக்கு மத்தியில் வடக்கில் இராணுவ நடவடிக்கை விவகாரங்களில் மிகத் திருப்தியான முன்னேற்றம் இருப்பதாக பாதுகாப்புத் தலைமைப்பீடம் கருதிக் கொண்டிருக்கும் போதே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது படை வட்டாரங்களுக்கு நிச்சயம் பின்னடைவுதான்; 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலைதான்.

தரைவழிப்பாதையைத் திறப்பதற்காக வடக்கு நோக்கி முன்னேறும் படைகளுக்கு பிரதான விநியோகத் தள்மாக — கட்டளை வழங்கும் கட்டளைப் பீடமாக — அத்திவாரமாக இருந்த தளப் பகுதி புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டிருக்கின்றது. இத்தாக்குதல் தொடர்பாக இருதரப்புக்கும் ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள் ஒரு புறம் இருக்க—

இரு தரப்பும் மாறி மாறி மற்றைய தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து போட்டி போட்டுக்கொண்டு அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றன.

ஒருபுறம் ஆயுதப்போர்; மறுபுறம் பிரசாரப்போர்.

இந்தப்பிரசாரப் போரின் தாக்கத்தை — அழுத்தத்தை — குடாநாட்டிலிருந்து வெளியாகும் 'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளின் ஆசிரிய

**சமர்க்களம்**

பீடம்வரை உணரக்கூடியதாக இருந்தது,

இருதரப்பு இழப்புகள் பற்றிய உண்மை விவரங்கள் இனிமேல்தான் மெல்ல மெல்ல வெளிச்சத்துக்கு வரும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

யாழ். குடாநாட்டின் பெரும் பகுதியை படையினர் மீட்டு, 14 மாதங்களுக்கு மேலாகி விட்டது. குடாநாட்டு நிலைமை இன்று எப்படி இருக்கின்றது?

மக்களுக்கும் படையினருக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு முயன்ற யாழ். நகரக் கமாண்டர் பிரிகேடியர் ஹமாங்கொட யாழ். ஸ்ரான்லி வீதியில் தற்கொலைக் குண்டுதாரியின் இலக்குக்குப் பலியாகி ஏறத்தாழ ஒரு வருடமாகுகின்றது.

யாழ். குடாநாட்டின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கருணாதிலக, யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல, 52 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சூல செனிவிரத்னபோன்றோர் குடாநாட்டைக் கட்டி எழுப்புதல், வழமையான வாழ்க்கை நிலையை ஏற்படுத்துதல், மக்கள் — படையினர் உறவை சீர்படுத்துதல் போன்ற முயற்சிகளில் விடாப்பிடியாக நிற்கின்றார்கள். ஆனால் அந்த முயற்சிகள் எவ்வளவு தூரம் பலித்துள்ளன?

மூத்த படை அதிகாரிகள் எப்படித்தான் நல்லுறவைக் கட்டி எழுப்ப முயன்றாலும் மக்கள் — படையினர் உறவு மேம்படுவதாக இல்லை. கீழ் மட்ட அதிகாரிகளினதும், சாதாரண சிப்பாய்களினதும் விட்டேத்தியான போக்கே இதற்கு முக்கிய காரணம்.

'மக்களின் அடிப்படை உரிமைகளை மதியுங்கள்' என்ற சாரப்பட — கண்டிப்பான— எழுத்து மூல உத்தரவுகள் படை 'டிவிஷன்களின்' தலைமையகங்களில் இருந்து கீழ் மட்ட அதிகாரிகளுக்கு அடிக்கடி பறந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் மக்களுடன் நேரடியாகப் பழக வேண்டிய கீழ் மட்ட அதிகாரிகளும் சிப்பாய்களும் இன்னும் மக்கள் ஒவ்வொருவரையும் புலிகளாக, அல்லது புலிகளின் ஆதரவாளர்களாகக் கருதி 'அந்த வகையில்' நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தியப் படைகள் இங்கு நிலை கொண்டுள்ள காலத்தைப்போலல்லாதுசற்று முன்னேற்றமான நிலையில் இலங்கைப் படைகள் இங்கு நிலை கொண்டிருக்கின்றன என்பது உண்மையே.

இந்தியப் படைக் காலத்தில் குடாநாட்டில் நீர்வேலி போன்ற பல்வேறு இடங்களிலும் விடுதலைப் புலிகள் கூட்டமாகச் சுதந்திரமாகத் தங்கி நின்று செயற்பட முடிந்தது; அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது; சிவில் நிர்வாகத்தில் தலையிட முடிந்தது; வரி அறவிட முடிந்தது.

ஆனால் இப்போது அந்த நிலை இருப்பதாக வெளிப்படையாகத் தெரியவில்லை. ஓரிடத்தில் தங்கியிருந்து புலிகளாற் செயற்பட முடியவில்லை; அரசியல் நடவடிக்கைகளிலோ சிவில் நிர்வாகத்திலோ பெரிதாகத் தலையிட முடியவில்லை; வரி அறவிடுவதாகவும் தகவல் இல்லை.

குடாநாட்டில் இருந்து புலிகள் துரத்தப்பட்டு, படையினரின் கட்டுப்பாட்டில் குடாநாடு முற்றுமுழுதாக வந்துவிட்டது என்பதோ —

அல்லது மக்கள் அனைவரும் புலிகளை வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள் என்பதோ —

இதற்குக் காரணமல்ல.

குடாநாட்டைப் புலிகள் இழந்த சமயம் புலிகளின் போக்குக் குறித்து மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டது. எனினும் புலிகளை மக்கள் முற்றாக வெறுத்து ஒதுக்கிவிடவில்லை. தம்முயிரைத் துச்சமாக இழக்கத் தயாராக இருக்கும் அவர்களின் தியாகத்தை வெறுமனே ஒதுக்கிவிட முடியாது என்ற கருத்தே இன்னமும் பரவலாக நிலவுகின்றது.

இந்தியப் படையின் காலத்தைப் போலல்லாது இப்போது புலிகளுக்குப் பகிரங்கமாக உதவி வழங்குவதை பொதுமக்கள் பெரும்பாலும் தவிர்த்து வருகின்றார்கள்; அல்லது ஒதுங்கி நிற்கின்றார்கள். குடாநாடு எங்கும் பரவி நிற்கும் படையினரின் போக்கு, புலிகளின் ஆதரவாளர்களாகச் செயற்படுபவர்களுக்கு எதிராகப்

**- பாசுபதன் -**

படையினர் எடுக்கும் நடவடிக்கைகள் போன்றவற்றால் அச்சமுற்றே பொதுமக்கள் ஒதுங்கி நிற்கின்றார்கள்; படையினர் மீதோ, அல்லது அரசின் மீதோ வைத்த அதீத நம்பிக்கை காரணமாகவல்ல.


குடாநாட்டைத் தாங்கள் கைப்பற்றிபெற்றவெற்றியை படையினர் நிலைநிறுத்திக் கொள்வதோ—

அல்லது புலிகள் குடாநாட்டில் மீண்டும் விஸ்வரூபம் எடுப்பதோ—

அவர்கள் மக்களுடன் நல்லுறவைப் பேணிக்கொள்வதில்தான் இருக்கின்றது. எந்தத் தரப்பு இறுதி வெற்றியை ஈட்டுவதாயினும் அதற்கு மக்கள் மனதை வெல்வது அவசியம்.

ஆகவே யுத்த வெற்றியை ஈட்ட முன்னர், மக்கள் மனதை வெல்வதற்கான வியூகத்தை வகுப்பதே சாலச் சிறந்தது.

★




## அதிரடி அரங்கு

உயர்தர வகுப்புப் படிக்கும் மாணவர்களுக்கு பரீட்சைக் காலம் நெருங்குகின்றது. ஒகஸ்டில் பரீட்சை.

ஆனால் குடாநாட்டில் உள்ள பல பிரபல பாடசாலைகளில் ஒகஸ்டுக்கு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மே மாதத்திலேயே பாடசாலைகளில் 'மிஸ்ஸிங்'.

'அவர்கள் ஸ்டடி லீவில் நிற்கின்றார்கள்.' — என்று சமாதானம் கூறுகின்றார்கள் சில அதிபர்கள், உயர்தர வகுப்பு ஆசிரியர்கள்.

உயர்தர வகுப்புக்கல்வி இரண்டு வருடங்கள். பாடசாலை தவணை விடுமுறைகளைக் கழித்தால் பதினெட்டு அல்லது பத்தொன்பது மாத பாடசாலைக் கல்வியே தேறுமோ தெரியாது.

'பதினெட்டு மாதக் கல்வியில் மூன்று, நான்கு மாதம் 'ஸ்டடி லீவா'? — விளங்கவில்லை.

ஆனால் மாணவர்கள் தரப்பில் வேறு வாதம் முன்வைக்கப்படுகின்றது. பாடசாலைகளில் 'ஸிலபஸ்' பூர்த்தியாகவில்லை. அதனால் கடைசி நேரத்திலாவது 'ரியூஷனில்' நெருக்கியடித்துப் படித்துப் பூர்த்தி செய்வோம் என்று முயற்சிக்கிறோம். அதனால் பாடசாலைக்கு மட்டம் போட்டு விட்டு ரியூஷன் பக்கம் நாடுகிறோம். — என்கிறார்கள் அவர்கள்.

பகலில் ரியூஷன் வகுப்புகள் மும்முரமாக நடக்கின்றன. அப்படியானால் உண்மை நிலை என்ன? மாணவர் கல்வியில் பாடசாலைகளின் பங்களிப்பு என்ன?

'ரியூஷன்' போதனையை விட பாடசாலைக் கல்வி உயர்வானது என்ற நிலையை பாடசாலை ஆசிரியர்கள் பேண வைத்தால்தான் பாடசாலைகள் மீது மாணவருக்கும் சமூகத்துக்கும் நம்பிக்கை பிறக்கும். செய்வார்களா?

★ ★ ★

அடுத்து வரும் கிழமைகளில் — பாடசாலைகளுக்கு இடையிலான — மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் திருகோணமலையில் நடக்கப் போகின்றன. அதேபோல் பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் அம்பாறையில் இடம்பெறப்போகின்றன.

இவற்றுக்கான ஏற்பாடுகளை வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சு செய்து வருகின்றது. நீண்ட காலத்திற்குப் பின்னர் முதல் தடவையாக இத்தகைய மாகாண மட்ட நிகழ்ச்சிகளில் யாழ். குடாநாட்டு மாணவர்களும் பல நூற்றுக்கணக்கில் பங்குபற்றப் போகின்றார்கள். ஆனால் அங்குதான் ஒரு சிக்கல்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இருந்து தமிழ்த்தினப் போட்டிகளுக்கு பதினைந்துக்கும் அதிக மாணவ மாணவியர் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளனர். அதே போன்று மெய்வன்மைப் போட்டிக்கு யாழ். இந்துக் கல்லூரி போன்ற முதன்மைப் பாடசாலைகளில் இருந்து சுமார் இருபது வரையான மெய்வல்லுநர்கள் தகுதி பெற்றிருக்கின்றார்கள்.

இவர்களைத் திருகோணமலை, அம்பாறை போன்ற இடங்களுக்கு கூட்டிச்செல்லும் செலவுகளைச் சம்பந்தப்பட்ட பாடசாலைகளே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறி கைவிரித்து விட்டது மாகாணக் கல்வி அமைச்சு. தேவையானால் தங்குமிட, உணவு வசதி மட்டும் செய்து தரப்படும் என்றும் கூறப்பட்டதாம், சுமார் 20 பேர் கொண்ட ஓர் அணியை ஒரு நிகழ்ச்சிக்கு அனுப்புவதாயின் கப்பலுக்கு மட்டும் போய்வர சுமார் 35 ஆயிரம் ரூபாவுக்கும் கூடிய தொகையை ஒரு பாடசாலை செலவிடவேண்டும். வருடத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு மட்டும் இவ்வளவு தொகையைச் செலவிடுவது குறித்து யாழ். குடாநாட்டுப் பாடசாலைகள் நினைத்துக்கூட பார்க்க முடியுமா?மாகாண மட்டப் போட்டிகளில் யாழ். பாடசாலைகள் முழு அளவில் பங்குபற்றினால் வெற்றி நிலைகளில் பலவற்றை அள்ளி வந்து விடுவார்கள் என்பது ஊரறிந்த இரகசியம்,

ஆனால் முழு அளவில் பங்குபற்ற வாய்ப்புக் கிடைக்குமா? மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

★ ★ ★

இந்தப்பதினான்குவருடகால யுத்தத்தால் அழிந்து போனவை ஏராளம். கட்டடங்கள், வீடுகள், தொழிற்சாலைகள், கோயில்கள், வீதிகள் என பலப்பல.

என்றாலும் என்றோ ஒருநாள், ஏதோ ஒரு தீர்வு வரும்போது இவற்றையெல்லாம் மீண்டும் கட்டி எழுப்பிவிட முடியும். ஆனால் மீண்டும் கட்டி எழுப்பிவிட முடியாதவை சில இருக்கத்தான் செய்கின்றன.

யுத்தத்தில் பலியான உயிர்களைத் திரும்பப்பெற முடியாது. அதேபோல யுத்தத்தால் பெருமளவில் அழிக்கப்பட்ட மரங்கள், சுற்றுச் சூழல் சமநிலை போன்றவற்றையும் நாம் மீண்டும் விரைவாக நேர் சீர் செய்துவிட முடியாது.

யாழ். மக்களின் கற்பகதரு என்று அழைக்கப்படும் பனைகளில் மட்டும் இருபத்தியைந்து லட்சம் மரங்கள் இந்த யுத்தம் ஆரம்பித்த பின்னர் அழித்தொழிக்கப்பட்டிருக்கின்றன.

1986 இல் மட்டக்களப்பில் 1 லட்சத்து 27 ஆயிரம் ஹெக்டர் காடுகள் இருந்தன. அதில் எழுபது வீதம் இன்று யுத்த காரணங்களுக்காக அழிக்கப்பட்டு விட்டன.

வீடமைப்புக்கு என தனியான அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் விமானக் குண்டு வீச்சாலும், யுத்தத்தாலும் வடக்குக் கிழக்கில் வீடுகள் பெருத்த எடுப்பில் அழிக்கப்பட்டன. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு என தனி அமைச்சு இருக்கும்போதுதான் மரம் அழிப்பு தொடர்கின்றது.

சூழல் சீர்கெடுவதைத் தடுத்து, எமது பிரதேச சொத்தை நாமே காப்பாற்ற வேண்டுமானால் ஒவ்வொருவரும் சிந்தித்து கூட்டாக முயற்சிக்கவேண்டும். அழிக்கப்படும் பனை மரங்களுக்குப் பதிலாக வீட்டுக்குப் பத்து பனங்கன்றுகளை இன்றே வளர்க்கத் தொடங்குவோமா?

— மின்னல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கஞ்சா வைத்திருந்த சிப்பாய் கைது!

## யாழ். நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கஞ்சா வைத்திருந்து ஏனைய சிப்பாய்களுக்கு அவற்றை விநியோகித்ததாகக் கூறப்படும்— வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த — சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலீஸாரினால் யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

யாழ். மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான் எம். என். இராமச்சந்திரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, தான் கஞ்சா வைத்திருந்ததை அச்சிப்பாய் ஒப்புக்கொண்டாராம்.

இதனையடுத்து சிப்பாயை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்ட நீதிவான் விசாரணைகளை அத்திகதி வரை ஒத்திவைத்தார். (உ-5)

## பௌதிகவியல் கருத்தரங்கு

ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குப் புதிய பாடத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஓகஸ்டில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பௌதிகவியல் பாடக் கருத்தரங்கு, ஆண்களுக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் பெண்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் நான்கு நாள்களுக்கு காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலயங்களின் அனுசரணையுடன் வ. சூரியநாதன், இ. இரவீந்திரநாதன் ஆகியோரால் நடத்தப்படும் இக்கருத்தரங்கிற்கு வலயம் 1, 2ஐச்சேர்ந்த மாணவர்களும், பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களும் கலந்துகொள்ளுமாறு கல்விப்பணிப்பாளர்களால் கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

## குழந்தைகளுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, ஜூன் 14

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இதுவரை நாளும் நடைபெற்றுவந்த குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் ஏற்றும் பணி சாவகச்சேரி ஆஸ்பத்திரி கிளினிக் கட்டடத்தில் மாதத்தின் இரண்டாம், நான்காம் சனிக்கிழமைகளில் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் த. அனோஜ்

**14 - 06 - 1997**

**தயாபரன் - வசந்தி தம்பதிகளின்**

செல்வப் புதல்வன் அனோஜ் தனது முதலாவது பிறந்த நாளை இன்று அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பம்மா, கனடாவில் வசிக்கும் பெரிய மாமா குடும்பம், சாந்தன் மாமா, பிரான்சில் வசிக்கும் குட்டிமாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, கொழும்பில் வசிக்கும் மாமி, மச்சான், மச்சாள்மார், அண்ணாமார், தம்பி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புடன் நலமுறவாழ அரியாலை நீர் நொச்சித்தாழ்வு சித்திவிநாயகரை வேண்டுகின்றனர்.

**திரு. திருமதி தயாபரன்**

183, A. V. றோட்,
அரியாலை.

(சி/932)

## அ. அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம் பெரியகடை (ஜே—80) கிராம சேவையாளர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் ஆரியகுளம் சந்தி படை முகாமில் வைத்து வழங்கப்பட உள்ளன. இராணுவப் பதிவு மற்றும் குடும்பப்பதிவு அட்டை என்பனவற்றுடன் அங்கு சென்று அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

★ ★ ★

ஈச்சமோட்டை கிராம சேவையாளர் பிரிவுக்கு (ஜே-66) உட்பட்ட மக்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிறு காலை 8.30 மணிமுதல் ஈச்சமோட்டை சனசமூக நிலையம் தற்போது தற்காலிகமாக இயங்கும் வீட்டில் வைத்து வழங்கப்படவுள்ளன.

★ ★ ★

சுண்டிக்குளி வடக்கு (ஜே—76), சுண்டிக்குளி தெற்கு (ஜே—75) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் நாளைஞாயிற்றுக்கிழமை காலை முதல் அந்தந்த கிராம சேவையாளர் அலுவலகங்களில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## மேலும் அகதிகள் குருநகர் வருகை

குருநகர், ஜூன் 14

வன்னியில் இருந்து வள்ளங்களில் குடாக்கடல் ஊடாக கடந்த புதனன்றும், வியாழனன்றும் அகதிகள் குருநகர் இறங்குதுறைக்கு வந்தனர்.

புதனன்று 54 குடும்பங்களைச் சேர்ந்த 177 பேரும், வியாழனன்று 39 குடும்பங்களைச் சேர்ந்த 97 பேரும் வந்தனர். இவர்கள் அனைவரும் பாங்குளப் பகுதியில் தங்கியிருந்தவர்களாவர்.

## ஒளிபரப்பு தணிக்கை நீக்கம்

வெளிநாட்டு தொலைக்காட்சிச் சேவைகளில் இலங்கைச் செய்திகளை ஒளிபரப்புவதற்கு இருந்த தணிக்கையை நீக்குவது என்று புதிய தகவல், தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முடிவுசெய்ததாக அறிவிக்கப்பட்டது.

பி. பி. ஸி, ரி. என். என். போன்ற வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் இலங்கைச் செய்திகளை எவ்வித தணிக்கையும் இன்றி ஒளிபரப்புச் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (உ-3)

## அரசியல்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

பெய்யப்பட்ட ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்றிய சனி அபாச்சா மேற்காபிரிக்க நாடுகளுக்கு புத்தி சொல்ல வருவது சர்வதேச அரங்கில் வியப்பை ஏற்படுத்தி வருகிறது.

எனவே கொங்கோ — பிரஸ்ஸவிலில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குப் பிரான்ஸின் உதவியுடனேயே தீர்வு காண முடியும்.

### தாண்டிக்குளம் தாக்குதல்

# சடலங்கள் பரிமாற்றம்: இடம்பெற மாட்டாது?

கொழும்பு, ஜூன் 14

தாண்டிக்குளம், நொச்சிமோட்டை தாக்குதலில் உயிரிழந்த படையினர் மற்றும் விடுதலைப் புலிகளின் சடலங்களை பரிமாற்றம் செய்வது தொடர்பாக அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ இதுவரை எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜெராட் பேட்றினட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதிக்கு செல்லவேண்டிய எமது வாகன அணி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தாக்குதல் காரணமாக வவுனியாவில் நிறுத்தப்பட்டிந்தது. அது நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றது.

மடுச் சந்தி ஊடாக ஏழுவாகனங்களில் உணவு தவிர்ந்த ஏனைய பொருள்கள் இந்த வாகன அணியில் எடுத்துச் செல்லப்பட்டது.''

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-150-3)

# மயிரிழையில் தப்பிய பிரிகேடியர்

கடந்த செவ்வாயன்று அதிகாலை விடுதலைப் புலிகள் தாண்டிக்குளத்தில் உள்ள 55 ஆவது படையணித் தலைமையகம் மீது மேற்கொண்ட தாக்குதலின்போது அங்கிருந்த அப்படையணியின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் சாந்த கோட்டகொட மயிரிழையில் உயிர் தப்பினார் என 'லங்காதீப' பத்திரிகை தெரிவிக்கிறது.

பிரிகேடியர் கோட்டகொடவைக் காப்பாற்ற விடுதலைப் புலிகளுடன் படையினர் கடும் மோதலில் ஈடுபட நேர்ந்தது எனவும் —

அம்மோதலில் சில சிப்பாய்கள் உயிரிழந்தனர் எனவும் —

உயிரிழந்தவர்களில் பிரிகேடியரின் உதவியாளர்களான ஏக்கநாயக்கா, மதநாயக்கா ஆகியோரும் அடங்குவர் எனவும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

ஆனையிறவில் இருந்து கிளாலியை நோக்கி 1994 இல் நடைபெற்ற 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கைச் சமரின் போதும் இவர் மயிரிழையில் உயிர்தப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ 10)

### அழகிய யுவதியுடன் சேர்ந்து

## குண்டை வெடிக்க வைத்து சார்ஜண்ட் தற்கொலை

இராணுவ சார்ஜண்ட் ஒருவர் அழகிய யுவதி ஒருவருடன் பியகமவில் ஹோட்டல் அறையில் தங்கியிருந்தபோது கைக்குண்டு ஒன்றை வெடிக்கவைத்து தற்கொலை செய்துகொண்டார்.

நேற்று முன்தினம் அதிகாலை 5.20 மணியளவில் ஹோட்டல் அறையில் கேட்ட சத்தத்தை அடுத்து அங்கு சென்று பார்த்தபோது இராணுவ சார்ஜண்டும் அப்பெண்ணும் உடல் சிதறுண்டு இறந்து கிடக்கக் காணப்பட்டனராம். (உ-10)

## விளையாட்டு நிகழ்வு

அளவெட்டி அருணாசலம் வித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றும் நாளையும் பிற்பகல் 2-30 மணி முதல் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம், இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம், அளவெட்டி 'யுத்' விளையாட்டுக் கழகம் ஆகியன பங்கேற்கின்றன. (ஐ-4)

## விசர்நாயால் கடியுண்டனர்

வீட்டின் முன்னால் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியை வீதியில் சென்ற விசர்நாய் ஒன்று துரத்திக் கடித்த சம்பவம் நேற்றுக் காலை பளையில் இடம்பெற்றது.

சிறுமியை விசர் நாய் கடிப்பதைக் கண்ட கார்ச் சாரதி ஒருவர் பிள்ளையைக் காப்பாற்ற ஓடியபோது அவரும் விசர் நாயினால் கடியுண்டார்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விசர்நாயை அப்பகுதி மக்கள் துரத்தி அடித்துக் கொன்றனர்.

பளை பெரியபளையைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் தர்மராஜினி (வயது 12), புலோப்பளையைச் சேர்ந்த செல்லையா இந்திரகுமார் (வயது 35) ஆகியோரே விசர் நாயினால் கடியுண்டவர்களாவர். (உ-117)

## சமய நதிகளில்

மாதகல் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி திருச்சுரூப பவனியுடன் முடிவுறும். (ஐ-4)

★ ★ ★

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி கோயிலின் மணவாளக் கோல விழா இன்று சனிக்கிழமை காலை 7 00 மணிக்கு ஆயிரத்து எட்டு சங்காபிசேகத்துடன் ஆரம்பமாகி மாலை 3 30 மணிக்கு திருக்கல்யாணம், திருவூஞ்சல் நடைபெற்று சுவாமிவீதி வலம் வருதல் நடைபெறும். (ஐ-4)

### நாளை

**ஆனி 1**

ஞாயிற்றுக்கிழமை

திதி: தசமி

பின்இரவு 1.42 வரை.

நட்சத்திரம்: அத்தம்

முற்பகல் 11.04 வரை.

சரிநாள்

சுபநேரம் : 8.53-10 23

ராகுகாலம்: 4.23 -5.53

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

உங்கள் கலர்ப்படச் சுருள்களை, விரைவில் வண்ணப் படங்களாகக் கழுவிப் பெற்றுக் கொள்ள பொருத்தமான இடத்தை நீங்கள் தேடுகிறீர்களா...?

... இதோ! ... உரிய இடம்!

PHOTO PRINT, QUICK SERVICE,
SUNIL ARTS
172, STANLEY ROAD,
JAFFNA

சுனில் ஆர்ட்ஸ்
172, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/936)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செய்திச் சாரம்

### ஏறாவூரில் குண்டுவெடிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 14

ஏறாவூர் குடியிருப்பு என்ற இடத்தில் நேற்று பிற்பகல் 1-15 மணியளவில் நேரம் கணித்து வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்தது.

அந்தப் பகுதியில் வீதி ரோந்தில் ஈடுபடும் படையினர் இளைப்பாறும் கட்டடம் ஒன்றில் இக்குண்டு வெடித்ததாகவும் —

குண்டு வெடித்த சமயம் அங்கு எவரும் இல்லாததால் சேதம் ஏற்படவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

### தலைமன்னாரில் மோதல்

கொழும்பு, ஜூன் 14

தலைமன்னார் பகுதியில் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியிருப்பதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

இத் தாக்குதலை அடுத்து புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் பலர் காயமுற்றனர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-5)

### தாக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கடந்த புதனன்று நயினாதீவுக்குச் சென்று அங்கு நேர்த்திக்கடனை நிறைவேற்றிவிட்டு யாழ். திரும்பிக்கொண்டிருந்த —வட்டுக்கோட்டையைச் சேர்ந்த — மூன்று இளைஞர்கள் வியாழனன்று நயினாதீவு துறையில் வைத்து படையினரால் பிடிக்கப்பட்டு காரைநகருக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும்—

அங்கு வைத்து கண்கள் கட்டப்பட்ட நிலையில் நையப்புடைக்கப்பட்ட இவர்கள் பின்னர் அடுத்தநாள் விடுவிக்கப்பட்டதாகவும்—

முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. (உ)

### நெடுங்கேணியில் 2 புலிகள் பலி!

கொழும்பு, ஜூன் 14

நெடுங்கேணிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு விடுதலைப் புலிகளைப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர் என்றும் —

அவர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கியும், தொலைத்தொடர்புச் சாதனமும் கைப்பற்றப்பட்டன என்றும் —

இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (உ-5)

### புங்குடுதீவு வாசி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 14

வாழைச்சேனையில் நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

இம் மோதலில் சிக்கி புங்குடுதீவு வாசியும், வர்த்தகருமான சதாசிவம் கிருஷ்ணபிள்ளை (வயது 60)என்பவர் உயிரிழந்தார். மற்றும் ஒரு பொதுமகன் காயமடைந்தார். (உ-21-3)

### அக்கரைப்பற்றில் தாக்குதல்

மட்டக்களப்பு, ஜூன் 14

மட்டக்களப்பு அக்கரைப்பற்றுப் பகுதியில் அமைந்துள்ள பொலீஸ் காவலரண் மீது நேற்றுக் காலை 7.15 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

சேத விவரம் தெரியவரவில்லை.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியால் சென்ற வங்கி ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் படையினரால் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

### முகமாலையில் சிப்பாய் காயம்

தென்மராட்சி, ஜூன் 14

நேற்றுக் காலை 8.30 மணியளவில் முகமாலை இந்திராபுரம் பகுதியில் வீதியருகே குண்டு ஒன்று வெடித்ததில் படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரியவந்தது. (உ-117)

### அன்னங்கையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கோண்டாவில் அன்னங்கை வீதியில் உள்ள இராணுவ நிலைப் பகுதி மீது வியாழன் அதிகாலை தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இத்தாக்குதலில் இருபடையினர் உயிரிழந்ததாகவும் மற்றும் சிலர் காயமுற்றதாகவும் அப்பகுதியில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை அடுத்து அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டதாகவும், சிலர் நையப்புடைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (உ)

### மன்னார் சென்றனர்

மன்னாரிலிருந்து அகதிகளாக தமிழகம் நோக்கிச் செல்கையில் கடந்த மாதம் 6ஆம் திகதி ஊர்காவற்றுறைக் கடலில் வைத்துக்கைது செய்யப்பட்டு, பின்னர் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் விடுவிக்கப்பட்டவர்களில் 7 பேர் நேற்று கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பினர் இவர்களை நீதிமன்றத்தில் பொறுப்பெடுத்து பராமரித்த பின்னர், நேற்று கப்பலில் அனுப்பி வைத்தனர், (உ)

### பிடிபட்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் ஆள்கள் இல்லாத வீட்டில் சிற்றுகள், ஓடுகள், நிலைகள், கதவுகள் போன்றவற்றை கழற்றி லொறி ஒன்றில் ஏற்றிக் கொண்டிருந்த சிலரை தாங்கள் கையும் மெய்யுமாகப் பிடித்திருப்பதாக ஈ.பி.டி.பியின் யாழ் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கைப்பற்றிய பொருள்கள் இன்று யாழ் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்படும் என்றும்—

இவ்வாறு ஆள்கள் இல்லாத வீடுகளில் இருந்து பொருள்களைத் திருடும் நடவடிக்கைக்கு சில பொலீஸாரும் உடந்தையாக இருந்தது தெரியவந்துள்ளது என்றும்—

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

### சிட்னியில் உண்ணாவிரதம்

மணிலா, ஜூன் 14

திருப்பியனுப்பவென ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள குடிவரவு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 70 தமிழ் இளைஞர்கள் தங்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது எனக் கோரி நேற்று முன்தினம் முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (உ-3)

### கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி

கோப்பாய் கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் இன்று காலை 9 மணிமுதல் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி மைதானத்தில் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளன. பிரதம விருந்தினராக வலயம் — 2 கல்விப் பணிப்பாளர் சி.சிவராசாவும், சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையாவும் கலந்து கொள்வர். (ஐ)

### விசேட பரீட்சை

உள்ளூராட்சித் திணைக்கள எழுதுவினைஞர்களைத் தரம் உயர்த்துவது தொடர்பாக இன்றும் எதிர்வரும் 28 ஆம் திகதியும் கொழும்பில் நடைபெற ஏற்பாடாகியுள்ள பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் —

யாழ்ப்பாணத்திலிருந்து தோற்றுவோருக்கு என பின்னர் அறிவிக்கப்படும் ஒரு தினத்தில் இப் பரீட்சை விசேடமாக நடத்தப்படும் என்றும் —

தமது கொழும்பு அலுவலகத் தகவல்களை மேற்கோள் காட்டி ஈ.பி.டி.பி.யின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### நுணாவிலில் கண்ணிவெடி!

நுணாவில் கண்டி வீதியில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த டிரக் வண்டி ஒன்று சிக்கிச் சேதமுற்றது.

டிரக்கில் சென்ற சிப்பாய்கள் சிலர் இறந்திருக்கலாம் அல்லது காயமுற்றிருக்கலாம் எனக் கருதப்பட்டது.

இச்சம்பவத்தின் போது வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த — திருநெல்வேலியைச் சேர்ந்த — சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம் (வயது 58) என்பவர் காயமடைந்தார். யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க மேற்பார்வையாளரான இவர் கடமை தொடர்பாக சென்று கொண்டிருந்த சமயமே காயமடைந்தார். (உ-15-117)

### 46 இலங்கையர் கைது!

டிரக் வண்டி ஒன்றில் அமைக்கப்பட்ட இரகசியப் பகுதியில்—தானிய மூடைகளால் மூடப்பட்டு—ஒளிந்த நிலையில் ஒப்ரோனில் இருந்து போலந்துக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற 46 இலங்கைப் பிரசைகளை போலந்து எல்லைக் காவல் படையினர் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். பஸ் நிலையத்திலிருந்து நயினாதீவுக்கு விசேட பஸ்சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

நயினாதீவு அம்பாளைத் தரிசிக்கச் செல்லும் பக்தர்களின் வசதியை முன்னிட்டு இன்று முதல் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்தே விசேட பஸ்கள் சேவையில் ஈடுபடும் என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி.எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

இதுவரை முற்றவெளியில் இருந்தே நயினாதீவுக்கான விசேட பஸ் சேவை இடம் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

நயினாதீவுக்குச் செல்லும் பயணிகளிடம் இருந்து பண்ணை இராணுவ சோதனை நிலையத்தில் வைத்து அடையாள அட்டை பெறப்பட்டு, விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என்றும் —

மீண்டும் நயினாதீவில் இருந்து திரும்பும் போதுஅதே இடத்தில் வைத்து தேசிய அடையாள அட்டை மீள வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த விசேட பஸ் சேவையில் செல்லும் பயணிகள் இடையில் இறங்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நயினாதீவுக்குச் செல்லும் பயணிகள் குறிக்காட்டுவானுக்கு வழமையான சேவையில் ஈடுபடும் பஸ்களில் செல்ல வேண்டாம் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

### மனித...

(முதலாம் பக்கத் தொடர்)

மிழைக்கும் படையினரைத் தண்டிப்பதற்குப் பதிலாக அக்குற்றங்களை மூடிமறைப்பதையே இராணுவ அதிகாரிகள் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

புலிகளின் தாக்குதல்கள் முடிவடையும் போது பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் படையினரால் காயப்படுத்தப்படுகின்றார்கள்; அல்லது கொல்லப்படுகின்றார்கள்.

படையினர் அப்பாவிப் பொதுமக்களை தாக்கச்செய்யும் வகையில் அவர்களைத் தூண்டும் அல்லது சீண்டும் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடத்தி வருகின்றார்கள்.

சாமானியப் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடும் வகையில் படையினரும் போராளிகளும் தத்தமது எதிரிகளைக் கொன்று அவர்களின் தலையை அல்லது சடலங்களை பொது இடங்களில் பார்வைக்கு வைக்கின்றார்கள்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றமிழைக்கும் படையினருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்தல், சிப்பாய்களின் தவறுகளுக்கு அதிகாரிகளைப் பொறுப்பாக்குதல், குடாநாட்டுக்கு சுதந்திரமாக பத்திரிகையாளர் சென்றுவர அனுமதித்தல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி இந்த அறிக்கை சிபாரிசு செய்துள்ளது. (உ)

### கலாமன்றத்தில் கலை மாலைப் பொழுது

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும் கலை மாலைப் பொழுது இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வாக மன்ற அரங்கில் மாலை 5.30 மணிக்கு கவிஞர் யாழ். ஜெயம் எழுதிய ''சிந்தை இனிக்கும் செல்வம்'' நூல் வெளியீடும், கவின் கலைகள் பயிலகம் வழங்கும் இசை அரங்கும் நடைபெறும்,

நாளைய நிகழ்வாக கலை நிகழ்ச்சிகளும், ''சாகாத மனிதம்'' நாடகமும் இடம் பெறும். (ஐ)


★ தியாகராஜாபாகவதர் காலத்துப் பாடல்கள் தொடக்கம் இன்று வரையான சகல திரைப்படப் பாடல்களையும்,

★ காலத்தால் அழியாத தேன் ததும்பும் சகல பக்திப் பாடல்களையும்,

★ சகல இசையமைப்பாளர்களின் வாத்திய இசைகளையும்,

★ நவீன கொம்பியூட்டர் முறையில் வெளியான பழைய, புதிய பாடல்கள் மற்றும் பொப் பாடல்களையும்,

★ பழைய புதிய திரைப்படங்களின் கதை வசனங்கள், வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைகள்,

இவை அனைத்தினையும் ஒரே இடத்தில் உடனுக்குடன் பதிவு செய்து பெற்றுக்கொள்ள நீங்கள் என்றும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**சுப்பஸோ**

**வீடியோ ஓடியோ சென்ரர்**

(ரவி ஒளி கானம்)

இல: 100A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- எம்மிடம் புதிய ஓடியோ வீடியோ CD PLAYER கள், CD களும் விற்பனைக்குண்டு.

(சி/938)



சாவகச்சேரி லயன்ஸ் கழக

**கொடி வாரம்**

14-06-97 முதல் 21-06-97 வரை

நற்பணிக்கு உதவ வாரி வழங்குவீர்!

(சி/933


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

சஞ்சீவி
சஞ்சிகை
14 - 06 - 1997 சனிக்கிழமை

விநோ நகைப் பூங்கா
தங்க, வைர நகை வியாபாரம்
185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
22 கரட் தங்க நகைகள்
குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
(சி/862)

## கருத்துக் கலசம்

### ஆலயங்களைத் திறக்குக!

வடக்கில் உள்ள பல ஆலயங்கள் பூசை வழிபாடு இன்றி பூட்டிக்கிடக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வழமை நிலையை — இயல்பு வாழ்க்கையை— கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது. ஆனால் பூட்டிக் கிடக்கும் ஆலயங்களில் மக்கள் வழிபாடு இயற்றுவதற்கு இன்னும் வசதி செய்யப்படவில்லை. குடாநாட்டில் மட்டும் இதற்கு உதாரணமாக சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலையும், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தையும் எடுத்துக் காட்டலாம்.

பூட்டிக் கிடக்கும் ஆலயங்களில் பூசைகள் மற்றும் திருவிழாக்களைத் தொடங்குவதற்கு அரசாங்கத்தின் அனுமதியை எதிர்பார்த்து நிற்கும் நிலையே தொடர்கிறது.

இது எந்த வகையிலும் நியாயமும் அல்ல; ஆரோக்கியமானதும் அல்ல. மக்களின் வழிபாட்டுஉரிமை அவர்களது மிக முதன்மையான அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று. அந்த உரிமையை அவர்கள் மிக நீண்டகாலமாக அனுபவிக்க முடியாமல் தடுப்பது மிகப் பாரதூரமான ஒன்றாகும்; பெரிய குற்றமுமாகும்.

அரசாங்கம் தனது செயலைச் சரிப்படுத்துவதற்கு, நியாயப்படுத்துவதற்கு, பல காரணங்களைக் கூறலாம். ஆனால் அவ்வாறு காரணம் கூறிக்கொண்டு இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் குடாநாட்டு மக்களின் வழிபாட்டுரிமையைப் பறித்துக் கொண்டிருக்கப் போகிறது?

பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு இத்தகைய கதி நேர்ந்தால் அரசு இவ்வாறு அசமந்தமாக இருந்து காரணங்களைக் கூறிக்கொண்டே காலத்தைக் கடத்துமா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

சிறுபான்மை இன மக்களின் வழிபாட்டு உரிமையைப் பறிப்பதால் நட்டம் எதுவுமில்லை என்ற எண்ணம் அரசுக்கு இருக்கக் கூடாது. ஆலயங்களைத் திறப்பது அறநெறி ஆட்சிக்குச் சிறப்பு.

இது விடயத்தில் மனதூன்றிக் கருத்தில் எடுத்து, குடாநாட்டில் உள்ள ஆலயங்களில் பூசை, வழிபாடுகள், பிரார்த்தனைகள் நடத்துவதற்கு வகை செய்ய வேண்டும்; வழி விடவேண்டும். அதில் உள்ள தடைகள், அசாத்திய நிலைகளை நீக்குவது அரசின் பொறுப்பாகும்.

குறிப்பு:

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ்செய்யுமாறே" என்று அருளியவர் திருமூலர் ஆவரர்.

சென்ற வாரம் வெளியான கருத்துக்கலசத்தில் தாயுமானவர் என்றிருந்தது தவறாகும்.

# இராமன் அழகை உவமிக்க இயலாது தோற்ற கம்பன்

அஞ்சனவண்ணன் இராமன் கற்போர் அனைவரதும் நெஞ்சகம் புகுந்தவன்; கற்போரால் மட்டுமன்றி காவியத்துள் உலாவரும் மற்றைய கதைமாந்தராலும் பெரிதும் விரும்பப்படுபவன்.

**'கண்ணினும் நல்லன், கற்றவர் கற்றிலாதவரும்**
**உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பர்'**

இஃது இராமன் பற்றிய வசிட்டனின் கருத்து.

வேட்டுவக் குகனோ,

**'அஞ்சன வண்ணன் என் ஆருயிர் நாயகன்'**

எனப் பேசுகிறான்.

**'காதல் எந்தன் உயிர் மேலும்**
**இக்கரியோன் பால் உண்டாம்'**

இது விசுவாமித்திரரின் கூற்று.

சார்ந்தார் மட்டுமன்றி பகைத்திறத்தாரும் இராமன் அழகில் ஈடுபடுவதாய்க் கம்பன் காட்டுகிறான். இராமனால் வீழ்த்தப்பட்ட வாலி,

**'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்'**

என அவனைப் புகழ்ந்துரைக்கிறான்.

இராவணன் கூட இராமனின் அழகில் மயங்கி, இவனைக் கண்ட சீதையின் கண்ணுக்கு,

**'நாய் எனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்'**

எனப் பேசுகிறான்.

இவ்வாறு, கற்போர் நெஞ்சமும் கதை மாந்தர் தம் கருத்துமன்றி காவியம் செய்த கம்பனும் இராமன்பால் மனதைப் பறி கொடுத்து, மயங்கி நிற்பதாய ஓர் இடமுண்டு. அம்மயக்கத்தை வெளிப்படுத்தும் பாடல் அற்புதமானது. இப்பாடல் காண்போம்.

> **இக்கட்டுரையின் மூலக்கரு கம்ப கலாநிதி அமரர் பேராசிரியர் இரா. இராதாக்கிருஷ்ணனின் சிந்தனையில் தோன்றியது. அதற்கு எழுத்துருக் கொடுத்து அழியா அழகாய் வார்த்தெடுத்துத் தந்திருக்கின்றார் அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளரான கம்ப வாரிதி இ. ஜெயராஜ்.**
>
> **வானதி பதிப்பகம் அண்மையில் வெளியிட்ட — இ. ஜெயராஜின் ஆக்கத்தில் உருவான—'அழியா அழகு' திறனாய்வு நூலின் நுழைவாயிலாக இருப்பது இக்கட்டுரைதான்.**

★ ★ ★

கைகேயி வரத்தின்படி காடேகப் புறப்படும் இராமனைத் தொடர்ந்து அயோத்தி மக்களனைவரும் செல்கின்றனர். இரவு ஊர் எல்லையில் மக்கள் தங்கிவிட சுமந்திரனை நாடேக உத்தரவிட்டு சீதை இலக்குவரோடு காட்டுள் புகுகிறான் இராமன். சூரியோதயம் நிகழ்கிறது. இஃது, கம்பன் இராமன்பால் மயங்கியதான பாடல் பிறக்கும் சூழல்.

★ ★ ★

காலை வெயில் இராமன் மேனியில் படர சீதையோடும் இலக்குவனோடும் இராமன் நடந்து போகும் காட்சி கம்பன் மனதில் விரிகிறது. இராமன்பால் தன்னைப் பறி கொடுத்த கம்பன் சூரியன், இராமனைச் சுடுவது கண்டு தவிக்கிறான். சூரியன்மேல் கோபம் பிறக்கிறது. நல்ல பொருள் தரும் பெயர்கள் பல இருக்கவும் 'கொடியோன்' எனப் பொருள்படும் பெயரைத் தேர்ந்தெடுத்து சூரியனை விளிப்பதன் மூலம் தன் கோபத்தை வெளிப்படுத்துகிறான். பாடல் தொடங்குகிறது.

**'வெய்யோன்.........'**

அம்மானதக் காட்சியை மேலும் கூர்ந்து நோக்குகிறான் கம்பன். வாடிய அவன் உள்ளம் மகிழ்கிறது. இராமன் மேனியைத் தீண்டியவான, சூரியக் கதிர்கள் இராமன் மேனியிலிருந்து எழுவதான சோதியில் ஆற்றல் இழந்து அழிந்து போகின்றன. இராமனின் மேனி ஒளி சூரிய ஒளியை உள்வாங்கிவிட, 'தோற்றனன் சூரியன்' என மகிழ்கிறது கம்பன் மனம். கவிதையின் முதலடியை நிறைவு செய்கிறான். இவ்வடியில் சூரியக்கதிரை ஒளியென்றும் இராமன் மேனி ஒளியைச் சோதியென்றும் ஒன்றான ஒளியினை வேறுபடுத்திச் சுட்டும் கம்பன் சொற்றிறம் கவனிக்கத் தக்கது.

**:வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய'**

கம்பன் மனதில் தொடர்ந்தும் அக்காட்சி விரிகிறது. சூரிய ஒளியை வென்று நடக்கும் இரமன் பின் சொல்கிறாள் சீதை. பெண்மை இலட்சணங்கள் அத்தனையும் பொருந்தியவள். அவள் மென்பாதங்கள் கானகத்தின் வெம்மை தாங்காது தடுமாறுகின்றன. அத்தடுமாற்றத்தால் அவள் மெல்லிடை அசைகிறது. அசையும் அவள் இடை கண்ட கம்பன் மனதில் ஓர் ஐயம். இம்மெல்லியளுக்கு இடை உண்டா? இல்லையா? தெளிவு பெறமுடியாத கம்பன் தன் ஐயத்தை வெளிப்படுத்தி கவிதையின் அடுத்த அடியையும் ஆரம்பிக்கிறான்.

**'பொய்யோ எனும் இடையாளொடும்'.........'**

அடுத்து தொடர்ந்து செல்லும் இலக்குவனை காண்கிறது கம்பன் மனம். அவன் இராமனுக்கு இளையான். தன் துன்பம் பாராது, கண் துஞ்சாது, இராமனுக்குத் தொண்டாற்றுவதிலும் இளையாதவன். இவ்விரு கருத்தும் தோன்ற இலக்குவனை 'இளையான்' எனச் சுட்டி கவிதையின் இரண்டாம் அடியைப் பூர்த்தி செய்கிறான்.

**'வெய்யோன் ஒளி தன் மேனியின் விரி சோதியில் மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும்**
**போனான்'**

மீண்டும் கம்பன் பார்வை இராமன் மேற்படுகிறது. அவனழகு கண்டு மயங்குகிறான். தான் அனுபவித்த இராமனழகை மற்றவர்களையும் அனுபவிக்கச் செய்ய கம்பன் கவியுள்ளம் விழைகிறது. அத்தெய்வீக அழகை விவரிக்கச் சொற்களைத் தேடுகிறான். சொற்களுள் அடங்கிடுமா அவ்வழகு? தன் இயலாமையை நேர் செய்ய உவமைகளைச் சரணடைகிறான். பொருத்தமான உவமைகளைத் தேடி, ஆராய்கிறது அவன் மனம். இராமனோ, கரிய செம்மல். கண்டார் கண்களைக் குளிரச் செய்பவன். கருமையும் குளிர்மையும் பொருந்தியதோர் உவமானம் இவனழகை வெளிப்படுத்தும் என எண்ணி இவ்விரண்டும் பொருந்தியதான 'மையினை' அவனழகுக்கு உவமையாக்குகிறான். மூன்றாம் அடியின் முதற்சொல் பிறக்கிறது.

**'மையோ.........'**

கம்பனுக்குத் திருப்தியில்லை. குளிர்மையும் கருமையும் உடையது எனினும் 'மை' அழிந்து போகக் கூடியது. இராமன் அழகோ காலங்கடந்து நிலைக்கப் போவது. கண்ணிலன்றி வேறெங்கு இட்டாலும் கறையாய்த் தோன்றக் கூடியது மை. எவ்விடத்தும் பொருந்தி அழகு தருபவன் இராமன். இராமன் அழகை உவமிப்பதில் மையின் இயலாமை தெரிய வேறு உவமையைத் தேடத் தொடங்குகிறான்.

அசையாத திண்மை உடையவன் இராமன்; பச்சை வண்ணன்; மற்றவர்களால் விரும்பப்படுபவன். இராமனின் இவ்வியல்புகள் மனத்து உதிக்க, இதே இயல்புகள் பொருந்தி நிற்கும் மரகதக் கல்லை உவமையாக்கி கவிதையின் அடுத்த சொல்லைச் சேர்க்கிறான்.

**'மையோ, மரகதமோ.........'**

கம்பனுக்கு இப்போதும் திருப்தியுண்டாகவில்லை. உவமையின் பொருத்தமின்மையை அறிவு எடுத்துக் காட்டுகிறது. திண்மை மட்டுமன்றி மென்மையும் உடையவன் இராமன். திண்மை மட்டுமே உடையது மரகதக் கல். மதிப்பிட முடியாத பெருமை கொண்டவன் இராமன். மதிப்பிடக்கூடியது மரகதம். இராமன் நல்லாரை மட்டும்

**இலக்கியம்**

சார்ந்து நிற்பான். தீயார் கையிலும் சேரக்கூடியது மரகதம். இவ்வுவமையையும் கம்பனது அறிவு நிராகரிக்க மீண்டும் தேடல் தொடர்கிறது.

இராமன் நீலவண்ணன்; அளவிடமுடியாத பெருமை கொண்டவன். நற்குணங்களான செல்வங்களைத் தன்னகத்து அடக்கியவன். கடலும் நீலவண்ணம் உடையது; அளவிட முடியாதது; கடல்படு திரவியங்களைத் தன்னகத்தடக்கியது. பொருத்தங்கள் வெளிப்பட மகிழ்ந்த கம்பன் கடலை உவமையாக்கி கவிதையைத் தொடர்கிறான்.

**'மையோ மரகதமோ மறிகடலோ.........'**

இப்போதும் திருப்தியுற மறுக்கிறது கம்பன் மனம். ஆரவாரத் தன்மை கொண்டது அலைகடல். இராமனோ அடக்கமானவன். உவர்ப்பானது அலைகடல். இராமனோ அனைவர்க்கும் இனியவன். அச்சமூட்டுந் தன்மை அலைகடற்கு உரியது. இராமனோ, அச்சம் தீர்த்து ஆட்கொள்பவன். கடலுவமையும் தோற்றுப்போக, மீண்டும் புதிய உவமை தேடுகிறது கம்பன் மனம்.

இராமனின் உத்தம குணங்கள் அவன் மனதில் வரிசைப் படுகின்றன. வேறுபாடின்றி அனைவர்பாலும் கருணை பொழிபவன் இராமன்; மேலிருந்து கீழ்வந்த அவதார புருஷன்; சென்ற இடமெல்லாம் செழிப்புத் தருபவன். இத்தனை இயல்போடும் கருமை நிறமும் பொருந்த மழைமுகிலே இராமனுக்குத் தக்க உவமை எனக்கொண்டு கவிதையைத் தொடர்கிறான்.

**'மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ'** ......

இவ்வுவமையையும் மறுக்கிறது கம்பன் மனம். வேண்டுவார்க்கு வேண்டும் இடத்தில் பயன் தராதது மழை. இராமனோ அதற்கு மாறுபட்டவன். காலந்தவறிப் பெய்து நல்ல பயிர்களையும் அழிக்க வல்லது மழை. இராமனோ நல்லார்க்குத் தீங்கிழையாதவன். காலம் வகுத்துப் பெய்வது மழை. இராமனோ எல்லோர்க்கும் எக்காலத்தும்

(Xஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

## நீதிக்கதை

ஒரு நாள்.........

ஒரு கொழுத்த சுண்டெலி. குடிசையின் இடுக்கில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும் ஒரு மூடையின் அடிப்பகுதியைக் கடித்துக் குதறியது. மெது மெதுவாக அதிலிருந்து வெளிவந்த வேர்க் கடலையை வயிறு முட்டத் தின்றபின்னர்.....

குடிசையை விட்டு வெளியேறி குதித்துத்தாவி ஓடியது.

குடிசைக்குப் பின்னாலே ஒரு சிறிய குளம். அக் குளத்துக்குப் பக்கத்திலே ஒரு புளிய மரம். அதற்குப் பக்கத்தில் பெரிய கற்பாறை.


பாறாங்கல்லுக்கு அடியில் செடியும், கொடியுமாய் புதருக்கிடையில் ஒரு வளை. அதுதான் அதன் இருப்பிடம்.

அந்த வளையை அணுகியதும்......

சுண்டெலி திடுக்கிட்டது. ஒரு பெரிய மலைப்பாம்பு.

உடலை வளைக்குள்ளும் தலையை வளையின் வாசலிலும் வைத்துப் படுத்திருந்தது. என்ன செய்வது எனத் தெரியாது திகைத்த சுண்டெலி சிறிது நேரம் தயங்கியபின்பு, ''ஏய்! மலைப்பாம்பே! நான் பாடுபட்டுத் தோண்டி வைத்திருக்கும் வளைக்குள்ளே உனக்கென்ன வேலை? மரியாதையாய் வளையை விட்டு வெளியே போய்விடு!''—என்று மிரட்டியது.

மலைப்பாம்பு சுண்டெலியைப் பார்த்து, மெல்ல நெளிந்து, தலையைத் தூக்கி, நாக்கை நீட்டி,



இழுத்து, ''ச்சு'' ''ச்சு,, என்று சத்தமிட்டபடி ''இப்போது தான் ஒரு முயலை விழுங்கிய களைப்பில் படுத்திருக்கிறேன். வீணாகத் தொந்தரவு செய்யாதே! முயல் ஜீரணித்த பின்புதான் வளையை விட்டுப் போவேன்.'' என்றது.

இதைக் கேட்டதும்—

சுண்டெலிக்கு ஆத்திரம் பொங்கியது. வாயைத் திறந்து ஏதோ சொல்ல முயன்றது. அதற்குள்—

வேர்க்கடலையைத் திருடித் தின்ற குடிசைக்குள்ளிருந்து, தடியும், அரிவாளுமாக இரு சிறுவர்களும் ஒரு வாலிபனும் கோபத்துடன் ஓடிவந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும்—

சுண்டெலிக்கு விஷயம் புரிந்தது. வந்தவர்கள் எப்படியும் பாம்பை அடிப்பார்கள்.

நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

அடுத்த விநாடி—

வளையை நோக்கி வரும் வாலிபனையும், சிறுவர்களையும் பார்த்துத் திடுக்கிட்டு நடுங்கியது மலைப்பாம்பு.

வளைக்குள் ஒளிக்கப் பார்த்தது. முடியவில்லை.

அப்போது ஓர் உரையாடல் கேட்டது.

''டேய்! வேர்க்கடலையைத் தின்னிற சுண்டெலி இந்த வளைக்குள்தான் வசிக்கிறது. எடுத்துவா தடியொன்று. நன்றாக அடித்து நொருக்கி விடுவோம்.''

''இல்லை, இல்லை. நன்றாக இடித்து நொருக்கி விட்டு, மண்ணெண்ணெய் ஊற்றிக் கொழுத்த வேண்டும்.''


''அப்படியே தான் செய்வோம்.''

சொன்னபடி செய்தார்கள். பாம்பு செத்து மடிந்தது. சுண்டெலி சந்தோஷம் கொண்டாடியது.

ஒருநாளும் அடுத்தவன் வாழ்வைக் கெடுக்க நினைக்கக் கூடாது. மற்றவர்களுடைய வாழ்வைப் பறிக்கக் கூடாது. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'' என்பதை அறிந்து நடத்தல் வேண்டும்.

★

**- சி. சத்தியா -**




## புதிர்க் கணக்கு; பதில் கூறுங்கள்!

அன்புத் தம்பி, தங்கையரே!
இந்த வாரம் உங்கள் மூளைக்கு வேலை. ஒரு புதிர்க் கணக்கு. விடை கண்டு பிடிக்கின்றீர்களா? பார்ப்போம்.

ஒரே மாதிரியான 27 பந்துகள் உள்ளன. அவற்றில் ஒன்று மட்டும் நிறை கூடியது. ஆனால் அது எந்தப் பந்து என்று தெரியாது. வழக்கமாகக் கடைகளில் இருக்கும் இரட்டைத் தட்டுத் தராசு, படிகள் போன்றவற்றை உங்களிடம் தந்தால் மூன்றே மூன்று தரம் மட்டும் நிறுத்து நிறை கூடிய பந்து எது என்பதை உங்களால் கண்டு பிடிக்க முடியுமா? முடியுமானால் எப்படி?

## புதிர்க் கணக்கு: விடை இதோ!

அருகில் உள்ள புதிர்க் கணக்குக்கு விடை இதோ:-

27 பந்துகளையும் ஒன்பது, ஒன்பதாக — மூன்று குழுக்களாக — பிரியுங்கள். அவற்றில் ஒரு குழுவை தராசின் ஒரு தட்டிலும், மற்றைய ஒரு குழுவை மற்றைய தட்டிலும் போட்டு முதல் தடவையாக நிறுங்கள். நிறை கூடிய பந்து இந்த இரண்டு குழுக்களில் எதில் உள்ளதோ அத்தட்டு தாழும். அப்படி இல்லாமல் — தராசுத் தட்டில் போடப்படாத — மூன்றாம் குழுவில் நிறை கூடிய பந்து இருக்குமாயின் தராசுத் தட்டு சமனாக நிற்கும். எனவே முதல் தடவையிலேயே நிறுப்பதன் மூலம் நிறை கூடிய பந்து எந்தக் குழுவில் உள்ளது என்பதைக் கண்டுபிடித்து விடலாம்.

அந்தக் குழுவில் உள்ள ஒன்பது பந்துகளையும் எடுத்து அவற்றை மூன்று பந்துகள் கொண்ட புதிய மூன்று குழுக்களாக மீண்டும் பிரியுங்கள்.

மீண்டும் முதல் தடவை நிறுத்ததுபோல் இரண்டாம் தடவையும் நிறுத்து, மூன்று பந்துகளைக் கொண்ட எந்தக் குழுவில் நிறை கூடிய பந்து உள்ளது எனக் கண்டு பிடிக்கலாம்.

அந்த மூன்று பந்துகளையும் எடுத்து அவற்றைத் தனியன்களாக்கி முன்னையது போன்று மூன்றாவது தடவையும் நிறுக்கவும். இந்த மூன்று பந்துகளில் ஒன்றை ஒரு தட்டிலும் மற்றைய ஒன்றை மற்றொரு தட்டிலும் போடுங்கள்.

தராசுத்தட்டு ஒன்று கீழே தாழ்ந்தால் அதில் உள்ள பந்தே நிறை கூடியது. அப்படி இல்லாமல் தராசுத் தட்டு சமனாக இருந்தால், மூன்றாவது தடவை நிறுக்கப்படாமல், வெளியே வைக்கப்பட்டிருக்கும் மூன்றாவது பந்தே நிறை கூடியது.

எவ்வளவு இலகுவான வழி முறை பார்த்தீர்களா?

## பப்பி



பப்பி பப்பி ஓடி வா!
பாய்ந்து பாய்ந்து ஓடி வா!

— பப்பி

பந்தை வாயில் கவ்வி வா!
விந்தை செய்ய ஓடி வா!
தம்பி குறும்பு செய்கின்றான்
தடி எடுத்து ஓடி வா!

-- பப்பி

வெம்பி அழுத தம்பியும்
விழுந்து விழுந்து சிரிக்கிறான்!
சும்மா சும்மா கத்தாதே
அம்மா வந்தா அடித்திடுவாள்!

— பப்பி

வாலை வாலை ஆட்டியே
ஏனோ குழைந்து நிற்கிறாய்?
காலைக் காலை நக்கியே
நன்றி சொல்லி வாழ்கிறாய்!

— பப்பி

நன்றி மறவாப் பழக்கத்தை
நாங்கள் உன்னிடம் கற்கிறோம்!
ஒன்று சேர்ந்து உண்மையாய்
ஓடிப் பிடிக்க ஓடி வா

பப்பி

ஸ்ரீ. குவலயா

## சஞ்சீவிக்கு கவிதார்ச்சனை

### துயரத்தைத் துடைப்பாய்!

பூவிதழ் விரியும் வேளை பொன்கதிர் வீசிமெல்ல
ஆவிதன் னோடுஒன்றி அருமருந் தாகஎங்கள்
பாவிநெஞ் சோடுகொண்ட பழுதெலாம் போக்கஎண்ணித்
தாவியே எம்மைச்சேரும் தனயனே நீடுவாழி!

தேடிய செல்வமெல்லாம் திடுமெனப் போய்விட்டாலும்
நாடியே எம்மைநண்ணும் நற்றமிழ் போகவில்லை
ஆடிய காற்றிலிங்கு ஆர்வமாய் உயிர்க்குமுன்னைக்
கூடிய உறங்குகாலம் கூடுதல் வேண்டாமையா!

பள்ளியிற் படிக்கும்போது பரிவுடன் களமுந்தந்து
வெள்ளியாய்த் தமிழையிங்கு வளர்த்திட வைத்த உன்னை
அள்ளியே அறிவைத்தேடும் ஆர்வலர் ஆறுகின்றார்
துள்ளியே அச்சஞ்சீவி (த்) துயரதைத் துடைத்து நிற்பாய்!

— உடுவில் அரவிந்தன்—

### நித்திலமாய் வாழி!

எங்கே வாராது விடுவாயோ என
ஏங்கிய வாசக நெஞ்சங்களின்
கரங்களில் மீண்டும் தவழ்ந்து
களித்திட விரைந்து வருக! வருகவே !!

வாசமலராக மட்டுமல்ல என்றும்
வாடாதமலருமாய் வாரம் தோறும்
புத்தெழில் பூண்டு புனிதப் பணி
புரிந்திட வருக! வருகவே !!

புதுமைக்குப் புதுமையாய் தெவிட்டா
புதுக்கருத்துக் கருவூலங்களோடு
சிந்தை கவர்ந்து சீர்வழி காட்டிட
சிறப்புடன் வருக! வருகவே !!

பாலரோடு பலரும் விரும்பிடும்
பல்சுவை மிளிரும் சஞ்சிகையாய்
'சஞ்சீவியே' வண்ணப் பொலிவோடு
சிரஞ்சீவியாய் வருக! வருகவே !!

குன்றுத் தீபமாய் எப்போதும்
குன்றா நேர்மை நெறியோடு
நின்பணி நிலைத்து நிறைவோடு
நித்திலமாய் இம்மண்ணில் வாழியவே!

— க. தியாகராஜா —

### வாழ்க நீ சிரஞ்சீவியாக!

வருக! வருக!! சஞ்சீவியே வருக!!
வாழ்க நீ சிரஞ்சீவியாக!
உதயன் செங்கம்பளம் விரிக்க
ஊரெல்லாம் விழி விரிக்க
ஈழத்து வானில் உதயன் கதிரில்
வாரத்து மலராய் எம் ஊரெங்கும் மணம் பரப்பி
ஓ! மீண்டும் சஞ்சீவி வருக! வருக!!

புழுதி கிளம்ப புன்னகை தவழ
எம் மண்ணின் மணம் பரப்பி
தமிழ்க் கடலின் கருத்தள்ளி தெவிட்டாத தேன் அருவியாய்
காலத்தை வெல்லும் புதிய கருத்துக்களுடனே
காவியமாய் கவிபல கொண்டு வருக!
சஞ்சீவியே வருக! வருக!!

இளம் கலைஞர்களுக்குக் களம் அமைத்து
காலத்தின் இலக்கிய கண்ணாடியாய்
உன் முகத்தில் எம் முகம் பார்க்கும் கண்ணாடியாய்
பூகோளமெங்கும் பூங்காற்றாய் எம் மண்ணின் மணம் பரப்ப

சஞ்சீவியே நீ வருக!
காலத்தால் அழியா சிரஞ்சீவியாய் நீ வாழ்க!!

— இராம ஜெயபாலன்

### புது விதி சமைப்பாய்!

புதுமையின் வடிவரணில்
அறிவுலகைப் பட்டை தீட்ட
புறப்படும் கருத்துக்களமே!

மொழிக் கடலின்
ஆழ்புலத்தில் விளையும்
இலக்கிய முத்துக்களை
வாசக நெஞ்சங்களில்
கரையேற்றும் அதிரலையே!

நீதியின் கருவறையில்
தோன்றும் அமைதித் தென்றல்
தமிழ் மண்ணைத் தழுவ
நில மகள் சிந்தும் தேன் நதியே!

இலக்கிய வயலின்
அறுவடைகளைச் சுமந்து
இதழ் விரிக்கும்
உதயனின் வாரப் பிரசவமே!

உன் வாடா வதனம்
வாசக இதயக் கண்ணாடியில்
என்றும் முழு நிலவாய்
முகம் புதைக்கும்!

நடுநிலைமை
அரவணைக்க, பத்திரிகா
தர்மப் பாதையில்
நீண்ட அறிவியல் பயணம்
செய்யும் உதயன் முகிழ்த்த
உதய மலரே!

ஓ......!
சஞ்சீவி என்ற
இலக்கிய நதியே — உனது
இலட்சிய வேட்கை
காலத்தின் சவால்களை
கருவறுத்து புதியதோர்
விதி சமைக்கும்!

— வளலாய் ரஞ்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறமொழிச் சொற்களை தயக்கமின்றி உள்வாங்கி உயர்ந்த ஆங்கில மொழி!

ஆங்கில மொழியில் எத்தனையோ வகையான பிறமொழிச் சொற்கள் வழக்கிலுள்ளன. சொற்கள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை உள்வாங்கிக் கொள்ள ஆங்கிலம் தடங்கியதில்லை. ஆங்கிலத்தின் சிறப்பியல்புகளின் முக்கியமான பண்பு, அது பிறமொழிச் சொற்களைத் தனதாக்கிக் கொள்வதுதான். அந்தப் பண்பே மெல்ல மெல்ல வளர்ந்து இன்று ஆங்கிலத்தில் உள்ள சொற்தொகுதி பத்து லட்சமாக உயரக் காரணமாயிற்று. ஏனைய பிரதான ஐரோப்பிய மொழிகளுடன் ஒப்பிடும்போது, ஆங்கிலச் சொற்தொகுதி அதிகமாகும்.

அதே வேளையில் பிறமொழிச் சொற்கள் தம்மை வந்தடைவதைப் பிரான்ஸ் நாட்டவர் விரும்புவதில்லை. குறிப்பாக ஆங்கிலச் சொற்கள் பிரெஞ்சுடன் கலந்தால் அவை தமது மொழியைச் சிதைத்து விடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். பிறமொழிச் சொற்கள் நுழையாமல் பிரான்ஸ் நாட்டு இலக்கணப் புலவர்கள் அணைபோட்டுக் கொள்வதால், பிரெஞ்சு மொழி சொற்தொகுதி 75,000 அளவில் முடங்கி விட்டது.

பிரான்ஸ் அரசும் மொழித் தூய்மையை விரும்புகின்றது. பிறமொழிச் சொற்களின் பாவனையைத் தவிர்ப்பதை அந்நாட்டு ஆட்சியாளரும் வழக்கமாக் கொண்டுள்ளார்கள். Jumbo Jet (ஜம்போ ஜெட் விமானம்) என்ற சொல் இதற்கு நல்ல உதாரணமாகும். அதற்குப் பதிலாக பிரான்ஸ் அரசு Gros porteur என்ற சொல்லைஉருவாக்கியுள்ளது. walkman என்ற சொல்லிலும் பிரெஞ்சுக்காரர்களுக்கு விருப்பமில்லை. அவர்கள் அந்தச் சொல்லுக்கு மாற்றாக balladeur என்ற சொல்லை அறிமுகப் படுத்தியுள்ளார்கள்.

இன்னொன்று, walkman ஆங்கிலச் சொல் என்றும் அடித்துச் சொல்லிவிட முடியாது. இக்கருவியை உருவாக்கிய ஜப்பானிய நிறுவனம் Walk மற்றும் Man என்ற இலகுவான இரு சொற்களை இணைத்து Walkman என்ற சொல்லை உருவாக்கியது. ஆங்கிலேயர் அச்சொல்பற்றி அதிகமாக அலட்டிக்கொள்ளவில்லை. இங்கிலாந்தில் Walkman வாழும் சொல்லாகவே உள்ளது. ஆனால் பிரான்ஸ் நாட்டவர் அதனை ஏற்க மறுத்தனர். இவ்வாறான பல உதாரணங்களை ஒரு பட்டியல் போடலாம்.

## உலக மொழி

இப்போது மட்டுமல்ல எப்போதுமே ஆங்கிலம் கொண்டும் கொடுத்தும் உலகமொழியாக வளர்ந்து வந்துள்ளது. உலகப் பார்வையும் அதனில் பதிந்துள்ளது. சிறிய தீவொன்றில் பேசப்படும் மொழி, உலகமொழி என்ற அந்தஸ்தை எவ்வாறு எட்டியது?

ஆரம்பப்பள்ளிகளில் சொல்லித் தரப்படும் ஆங்கிலச் சொற்கள் சில தனித்துவங்களைக் கொண்டுள்ளன. தன்னைச் சுட்டுவதற்கு I, me என்றும், பிறரைக் குறிப்பதற்கு You, his என்றும் சொல்லித் தரப்படுகிறது. உடலுறுப்புகளை eye, nose, mouth என்றும் உணவை food என்றும் கூறுகின்றோம். இச்சொற்கள் பழைய ஆங்கில (Old English) அல்லது அங்லோ— சக்ஸன் (Anglo—Saxon) சொற்களாகும். ஆங்கில மொழியின் அடிப்படையே அங்லோ— சக்ஸன் சொற்கள்தான்.

பத்திரிகைச் செய்தி எழுத்து நடையிலும் House, Friend, Land, Drunkஎன்றசாதாரண அங்லோ — சக்ஸன் சொற்களே வழங்கப்படுகின்றன. இச்சொற்கள் ஒவ்வொன்றும் ஆங்கிலத்தில் எளிதாகஎழுதப் படிக்கக் கூடியவற்றுள் மிகவும் எளிதானவை. இச்செற்களுக்கு முறையே ஒத்த கருத்துடைய Domicile, Aquain—tanee, Nation, Inebriated என்ற கடினமான சொற்களைத் தவிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். 1890—களில் இங்கிலாந்தில் அல்பேட் ஹாம்ஸ் வேர்த்தும், அமெரிக்காவில் வில்லியம் றான் டெல்வும் பத்திரிகைச் செய்தி எழுத்து நடையில் எளிமையான சொற்களைக் கையாண்டார்கள்.

ஆங்கில மொழியின் வளர்ச்சிக்குச் சாதாரண அங்லோ— சக்ஸன் சொற்கள் ஆதாரமானவை என்று பெருமையாகக் கூறப்படுகிறது. அதிலும் சிறிய, தெளிவான, நேரிய சொற்களும் ஆங்கிலத்துக்குப் புதிய பரிமாணத்தைச் சேர்த்திருக்கின்றன. வின்சென்ட சேர்ச்சில், தான் வெளியிடத் துணிந்த கருத்தைச் செவ்வனே வெளியிடப் பேச்சு வழக்கில் உள்ள சாதாரண சொற்களையே பாவித்தார். ஆங்கிலத்தில் புலமை உள்ளவர்கள் — எவராயினும் — பேச்சில் அவர்களின் இப்பண்பினைக் காணலாம். இரண்டாவது உலக யுத்தம். ஹிட்லரின் படையணி ஆங்கிலக் கால் வாயைக் கடக்க முயற்சித்த சமயம். சேர்ச்சில் ஆங்கிலப்படையினருக்கு ஆற்றிய உணர்ச்சிபூர்வமான உரையில்—

We shall fight on the beaches; We shall fight on the landing grounds; We shall fight in the fields and in the streets; We shall fight in the hills. We shall never Surrender.''

ஆங்கிலேயரின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து விட்ட சாதாரண சொற்களைக் கொண்டு சேர்ச்சில் தனது பேச்சுக்கு உரமூட்டினார். வலிந்து குழப்பமான சொற்களைத் தேடிப்பிடித்து மற்றவர்களைக் குழப்பவில்லை. அந்த உரையில் Surrender என்ற சொல் மட்டும் பிரெஞ்சு வழி ஆங்கிலத்தில் கலந்து கொண்ட சொல்லாகும். அதற்குப் பதிலாக We Will not give in என்று பேசியிருக்கலாம். பிறமொழிச் சொற்களை இயைவாக்கிக் கொள்ளும் பக்குவம் ஆங்கிலேயரிடம் நிலவுவதால் தான், சேர்ச்சில் Surrender என்ற பிறமொழிச் சொல்லைத் தன் பேச்சில் கையாள முடிந்தது.

## ஜூலியஸ் சீஸர் காலம்

ஜூலியஸ் சீஸர் கி. மு 55 இல் இங்கிலாந்து மீது படையெடுத்த போது, அங்கு ஆங்கிலம் என்ற மொழியே இருக்கவில்லை. செல்றி இனத்தவர், இன்றும் அங்கு வழக்கிலுள்ள வெல்ஸ், பிரித்தன், கெலிக் ஆகிய மொழிகளையே பேசின[illegible] இவ் மொழிகளின் மூலம் யாது? சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் மொழிகளுக்கிடையே உறவு இருப்பதாக மொழியியலாளர் நிறுவியுள்ளனர். உதாரணத்துக்கு சமஸ்கிருதத்தில் தகப்பனைக் குறிக்கும் 'பிதா' என்ற சொல் pater என்று லத்தீன் மொழியில் வழங்கப்படுகிறது. கி.மு 3500க்கும் 2000 க்கும் இடைப்பட்ட காலத்தில் பேசப்பட்ட இந்தோ — ஐரோப்பிய மொழிகளில் இவ்வாறான பொதுமைகளைக் காணலாம்.

வட மத்திய ஐரோப்பாவில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரில் ஒரு தொகுதியினர் கிழக்கு நோக்கி இடம் பெயர்ந்து இந்தியாவில் குடியேறினர். இன்னுமொரு சாரார் மேற்கு நோக்கிப் பெயர்ந்து சீரான காலநிலை நிலவிய ஐரோப்பாவில் குடியமர்ந்தனர். இன்னும் சிலர் பிரித்தானியாவில் குடியேறினர். இவர்களைத்தான் பிரித்தானியாவுக்குள் ஊடுருவிய ஜூலியஸ் சீஸரும், படையினரும் சந்தித்தனர்.

## இனக்குழுக்களின் இட அசைவு

ஜேர்மனிய இனக் குழுமங்களின் இட அசைவுகளும் ஆங்கிலம் உலக மொழி என்ற தன்மையைப் பெற உதவி உள்ளன. இந்த இனக் குழுமங்களில் சில வட கடலைக் கடந்து பிரித்தானியாவுக்குள் பிரவேசித்தன. ஜூட்லாண்டில் (இன்றைய டென்மார்க்) இருந்து ஜூட்ஸ்களும், சக்ஸனியில் (ஜேர்மனி) இருந்து ஜேர்மனியரும் இங்கிலாந்தின் தெற்கில் குடியேறினர். சேர்ந்தாற் போல் ஜேர்மனியிலிருந்து ஏன்ஜெல்சும் இங்கிலாந்தின் வடக்கிலும், தெற்கிலும் தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர். இந்த இடநகர்வின் கூட்டுச் சேர்க்கைதான் அங்லோ— சக்ஸன் (Anglo — Saxon) சமூகம். இச்சமூகங்களின் விவசாயம் தொடர்பான சொற்களும் ஆங்கிலத்தை அழகுபடுத்துகின்றன. Sheep, Shepherd, Earth, Swine Work, Wood, Field, போன்ற சொற்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் போலும்: மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் laughter, glee, mirth ஆகிய சொற்களும் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவை.

> **பிறமொழிச் சொற்களை —அவை எங்கிருந்து வந்தாலும்—அவற்றை உள்வாங்கிக் கொள்ள ஆங்கிலம் தயங்குவதில்லை.**
>
> **அந்த மொழியின் இச்சிறப்பியல்பை ஆராய்கின்றார் இக்கட்டுரையாளர்.**

**- மதன் -**

## கிறிஸ்தவம் வளர்த்த ஆங்கிலம்

ஆங்கில மொழியின் சர்வதேசப் பரிமாணத்தில் கிறிஸ்தவ சமயம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. பாப்பரசர் கிரஹெறி சமயம் பரப்பும் நோக்குடன் சமயப் பிரச்சாரர்களை இங்கிலாந்துக்கு அனுப்பினார். அவர்கள் தமது சமயத்தையும், போதனைகளையும் விளக்குமிடத்து Angel, Disciple, Mass, Relie, Shrine, Psalm போன்ற சொற்களைக் கையாண்டனர். ஆங்கிலம் அச்சொற்களையும் ஏற்றுக் கொண்டது. மொழித் [illegible] ஆங்கிலம் அச்சொற்களை நிராகரிக்கவில்லை. இவ்வாறு அவ்வப்போது எல்லாமாகச் சுமார் 500 கிரேக்க மற்றும் லத்தீன் சொற்கள் ஆங்கிலத்துடன் சங்கமமாகின.

## கடற்கொள்ளையரின் பங்களிப்பு

ஸ்கன்டிநேவிய கடற்கொள்ளையரும் ஆங்கில மொழியின் வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளார்கள். அவர்கள் இங்கிலாந்தைச் சூறையாடியதுடன் தமது மொழியையும் தடம் பதித்திருக்கிறார்கள். Sk என்ற எழுத்துக்களுடன் ஆரம்பிக்கும் Sky, Skirt போன்ற பல சொற்கள் ஸ்கன்டிநேவிய நோர்ஸ் மொழி வழியாக ஆங்கிலத்துடன் இணைந்து கொண்டன. இதில் விஷேசம் என்னவெனில், பழைய நோர்ஸ்ஸும் ஆங்கிலமும் ஒன்றை ஒன்று அழிக்காமல் சமரசம் செய்து கொண்டன. ஆங்கிலத்தில் Rear a Child என்பது நோர்ஸ்மொழியில் Raise a child எனப்படுகிறது. இன்று rear மற்றும் raise ஆகிய இரு சொற்களும் சர்வசாதாரணமாக ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றன. இதே போன்று சமாந்தரமான கருத்துள்ள Wish — Want, Craft — Skill, Hide - Skin போன்ற சொற்களும் ஆங்கிலத்திற்கு அழகு சேர்க்கின்றன.

> **பத்து லட்சம் சொற்கள் ஆங்கிலத்தில் உள்ளன**

## நோர்மன் படையெடுப்பு

நோர்மண்டி அரசன் வில்லியம் (பிரான்ஸில் உள்ள நிலப்பரப்பு) 1066 இல் இங்கிலாந்தைக் கைப்பற்றிய போது, நோர்மானிய மயமாக்கம் இங்கிலாந்தில் ஏற்பட்டது. Curfew (ஊரடங்கு), Venison (மான் இறைச்சி) போன்ற நோர்மன் மொழிச் சொற்களை ஆங்கிலத்துடன் இணைந்து கொண்டன. மாட்டிறைச்சியை நோர்ஸிசில் beef என்றும் பிரெஞ்சில் boeuf என்றும் அழைப்பர். ஆங்கிலக் கவிஞர்களான தொமஸ் கிறேயும், வில்லியம் ஷேக்ஸ்பியரும் நோர்ஸ் சொற்களைத் தமது கவிதைகளில் கையாளத் தயங்கவில்லை.

சமயம், சட்டம், விஞ்ஞானம் மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் பொதுவாக லத்தீன் அல்லது பிரெஞ்சு மொழிச் சொற்களே எடுத்தாளப்படுகின்றன. இதற்கு உதாரணமாக Felony ,Perfury, Attorney, Bailiff, Nobility ஆகிய சொற்களாகக் குறிப்பிடலாம். Juryஎன்ற சொல்லும் நோர்மன் Juree என்ற சொல்லின் அடியாகவே ஆங்கிலத்தில் புகுந்தது.

நோர்மனியர் இங்கிலாந்தை ஆண்ட காலத்தில் இங்கிலாந்தில் மூன்று மொழிகள் வழக்கில் இருந்தன. உயரிகள் பிரெஞ்சு மொழியைப் பேசினார்கள். லத்தீன் தேவாலய மொழியாக இருந்தது. ஆங்கிலம் பட்டி தொட்டிகளில் பேசப்பட்டது. மூன்று மொழிகளின் கலப்பினாலும் ஒரு சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள பல சொற்கள் உருவாகின. Kingly என்ற அங்லோ—சக்ஸன் சொல்லுக்கு இணையான Royal, Regal, Sovereign என்றசொற்கள் பாவனைக்கு வந்தன. இவ்வாறான சொற்களை ஆங்கிலம் உதறவில்லை. மொழிக் கலப்பினால் ஆங்கிலம் அழியவும் இல்லை. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளில் 10,000 பிரஞ்சுமொழிச் சொற்களை ஆங்கிலம் தன்னுடன் இணைத்துக் கொண்டு வளர்ந்தது. இவ்வாறு வளர்ச்சியடைந்த ஆங்கிலத்தையே Middle English என்பர்.

## மறுமலர்ச்சிக் கலாசாரம்

கூடன்பேர்க் ஜெர்மனியில் அசையும் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து 1476- இல் வில்லியம் கக்ஸ்ரன் இங்கிலாந்தில் அச்சுக்கூடத்தை நிறுவினார். இதன்விளைவாக மறுமலர்ச்சிக் கலாசாரம் இங்கிலாந்திலும் பரவியது. கிரேக்க, ரோம நூல்கள் ஆங்கிலமாக்கப்பட்டு அச்சுவாகனம் ஏறின. இதனைத் தொடர்ந்து கிரேக்க, ரோமச் சொற்கள் ஆங்கிலத்துடன் இணைந்தன. Agile, Capsule, Habitual போன்ற லத்தீன் சொற்களும், Catastrophe, Lexicow, Lexicow Thermo-meter போன்ற சொற்களும் இவ்வகையைச் சார்ந்தவை.

மறுமலர்ச்சியுடன் விஞ்ஞானமும் முன்னேறியது. புதிய கண்டுபிடிப்புகளின் பயனாகப் புதிய சொற்களின் உருவாக்கம் அவசியமாயிற்று. Atmosphere, Pneumonia, Skeleton போன்ற சொற்கள் உருவாக்கப் பட்டன. கலிலேயாவும், நியூட்டனும் புதிய கோட்பாடுகளை நிறுவினர் அதன் காரணமாக Explain, Encyclopedia, Gravity, Paradox, External, Chronology என்ற சொற்கள் ஆங்கிலத்தில் ஒட்டிக் கொண்டன. இன்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்குப் பெயரிட லத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளையே நாடுகின்றோம். எல்லோருக்கும் தெரிந்த Video, Televison போன்றசொற்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

ஐரோப்பிய மறுமலர்ச்சி புதிதாகச் சுமார் 12,000 பிறமொழிச் சொற்களை ஆங்கில மொழிக்கு வழங்கியது. பல்வேறு மொழிச் சொற்களும் ஆங்கிலத்தை வந்தடைந்தன. Admiral என்ற சொல் Amil ali, என்ற அரபிச் சொல்லின் அடியாகத் தோன்றியதாகும். சதுரங்க விளையாட்டில் Checkmate என்பது Sha Mat என்ற அரபிச் சொல்லின் திரிபாகும். Reporteur என்ற பிரெஞ்சுச் சொல் ஆங்கிலத்தில்Reporter ('செய்தியாளர்) என்று மருவியது.

ஜேம்ஸ் மன்னனின் விவிலிய நூலும் சேக்ஷ்பியரின் கவிதைகளும், நாடகங்களும் ஆங்கிலத்தை மேலும் செழுமை பெறச் செய்தன. புதிய பண்புகள் சிலவற்றைப் பெற்று ஆங்கிலம் வளர முடிந்தது. ஆங்கில மொழியின் ஆரம்ப காலப் பயன்பாடுகளுடன் புதிய சொற்சேர்க்கைகள் வளர ஆங்கிலம் விரிவடைந்தது. எலிஸபெத் காலத்துக் கடலோடிகளால் ஆங்கிலம் கடல் கடந்து மற்ற நாடுகளிலும் பரவியது. அதே வேளை வட அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயர் அங்கு வாழ்ந்த பூர்வீகக் குடிகளுடன் உறவாடியதால் hickory, pecan (மரங்கள்)

(VII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சஞ்சீவி சிறுகதை

# திரும்பல்

**- அம்பிகா -**

இன்றைக்குச் சரியான அலைச்சல். மனமும் உடலும் களைச்சு சோர்ந்து வீடு வந்து சேர மாலை 6 மணி ஆகிவிட்டது. மாதம் ஒரு நாள் இந்த அலைச்சலைத் தவிர்க்க ஏலாது.

காலையிலை எட்டுமணிக்கெல்லாம் வெளிக்கிட்டுப் போய் பாங்க் வாசல்ல கியூவிலை நிற்கிறன். அறுபத்தெட்டாம் நம்பர் கிடைச்சது பெரியகாரியம். பென்சன் காசு கையிலை வர மணி பதினொண்டைத் தாண்டி இருக்கும். கால் கடுக்க நிண்டது. வெய்யில் அகோரம்வேற.

மாதம் ஒருக்கா எங்கடை பழைய ஆக்களை பாங்கிலை சந்திக்கிற திருப்தியும் இருக்கு. ஆள் ஆளா குசலம் விசாரிக்க நேரம் போய் விடும். அந்தக் கூட்டத்திலை நான்தான் இளசு எண்டால் அது பொய் இல்லை. நம்புங்கோ. கொஞ்ச நஞ்ச கறுப்பு முடியும் எனக்கு இருக்கு.

ஆகலும் வயது போனதுகள் பெரிய கஷ்டப்பட்டுத்தான் இந்தக் காசை எடுக்க வருகுதுகள். கியூ வேற. நிற்கவும் முடியாமல், குந்தவும் இடமில்லாமல் அதுகள் படுகிறபாடு. பென்சன் நாளிலை பாங்க் ஒரு ஆஸ்பத்திரி வாசல் மாதிரித்தான் பாருங்கோ.

காசை எடுத்திட்டால் போச்சே. அண்டைக்கு பாகப் பிரிவினை பெரும்பாடு. பால்காரன், கடைக்காரன், லோன்றி, அது, இது எண்டு எல்லா இடமும் காத்துக் கொண்டு இருப்பாங்கள். கொழுத்தும் வெய்யில்லை திரிஞ்சு அந்தத் துண்டு விழுற பட்ஜெட்டை ஒப்பேத்த வேணும்.

மனுசி சொல்லிவிட்ட எல்லாம் வாங்கிறதெண்டால் அடுத்த மாத பென்சனையும் சேர்த்து எடுத்தாலும் காணாது. வளர்ந்த பிள்ளையள் வேற. ஏதோ வாங்கியும் வாங்காமலும் ஒருபடியா வீடு வந்து சேர்ந்திட்டன்.

நாரியைப் பிடிச்சுக் கொண்டு சாய்மனைக் கதிரையிலை சாஞ்சிட்டன். அப்பாடா! கொஞ்சம் ஆறி இருப்பம்.

''அப்பா! சேதுபதி அண்ணையும் விதானை யாரும் வந்திட்டுப் போயினம். ஒருக்காப் போய் என்னெண்டு கேட்டிட்டு வந்திடுங்கோ. இருளப் போகுது''.

எனக்குச் சுள்ளெண்டு பத்திக்கொண்டு வந்தது. ''வந்ததும் வராததுமா ஒரு பச்சத்தண்ணி குடிக்க விடமாட்டியள். அப்படியென்ன தலைபோற அவசரம். நான் என்ன செத்தா போகப் போறன். கொஞ்சம் பொறு'' — சீறினேன் நான்.

''பிறகு எண்டால் ஏன் உடுப்புமாத்த முதல் சொல்லேல்லை என்பியள். அது தான் அவசரப்பட்டனான்'' —என்றாள் மனைவி செங்கமலம்.

இவன் சேதுபதி நேற்றுத்தான் வன்னியாலை ஏதோ ஒருவழியிலை வந்து சேர்ந்தவன். அதுக்கிடையிலை இஞ்சை ஓடியாறான். ஏதும் தகவல், கடிதம், பார்சல் ஏதும் கொண்டுவந்தானோ? அல்லது கஷ்டப்பட்டு வந்திட்டன் எண்டுசொல்லி காசு, கீசு கடன் கேக்க வந்தானோ?

''மெய்யே செங்கமலம் ஏனாம்வந்தவன்?''- கோப்பியோடை வந்தவளைக் கேட்டேன்.

''எனக்கென்ன தெரியும். ஏதோ விதானையாரோடை குசுகுசுத்துக் கொண்டு வந்தவர். நீங்கள் இல்லையெண்டதும் ஒண்டும் பேசாமல் போயிட்டினம்.''

என்னவாக இருக்கும் என மனம் எண்ணியது. இனி இண்டைக்கு என்னாலை அசைய ஏலாது. இருட்டும் பட்டிட்டு. எல்லாம் விடியட்டும் விசாரிப்பம்.

சேதுபதி என்னோடை கனகாலப் பழக்கம். பெரிய உத்தியோகம் பாத்த திமிர் இப்பவும் இருக்கு. ஒரு வணங்காமுடி. எங்கடை வீட்டுப்பக்கம் கண்டபடி கால் வைக்க மாட்டான். வந்தால் விசயம் சீரியசா இருக்கும்.

எண்டாலும் நல்லவன். சோலிசுறட்டுக்கு வாறது குறைவு. தானும் தன் பாடும் எண்டு இருந்தவன். மனுசி காமாச்சிதான் படுசூரி. போட்டு ஊரையே ஆட்டி எடுத்திடுவாள். அவள் செத்த பிறகுதான் மனுசன் கொஞ்சம் நிம்மதியாக இருக்குதெண்டு ஊரிலை கதை.

அவன் கடைசியா வீட்டை வந்ததையும் எனக்குத் தந்த உபத்திரவங்களையும்தான், என்னாலை மறக்க முடியேல்லை.

'உய்' 'உய்'யெண்டு கூவிக் கொண்டும் உரசிக் கொண்டும் தலைக்கு மேல ஷெல்லுகள் பறக்குது. சனமெல்லாம் வன்னியோ வறணியோ போவமெண்டு மூட்டை முடிச்சோடை றோட்டிலை இறங்கிற நேரம் அது.

சேதுபதி எங்கடை படலையைத் திறந்து கொண்டு நிதானமா வாறான்.

''தம்பி ராசரத்தினம் எப்படிச் சுகம்?''

என்னாலை மறுமொழி சொல்ல ஏலேல்ல. சுகம், குசலம் விசாரிக்கிற நேரமே உது. தலையை நிமித்தினால் ஷெல் தட்டிக்கொண்டு போயிடும் போலைநிலைமை.

''ஓம் அண்ணை வாங்கோ. என்ன இந்த நேரம் இந்தப் பக்கம்? எனக்குக் கொஞ்சம் பதறுது. காச்சல் குணம் போலை. நீங்களும் பங்கருக்கை வாங்கோ'' — குனிந்த தலை நிமிராமல் நான்.

''உந்தச் ஷெல்லடி எல்லாரையும் கலக்கியடிக்குது கண்டிரோ. மகள் புஷ்பாவும் ராத்திரி வறணிக்குப் போயிட்டாள். எனக்குக்கூட ஒரு சொல்லுச் சொல்ல இல்லை. பேத்தி திடுக்கிடுகிறாளாம். நல்ல சாட்டு. புருஷனும் அவளும் பிள்ளையுமா சைக்கிள்ளை போட்டினம்.''

''பின்னை எல்லோருக்கும் உம்மைப்போல துணிச்சல் இருக்கே. இஞ்ச பாரும் நான் படுற பாட்டை. நீர் விசிட் அடிக்கிறீர்.''

''அது கிடக்கட்டும். எனக்கு மினைக்கெட நேரமில்லை. வீட்டில கபிலன் தனிய நிக்கிறான். தாயில்லாப் பிள்ளை. பாவம். ஷெல்லடி தாங்கமாட்டான். கூட்டிக்கொண்டு வன்னிக்குப் போகப்போறன். அது தான் சொல்லிப்போட்டுப் போக வந்தனான். நீங்கள் என்ன நோக்கம்?''

''ஐயோ அண்ணை. எனக்குத் தலையை நிமித்தவே துணிவில்லை. எப்பிடி வெளிக்கிட்டுத் துணிஞ்சு வாறது. வழியிலை — வன்னியிலை — ஷெல் பட்டுத் தவிக்காம, வீட்டில இருப்பம். செத்தாலும் வீட்டில சாவம். வெளிக்கிட எல்லாம் இப்ப வசதிப்படுமே? என்ன செலவு?''

''அதுவும் சரிதான். பெடியனாலை எல்லோ நான் போவேண்டி இருக்கு......ஒரு விசயம்...... என்ர மாடு நிக்குதெல்லே. ஜேசி. அடுத்த மாதம் கண்டு போட்டிடும். நிறையக் கறக்கும். பத்துக்கு மேல பெறும். புஷ்பா கெஞ்சினவள். நான் குடுக்கேல்லை. உம்மட்டத்தான் தந்திட்டுப் போகப்போறன். உம்மடை பெடியன் விபுலனும் நிக்கிறான். உசாரா ஆளும் பேருமா வளர்ப்பியள். கையோட வீட்டுத் திறப்பையும் தரப்போறன். ஆரும் நல்ல ஆக்களா பார்த்து இருத்தி விடுமன்.''

''இதென்ன அண்ணை கதை. நான் படுகிற பாட்டுக்கை ஒரு மாடும் வீடுமோ? வயசு போன காலம். பிள்ளையள் இதுகளைத் திரும்பியும் பாராதுகள். நிலைமை வேறை இப்பிடி. எல்லாம் புஷ்பாட்டை ஒப்படைச்சிட்டுப் போகலாமே. சந்தோஷமா பாப்பாள்.''

''ராசரத்தினம், உமக்கு ஒண்டும் விளங்காது. வலிய வாற சீதேவியைக் காலாலை உதைக்காதையும். தேடியும் கிடையாத மாடு. இனி உமக்குத்தான் வாய்க்குது. நானும் இனி வந்தால் தானே. அப்பிடியே கொழும்புக்குப் போயிடுவன்.

''வேண்டாம் சேதுபதி, என்னை விட்டிடும். வறணியிலை கொண்டுபோய் கட்டிப்போட்டுப் போம். அவள் பாப்பாள்.''

''நான் சொல்லுறதைக் கேளும். உமக்கு என்னடை நிலமையும் விளங்குதில்லை. அவள் புஷ்பா தனக்குப் பழம் வீட்டைத் தந்ததெண்டு கோவம். இந்த வீட்டுக்கே வாறதில்லை. அவ்வளவு சாமானோடை இந்தப் புதுவீட்டை அவளிட்டைக் குடுத்தால் என்ன நடக்கும்? நாளைக்குச் சின்னவள் வெளிநாட்டாலை வந்து பிச்சையே எடுக்கிறது?''

நான் பெருமூச்சு விட்டேன். சேதுபதி தொடர்ந்தான்.

''இவ்வளவு நாளும் குனிஞ்சு ஒருபிடி சாணி அள்ளி அறியாள். இவள் மாட்டைத் தொடலாமே? எல்லாரும் ஓடுகிற நேரம் எதையும் சுருட்டலாம் எண்டால் ஓடி வருவாள். நான் இடங்குடன் எண்டு தெரியும். அது தான் பேசாமலே போயிட்டாள்.''

இதற்கிடையில் மீண்டும் சரமாரியான ஷெல்லடி, சடசடவெண்டு ஏதோ கொட்டுப்படும் சத்தம். சேதுபதி நிண்ட இடம் தெரியாமல் [illegible] உதவிதான் செய்திருக்கு. ஆள் திரும்பி வரவே இல்லை. இவனுக்கு மாடு மேய்க்க நானா வந்து வாய்ச்சன். என்ர பிள்ளையளும் பார்க்குமாம். அவற்றைத் தாயில்லாத பிள்ளைக்கு ஷெல்படக் கூடாதாம். இதுகளுக்குத் தாய் இருக்கு எண்டால் சாகலாமே? இதென்ன தொந்தரவு?

இரவு முழுவதும் நித்திரை இல்லை. ஏக்கத்தோடை படுத்தபடி. ஆனால் ஷெல்லடி இல்லை. விடியப்பறம் அருண்டு போனன். மாடு ஒண்டு 'அம்மா' எண்டு கூப்பிட்ட மாதிரிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு முழிச்சேன்.

மாணிக்கம் மாட்டோடை வாசல்லை தவங் கிடக்கிறான். ''ஐயா தந்திட்டுக் கிளாலிக்குப் போட்டுது. உங்களுட்டை மாட்டை வீட்டைப் பாக்கக் குடுக்கட்டாம்.''

இதென்னடா சங்கடம்? உந்தச் சோலி இஞ்ச வேண்டாம் எண்டு செங்கமலம் முறைக்கிற முறைப்பு மனசில உறைக்குது. ஊரில ஆக்கள் இல்லை. ஆடு, மாடு, கோழி, நாய் எல்லாம் றோட்டில அலையுது, அதுகளோடை கலைச்சு விடலாமே. வீடு, வாசல் எல்லாம் பூட்டியும், திறந்தும் ஆள் இல்லாமல் சருகேறிக் கிடக்கு. காத்துக்குக் கதவு, யன்னல் அடிக்கிற சத்தம் தான் கேட்குது.

''ஐயா சொல்லிடிச்சி, மாடு உங்களுக்குத் தந்தாச்சு. தனக்கு வேண்டாமாம். வீட்டை இடக்கிடை கூட்டித் தொடைப்பிச்சு வைக்கட்டாம். வெல்லிக் கெலமை வெலக்கு வைச்சிரட்டாம். குரோட்டன் வாடாம தண்ணி கட்டிரட்டாம். நான் வாரன்.''

வீட்டுத் திறப்பையும் தந்திட்டுப்போயிட்டான். நான் திகைச்சு நிக்கிறன். அடப்பாவி! சேதுபதி நீ வள்ளல் தான்!

மாட்டுக்கு ஷெல் பட்டு மாத்திறதுக்கு நான் அலைஞ்சது கொஞ்சமே. காரிலை 'வெற்றினரியை' கூட்டிவர வேணும்; மாட்டை பிடிக்க ஆள்வேணும்; மருந்துகள் தட்டுப்பாடு; நான் நாய் படாப்பாடு.

பென்சன் காசு மாட்டு வைத்தியத்திலை போடுப் போலை. பாவம் வாயில்லாத சீவன். நான் எண்ட படியால் மாடும் கண்டும் ஒருபடி தப்பிச்சுதுகள். கண்டுக்குக்கூட பால் குடுக்க ஏலாது. மடியிலைஷெல்பட்ட காயம். பக்கத்து வீட்டிலை பால்வாங்கி போச்சியிலை கண்டுக்குப் பருக்க வேண்டிய நிலமை.

கேற் திறந்து சத்தம் கேட்க, சிந்தனை அறுபட்டுப் போச்சு. மகன் விபுலன்தான் வாறான். ''ஏனடா தம்பி இவ்வளவுபிந்திப்போனாய்?? கேபியூ நேரம் ஆகப் போகுது.''

''அக்காவுக்கு நாளைக்கு இன்டர்வியூ. அதான் அலுவல் பார்த்திட்டு வாறன். விதானையாரிட்டைக் கையெழுத்து வாங்கப் போனனான். அவர் இன்னும் வீட்டை வரல்லை. காலையிலதான் வாங்க வேணும்!''

''சரி, சரி போய் உடுப்பை மாத்தி ஆகிறதைப்பார். அக்காளையும் இன்டர்வியூக்கு ஆயத்தப் படுத்தச் சொல்லு. நான் களைச்சுப் போனன்.''

இரவு உறக்கம் சீராக இல்லை. அப்பவே போய் சேதுபதியை, விதானையை கண்டிருக்கலாம் என்றது மனது. மீண்டும் சிந்தனைத் தொடர்.

நாலைஞ்சு மாதம் போக சனமெல்லாம் திரும்பிவரத் தொடங்கியிட்டுது. என்னமோ நிலமை சீர்பட்டுடுத்தாம். இப்பிடி எத்தனை தரம் சீரைக்கண்டனாங்கள் நாங்கள்?

முதல்ல ஊருக்குத் திரும்பியது புஷ்பா குடும்பந்தான். மற்ற நாள் வீடுதேடி வந்திட்டாள். அவ்வளவு அக்கறை.

''வா புஷ்பா என்ன பாடுகள்?''

''என்ன மாமா செய்யிறது. நாங்கள்தான் நிறையவே அலைஞ்சு, களைச்சு வந்திருக்கிறம். நீங்கள் சுகமா வீட்டிலை இருத்திட்டியள். வசதியாய்ப் போச்சு.''

''ஏலுமெண்டால் நானும் கிளம்பித்தான் இருப்பன், றோட்டுக்கே இறங்கப் பயமா இருந்தது. பயத்திலை வீட்டிலை இருந்திட்டம் பிள்ளை''.

''என்ன மாமா, இப்ப நிறைய திடீர் பணக்காறராம். நிண்டவை தான் போன சனங்களின்டை சாமான்கள் எல்லாம் அள்ளினதாம். ரி.வி., டெக், றேடியோ, மணிக்கூடு எண்டு நிண்டவையளிடை வீடுகள் நிரம்பி வழியுதாமே. ஒரு கோழிமுட்டைக்கு வழி இல்லாத சுந்தரம் வீட்டிலை நூறு கோழி நிற்குதாம். பெரிய பண்ணை ஆச்சு.',

''ஒண்டும்வேண்டாம்எண்டு போட்டது போட்டபடி ஓடினவை ஏன் இதுக்கெல்லாம் கவலைப்படுகினம்!'' — இது நான்.

''அதுவும் சரிதான் மாமா. அடுத்தவை கதை நமக்கு ஏன்? தங்கச்சி சுவிஸிலை இருந்து காயிதம் எழுதியிருக்கிறாள். வீட்டைப்பார்க்கச் சொல்லி, இந்தாங்கோ கடிதம். படிச்சிட்டுத் திறப்பைத் தாங்கோ.''

எனக்கு என்ன செய்யிறது எண்டு ஒண்டும் விளங்கவில்லை. இந்தப் பிரச்சினையிக்கை இவளுக்கு சுவிசிலை இருந்து கடிதமும் வந்திருக்கு. அவளோடை கையெழுத்துக்கு என்னட்டை என்ன பாங்க்கார்ட் இருக்கே? இவள் சுத்துமாத்துக்காரி.

''கொய்யா வந்து கதைச்சவர். திறப்பு எடுக்க நான் உடன்பட இல்லே. பிறகு மாணிக்கத்திட்டை குடுத்தனுப்பிட்டுத் தப்பிட்டார். இப்ப நீ வந்து நிக்கிறியே.........'' இழுத்தேன்.

இதில் எனது நிலமை மிகச் சங்கடம். என்ன என்ன சிக்கல் எல்லாம் வருமோ? இதுக்கிடையிலை முந்திவந்த சனம் தான் அகோரமாக் களவெடுத்து எல்லாம் விக்குது. களவு சாமான் எல்லாம் அரைவிலை கால்விலைக்கு வாங்கலாம்.

நான் யோசிக்கிறன், மனைவி செங்கமலம் வந்து ஜாடை காட்டினாள்.- அவை ஒரு குடும்பம்; ஒரே ஆக்கள்; இடையிலை நாங்கள்பிறத்தி. குடுத்துவிடுங்கோ திறப்பை எண்ட மாதிரி.

''மாமா! மாடு என்ன மாதிரி இருக்கு?''

''அதை ஏன் பேசுவான்? அதோடை நான் பட்ட பாடு கொஞ்சமே, ஷெல்பட்டு இப்பத்தான் காயம் மாறி இருக்கு. கண்டைப் பால் குடிக்க விடத் தொடங்கி இருக்கு.''

''என்னமாதிரி லட்சுமியாட்டம் இருந்த மாட்டுக்கு கண்பட்டுப் போச்சு. இப்பிடி அநியாயமாக்கிப் போட்டியளே! உங்கடை எண்டால் இப்பிடிச் செய்வியளோ? அடுத்தவை .சொத்துத் தானே.''

இந்தப் புஷ்பா காமாட்சியின்ர மகள்தானே. இந்தப் பேச்சு எல்லாம் எனக்குப் புதினமாக இருக்கவில்லை. என்ரை மனுசி, பிள்ளையள் கேட்டு சங்கடத்தில் நெளிந்தபடி மௌனமா நிக்கினம்.

இவள் எதையாச்சும் வித்துச் சீவிக்கத் துடிக்கிறாள். எல்லாப்பாடும் எனக்குப் புரியுது. இடையிலை மாட்டியது நான் என்பதுதான் துன்பம். இப்ப கதை மாட்டிலை வந்து நிக்குது.

போகையுக்கை வள்ளலா நடிச்ச சனம் கொஞ்சம்; போட்டது போட்டபடி விட்டவை கொஞ்சம்; கட்டிக் காவி சுமந்து போனவை கொஞ்சம்; இப்ப வந்து நிண்டு கொண்டு தங்கடை

(VII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ. ல. சு. கட்சியின் தப்புத் தாளங்கள்

**"சிங்களத் தலைவர்களின் குத்துக் கரணங்கள்" என்ற தலைப்பில் இக்கட்டுரையின் முதற்பகுதி கடந்த வார சஞ்சீவியில் வெளியாகி இருந்தது.**

**1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் ஜே. ஆர். அரசு தமிழர்களுக்கு எதிராகப் போர் தொடுத்த காலம் முதல் அண்மையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும் இடையே உடன்பாடு ஒன்று ஏற்பட்டது வரையான காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனுசரித்து வந்த கொள்கையை அக்கட்டுரையின் இந்த இறுதிப்பகுதி விவரிக்கிறது.**


**சிங்கள மொழி மூலம்:- உபுல் ஜோசெப் பெர்னாண்டோ. தமிழில் தருபவர் கஜனி.**

1983ஆம் ஆண்டு இடம் பெற்ற இனக் கலவரத்தைத் தொடர்ந்து பிரச்சினைக்கு யுத்த ரீதியான தீர்வினைக் காண்பதை நோக்கமாகக் கொண்டு ஜே. ஆரின் அரசு தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு எதிராகப் போர் தொடுத்தது.

இந்தக் கட்டத்தில்தான் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தனது ''பந்து விளையாட்டை'' எதிர்க்கட்சியும் ஆரம்பித்தது.

''இந்தியாவுடன் மோதிக் கொண்டு பிரச்சினையைத் தீர்க்க முடியாது. சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்'' என்று இரத்தினபுரியில் (1-3-1985) நடந்த கூட்டம் ஒன்றில் சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

பின்னர் அக்குரஸ்ஸ என்ற இடத்தில் (10-03-1985) நடந்த கூட்டத்தில் ''இந்தியாவின் ஒத்துழைப்பு இன்றி




ஜே. ஆர்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்தியா குறித்து இந்த அரசாங்கம் (ஐ.தே.க. அரசாங்கம்) மிகவும் குழப்பமடைந்துள்ளது.'' — என்று மீண்டும் அவர் கூறினார்.

இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவது அவசியம் என்று இந்தியாவுக்குக் கொடுக்கப்பட்டு வந்த அழுத்தங்கள், பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது என்ற எண்ணத்தை ஜே. ஆருக்கும் ஏற்படுத்தின.

திம்பு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு ஜே. ஆர். அரசு விடுத்த வேண்டுகோளை அப்போ



டி. பி.

தைய எதிர்க்கட்சிகள் நிராகரித்தன.

''திம்பு பேச்சுவார்த்தைகளின் மூலம் நாட்டை ஏலத்தில் விடத் தீர்மானித்தால் அது நாடு இரண்டாக உடைய வழிவகுக்கும். இராணுவத்தினரும், பொலிஸாரும் இன்று முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். அன்று இந்தியாவுடன் பேச மறுத்த ஜே.ஆர். இன்று இராணுவத்தினருக்கும், பொலிஸாருக்கும் தூக்க மாத்திரைகளை வழங்கிவிட்டு இந்தியாவுடன் பேசுகிறார்'' — என அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கல்கிசையில் நடந்த கூட்டம் ஒன்றில் (6-8-85) தெரிவித்தார்.

## தப்புத் தாளங்கள்

திம்பு பேச்சுவார்த்தை தோல்வியடைந்த பின்னர் பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாண மீண்டும் ஜே. ஆர். அரசு முற்பட்டது.

படையினரை நன்கு தயார்ப்படுத்தி ''ஒப்பரேஷன் லிபரேசன்'' போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்கால கட்டத்தில் அன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப எதிர்க்கட்சி தனது தாளத்தை மாற்றியது.

21-12-85 இல் மஹர என்



பிரேமதாசா

னும் இடத்தில் நடந்த வைபவம் ஒன்றில் சிறிமாவோ பண்டாரநாயக்கா பின்வருமாறு தெரிவித்தார்:-

''பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும்; அதன் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் நாடாளுமன்றத்துக்கு வர அனுமதித்து பின்னர் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும்'' — என்றார்.

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து யுத்தத்தை மேற்கொண்டு அதன் மூலம் தீர்வினைக் காண்பதென்பது இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக ஸ்ரீலங்கா அரசுக்கு முடியாமற் போனது. யுத்தத்தைக் கைவிட்டு இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையின் பின்னணியிலேயே இலங்கை-

அரசியல்

— இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இவ்வாறு ஜே. ஆர். அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டவுடன் இந்தியாவுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என அதுவரை அடிக்கடி கூறிவந்த எதிர்க்கட்சி தனதுதாளத்தை மீண்டும் மாற்றியது.

'பிரபாகரன் யார்? அவர் ஒரு கொலையாளி. இந்த இந்த நாட்டை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் ஆள முடியாது. இன்றோ நாளையோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திட ராஜீவ் காந்தி இலங்கை வருகிறார். அவருக்கு என்ன உரிமை உள்ளது? இந்தியப் பிரதமருடன் ஒப்பந்தம் செய்ய வேண்டிய தேவை என்ன? இதன் மூலம் நாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் இந்தியாவின் ஒரு பகுதி என்பது தெளிவாகிறது அல்லவா?'— 24-7-87 இல் கொம்பனி வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

யாழ். கோட்டை முற்றுகை மற்றும் ''வடமராட்சி



அனுரா

நடவடிக்கை'' ஆகியன மேற்கொள்ளப்பட இருந்த வேளையில், ''இந்தியாவின் ஒத்துழைப்பின்றி ஒரு போதும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. எனவே இலங்கை அரசு இந்தியாவின் ஒத்துழைப்பை கோரிப் பெற வேண்டும்'' என்று தெரிவித்த அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா, சுமார் இரண்டு வருடங்களின் பின்னர் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இந்தியாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது தனது நிலையை மாற்றிக் கொண்டார்.

''பிரபாகரனுக்கு மன்னிப்பு வழங்கி நாடாளுமன்றத்திற்கு வர வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 24 மணித்தியாலங்களுக்குக் கூட இந்த ஒப்பந்தம் நிலைக்காது என்பதை ஜே. ஆருக்கும் ராஜீவ் காந்திக்கும்



சிறிமா

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்'' — என கொம்பனி வீதிக் கூட்டத்தில் 29-7-87 அன்று அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

1985 இல் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்; தேர்தல் நடத்தப்பட வேண்டும்; விடுதலைப்புலிகள் நாடாளுமன்றம் வர வழியமைக்க வேண்டும். இவையாவும் சிறந்தவை — என்று கூறிய ஸ்ரீ. ல. சு. கட்சி 1987 இல் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பிரபாகரன் நாடாளுமன்ற உறுப்பினராகி நாடாளுமன்றம் வருவது பெரும் தவறு என்றது.

இதுதான் ஸ்ரீ.ல.சு. கட்சி அனுசரித்து வந்த கொள்கை.

1988 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருந்த வேளையில் அனுரா மீண்டும் தாளத்தை மாற்றிக் கொண்டார்.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடக்குக் கிழக்கில் இந்தியாவின் உதவியின்றி வாக்குகளைப் பெற முடியாது என்ற தீர்மானத்திற்கு வந்த எதிர்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தேர்தலில் தமது தாயின் (சிறிமாவின்) வெற்றி வாய்ப்புக் குறித்து ''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்தார்.

''எனது தாயார் ஆட்சிக்கு வந்தால் ராஜீவ் காந்தியுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார் என நான் நினைக்கிறேன். இந்தியா எங்கள் அயல் நாடு. நாங்கள் இந்தியாவின் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டி இருக்கும். நாங்கள் அதிகாரத்திற்கு வந்தாலும் இலங்கை — இந்திய உடன்பாட்டை ரத்துச் செய்யமாட்டோம்.'' — என்றார்.

இந்தப் பேட்டி ''இந்து'' பத்திரிகையின் 18-8-1988 பதிப்பில் வெளியானது.

ஆனால் இன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்தையுடன் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரபாகரனிடம் வேண்டிக்கொள்ள அன்று அனுரா முல்லைத்தீவுக் காட்டுக்குள் நுழைந்தார்.

'பிரபாகரனுடன் என்னபேச்சு? அவருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டாம்—என்று தற்போது தெரிவித்து வரும் தினேஷ் குணவர்த்தனாவும் அன்று அனுரா குழுவுடனேயே இருந்தார். அதுமாத்திரமல்ல. இலங்கை — இந்திய உடன்பாட்டுக்கும் பரந்தளவு அதிகாரங் கொண்ட அதிகாரப் பரவலாக்கலுக்கும் இவர்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

1988 இல் பிரேமதாசா ஜனாதிபதி பதவி ஏற்றதும் இந்திய இராணுவத்தை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.

இலங்கை—இந்தியஉடன்பாட்டைஉத்தியோகபூர்வமற்ற முறையில் அவர் ரத்துச் செய்தார். அதன் பின்னரே பிரேமதாசா விடுதலைப்புலி களுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தார்.

1988 இல் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அவர்களுடன் ஒத்துழைப்பைப் பெற முல்லைத்தீவுக் காட்டுக்குள் நுழைந்த ஸ்ரீ. ல. சு. கட்சியினர் 1990 இல் பிரேமதாசா விடுதலைப்புலிகளுடன் 5 நட்சத்திரக் ஹோட்டலில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தப் பேச்சுவார்த்தையைக் கண்டித்து சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததை அடுத்து ஈழயுத்தம் ஆரம்பமானது. பிரேமதாசா அரசு வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, எதிர்க்கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து இராணுவ நடவடிக்கைகளின் போது விமானங்களில் இருந்து குண்டு வீசுவது குறித்து கண்டனம் தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணை (IMPEACH — MENT) கொண்டுவரப் பட்ட போது இந்திய அமைதிப் படையை வெளியேற்றியது தொடர்பாக அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. இவ்வாறு குற்றம் சுமத்தியவர்கள் வேறு யாருமல்லர். 1988 இல் இந்தியப் படையை வெளியேறுமாறு மக்களைத் தூண்டிவிட்ட ஸ்ரீ. ல. சு. கட்சியினரே ஆவர்.

பிரேமதாசா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதிகாரத்துக்கு வந்த டி. பி. விஜயதுங்காவின் அரசு, ஈழத்தை வழங்கத் தாங்கள் தயாரில்லை எனத் தெரிவித்தது.

ஆனால் 1993 இல் தென் மாகணசபைத் தேர்தலின் போது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என முதன் முதலாக ஸ்ரீ.ல. சு. கட்சி சார்பில் சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார்.

இந்த அறிவிப்பை அடுத்து விஜயதுங்காவின் அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்தது.

நாட்டின் வரலாற்றில் முதன் முதலாக இனவாதத்தை நிராகரித்து, 1994 இல் இந்நாட்டு மக்கள் தேர்தலில் வாக்களித்தனர்.

இந்த யுத்தத்தால் அரசியல் ரீதியாக அதிகம் பாதிக்கப்பட்டது ஐ. தே. கட்சியேயாகும்.

இந்த யுத்தம் காரணமாக ஜே. வி. பியினராலும் விடுதலைப் புலிகளாலும் பல ஐ. தே. க. தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்திரிக்காவின் அரசு பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தபோது எதிர்க்கட்சியினர் அமைதி பேணினர். இந்நாட்டின் வரலாற்றில் எதிர்க்கட்சிகள் இனவாதத்தைக் கிளப்பாமல் அமைதி

(VII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி II

# விடியலைத் தேடி.....

நாட்டின் மீது கோபம் என்றால் அது என்ன கோபம்? தன் நாட்டுக்கு ஏன் இப்படியொரு மகத்தான துரோகத்தைச் செய்ய முற்படுகிறான் இவன்? இவனுடைய நாடு இவனிடம் வைத்த நம்பிக்கை என்ன? எதிர்பார்த்ததும் என்ன? நாட்டையே விற்றுவிட இவன் துணியக் காரணம் என்ன?

வெளி உலக யதார்த்தங்கள் புரியாமல் ஒரு பாசறையில் வளர்வது போலவே அவனது இளமைக்காலம் இருந்தது. கல்வியும் அரசியலும் வெளி உலகோடு ஒப்பிட முடியாதபடி கிணற்றுத் தவளையாக இருப்பினும் ஏதோ திணிப்பு இருப்பதாக மட்டும் அவன் உணரத் தலைப்பட்டு விட்டான். திறமையான முயற்சிகள் முடக்கப்பட்டு வளங்கள் ஒடுக்கப்பட்டு ஒரு குறித்த பாதையில் மட்டும் சகலதும் அனுமதிக்கப்படுவதாக உணர்ந்தான் அவன். அதே பாதையில் தானும் நடந்து வெற்றியும் கண்டான் அவன். நாடே பிரமிக்கத் தக்க சாதனைகளை அவன் செய்து பெருமையைத் தேடித் தருவான் என்பது எல்லோரதும் எதிர்பார்ப்பு.

மொஸ்கோ போன்ற நகரப் பிரதேச வாழ்விலேயே எத்தனையோ கட்டுப்பாடுகளும் வசதிக் குறைவுகளும் அடிமை வாழ்வும் என்ற நிலை. இது தான் உலகம்; இதுதான் சுதந்திரம் என அனைவரும் திருப்திப்பட்டபடி வாழும் வாழ்க்கை.

கிழக்குக் காடுகளுக்கு மாறி வந்ததும் நிலைமை மேலும் மோசமடைவது தெளிவாகத் தெரிந்தது. குடும்பத்தோடு காட்டு வாழ்க்கை; மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள்; எப்போதும் அரசுக்காக உழைப்பிப்பதற்கே தடி ஓட்டும் இராணுவ நிர்வாகம்; ஆடு மாடுகள் போல் இரவில் பட்டிகளில் அடைக்கப்படும் விமானப்படைச் சிப்பந்திகள்.

சூழவும் அதே குறிப்பிட்ட சோக மனித முகங்கள், இதை விட காட்டுக் காட்சிகளே மேலதிகம். காட்டு ஈக்கள் மொய்க்கும் — மூடப்படாத — திருத்தப்படாத மல கூடங்கள். போட்டது போட்டபடி காலங் காலமாக அழுகி மணக்கும் குப்பை கூழங்கள். உடைந்தது உடைந்தபடி ஒழுகியபடி காணப்படும் விடுதிகள்; வர்ணம் பூசப்படாத அழுக்குப்படிந்த அழுத்தமற்ற சுவர்கள்.


அடிக்கடி நோய்வாய்ப்படும் படையினர்; வைத்திய வசதிகள் இன்மையால் இடைக்கிடை மரணங்கள்; விரக்தியின் விளிம்பில் எத்தனை தற்கொலைகள்? எங்கும் சோகமயம்; வானொலி, தொலைக்காட்சி என்றால் அவை விமானத் தொடர்பு சாதனங்களும் 'றாடர்' திரையுமே தவிர வேறில்லை.

ஒரு அரசியல் அதிகாரி அப்பிரதேசத்துக்கு வந்து உரையாற்றிய கூட்டம் ஒன்றில் மிகவும் உற்சாகமாக கருத்துக் கூறினான் லெப்டினன்ட் பெலெங்கோ. சோவியத்தின் கொள்கைப்படி மனித வளம் எப்படி மதிக்கப்படுகிறது என்பதைப்பற்றிஆரம்பித்தஅவன் தமது உணவு உறைவிட நிலமைகளின் மோசநிலை பற்றிச் சற்று விளக்கினான்.

மேலும் நாங்கள் இங்கே 800 பேர் இருக்கிறோம். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. போதிய காட்டு மரங்கள் இருக்கின்றன. குடியிருப்புகளைச் செப்பனிடுவோம்; சூழலைச் சுத்தமாக்குவோம்; சிரமதானம் செய்வோம்; இது எமது பிரதேசம். எமது நாடு. — என்றெல்லாம் அறை கூவல் விடுத்தான் அவன்.

பதிலுரை ஆற்றிய அந்த அதிகாரி ''நீங்கள் உங்கள் சிந்தனையை அப்படி இப்படியெல்லாம் சிதறவிடக்கூடாது. உங்கள் உழைப்பு முழுவதும்— சக்தி யாவும் நாட்டுக்காக, அரசுக்காக, இராணுவத்துக்காக என்றே இருத்தல் வேண்டும்; அதற்கே நேரமும் உழைப்பும்பணமும் போதாத போது நாம் இப்படிச் சிந்தித்தால் வானில் உயரக் கிளம்பும் எமது விமானங்கள் தாழப் பதிந்து விடும்'' — என்றார்.


சோர்ந்து போனான் பெலெங்கோ.



ரஷ்ய 'மிக் 25' விமானத்தை ஜப்பானிய அதிகாரிகள் அங்குலம் அங்குலமாகப் பிரித்து ஆராய்கிறார்கள்.

தொடர்ந்து பேசிய அந்த அதிகாரி அமைச்சர் ஒருவரை வரவேற்க ஒரு வீதிஅமைத்து மரங்களை இருமங்கும் நாட்டி ஒரு பிரதேசத்தை அழகு படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கட்டளை இட்டார்.

வேலைகள் மும்முரமாக நடைபெற்றன. கடமை நேரம் தவிர ஏனைய வேளைகளில் அடிமைக் கூலிகளாக அங்கே விமானப்படையினர் செயற்பட்டனர். இறுதியில் அமைச்சரும் வரவில்லை; ஆரும் கவலைப்படவும் இல்லை.



லெப்டினன்ட் பெலெங்கோ

எல்லாம் பெலெங்கோவின் விழிகளில் உதிரம் சிந்த வைத்த நிகழ்வுகள். இந்த அரசுக்கு, அடக்குமுறைக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் துளிர்விட்டது. ஆம் இவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட என்னால் முடியும். உறுதி செயல்வடிவம் பெறுகிறது.

★ ★ ★

அசுர வேகத்தில் ஜப்பானுக்கு மேலாகவட்டமடிக்கும் ''மிக் 25'' காற்றில் சுழன்று குத்தி எழும்பும் பட்டம் போல முகிற் கூட்டங்களைக் கிழித்தபடி தெரிந்தும் மறைந்தும் சாகசம் புரிந்தபடி சுழல்கிறது.

இடைமறிக்கும் நோக்கில் ஜப்பானிய விமானங்கள் தயாராகி விட்டன. ஏதோ ஆபத்து என எல்லோரும் செயற்பட ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் என்ன செய்ய முடியும்? அடர்த்தியான முகிற் கூட்டங்களுள் புகுந்து விளையாடித் தெரிவதும் மறைவதுமாக ''ராடரில்'' கூட இடைக்

## இது ஓர் உண்மைச் சம்பவம்

கிடை இடம் தெரியாமல் மின்னுவதாக ''மிக்'' கூவிக் கொண்டு வட்டமிடுகிறது. அதன் வேகமோ தனி.

எரிபொருள் நிலைமையோ நிமிடங்களைக் கடந்து செக்கன்களை எண்ணிக்கொண்டிருக்கிறது. ஆபத்து மணி அலறி சிவப்பு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அடர்த்தியான முகில்கள் தரையை இனம் காட்ட மறுக்கின்றன. நேரம் ஒரு மணி 47 நிமிடம் 58 செக்கன்.

பாதை வகுத்தபின்னே பயந்தென்ன லாபம்? ஏவுகணையா, பீரங்கியா, எதிர்ப்பு விமானமா, வருவது வரட்டும். எரிபொருள் தீரப்போகிறதே. முகிற் புகார்களினூடே தரையே தென்படாத போதும் குத்தியபடி இறங்கிக்கொண்டிருக்கும் விமானத்தின் உயரம் 1000 அடிகளிலிருந்து 800, 600, 400, 200 ...... 200 இல் முகிற்கூட்டங்கள் விடுபட்டுப் போகின்றன. உலகம் பிரகாசமாகத் தெரிகிறது. ஜப்பானிய மண் — உழைக்கும்பூமி — அசுர வேகத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இவ்வளவு கிட்டக் கண்டானா அவன்?

திடீரெனப் பெரிதாய் தாழத் தென்படும் விமானம் ஏற்படுத்திய பரபரப்பு சொல்லி மாளாது. அதன் தோற்றம், உறுமல், அண்மை, நிறம், வேகம் எல்லாமே கண்டாரைக் கலங்கவைத்து செயல் இழக்க வைத்து விட்டது.

நிதானமாக மேலெழும்பிக்கொண்டிருக்கும் ஜப்பானிய வர்த்தக விமானமொன்று மயிரிழையில் தப்பிவிட்டது. அது ''ஹக்கோடேற்'' (Hakodate) விமானத் தளத்தை கோடி காட்டியது. ஓடுபாதை தென்படுகிறது. அதன் நீளத்தினைக் கண்களால் அளக்கும்போது பெலெங்கோவின் முகம் சுருங்கிவிட்டது. பாவம், கைக்கெட்டியது வாய்க்.........

''மிக் 25'' தரையிறகத் தேவையான ஓடுபாதையின் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கே இத்தளம் இருக்கும். அத்துடன் ஓடுபாதைக்கு அனுமதி இன்றிச் சமீபித்து விட்ட அவன் வேகமோ 220 நொட்ஸ். சில்லுகள் ஏற்கனவே வெளிப்பட்டுவிட்டன. துணிந்து அந்த வேகத்திலும் தரையிறங்கினான் பெலெங்கோ. சில்லுகள் ஓடுபாதையை முத்தமா இட்டன ?கிழித்தன! கிழிந்தன !!

சமாளிக்க முடியாத வேகம் போதாதென்று கிழிந்தும், தீய்ந்தும் புகையும் ரயர்கள். நிறுத்திகளை மிகவும் அழுத்தமாகப் பிரயோகித்தான் பெலெங்கோ. கண் இமைப்பதற்குள் ஓடுபாதை முடிவடையும் தறுவாய் வேகம். கட்டுப்படுத்த முடியவில்லை. ஓடுபாதை [illegible] யில் கம்பங்களைத் தட்டிச் சாய்த்து முன்னேறிய விமானம் 250 மீற்றர் தூரத்தில் ஒருவாறு நிறுத்தப்பட்டது. நல்ல வேளையாக இன்னும் சில மீற்றர்கள் முன்னே உள்ள பிரதான வீதியில் சாரி சாரியாக சென்று கொண்டிருக்கும் வாகன அணிகள் தப்பித்துக் கொண்டன.

திகைத்து நின்ற வாகனங்கள் பல. கமராக்களுடன் வெளிப்பட்டோர் பலர். விமானத்தை நோக்கி விரைந்தனர் ஜப்பானிய அதிகாரிகள். சடாரெனத் துள்ளி எழும்பிய பெலெங்கோ வெளியே தலைப்பட்டான். கைத் துப்பாக்கியால் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தான். அவனை மொய்த்த பலரும் பின்வாங்கினர்.

வழி தவறி வந்து, ஆபத்திலிருந்து தன்னைக் காக்கப் புகுந்து மாட்டிக் கொண்டபருந்து எனவே பலரும் நினைத்தனர். கேட்டும் விட்டனர் ஜப்பானிய அதிகாரிகள்.

''இல்லை. நான் வலிய வந்தேன். அமெரிக்காவுக்குப் பரிசு கொண்டு வந்திருக்கிறேன் அமெரிக்காவிடம் அரசியல் தஞ்சம் கோருகிறேன்' — என்று அவசரப்பட்டான் பெலெங்கோ.

விடயம் புரிந்ததும் அவனுக்குக் கிடைத்த வரவேற்பைப் பற்றிக் கூறவா வேண்டும்?

ஜப்பானிய ஹோட்டல் ஒன்றில் பிரமாதமான ராஜ உபசாரம். குளித்து விட்டு வந்தவன் வாழ்க்கையில் கண்டிராத உணவு வகைகளைப் பார்த்துப் பிரமித்துப் போனான். அவற்றின் சுவையோ இமயத்தை எட்டிற்று. வெளி உலகச் சுதந்திரங்களும் மனிதர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கையும் தென்படத் தொடங்கின. ஆனால் இவற்றையெல்லாம் அனுபவித்து மயங்கும் ஒரு சுயநல



'மிக்-25' விமானம்

வாதியாக அவன் இங்கு வரவில்லை.

தனது நலனும் சுதந்திரமும் கருதி அவன் அந்த விமானத்தைக் கடத்தி விடவில்லை. அடிமை வாழ்வு வாழும் ஆயிரமாயிரம் தனது தோழர்களின் துன்பத்தைத் துடைக்க வழி தெரியாமல் தவித்துத் தனது சர்வாதிகார அரசுக்கு ஒரு பாடம்

தமிழில்
மு. சிவநேசன்

புகட்டவே அவன் இச்செயற்கரிய செயலைச் செய்தான். எனவே எதற்கும் மயங்கும் நிலையில் அவன் இல்லை.

உலகம் முழுவதும் செய்தி பறந்தது. ஜப்பான் அமெரிக்காவுக்கு உடன் தகவல் தந்தது. அப்போது வாஷிங்டனில் நேரம் நள்ளிரவைக் கடந்து மணி 12.50 ஐ எட்டி இருந்தது.

அந்த வேளையிலும் ''பென்ரகன்'' அதிகாரிகள் விழித்துக்கொண்டனர். அமெரிக்கா சுறுசுறுப்படை[illegible] தொடங்கியது. குதூகலமும் விண்ணை முட்டியது. ஆம் அவர்களின் இரகசியப் பாஷையில் ஒரு ''Foxbat'' முழுமையாக அகப்பட்டுக் கொண்டது.

சோவியத் விமானங்கள் ஜப்பானை ஈக்கள் போல மொய்த்தன. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. எனவே அவற்றால் தாழப் பதிந்து நெருங்க இயலவில்லை. மேலும் ஒரு ''Foxbat'' ஐ இழக்க ரஷ்யா தயார் இல்லை. ரஷ்ய கடற்படையினர் ஜப்பானியக் கடலில் இறங்கி அட்டகாசம் செய்தனர்; பல ஜப்பானிய மீன்பிடி றோலர்கள் கடத்தப்பட்டு மாலுமிகள் கைது செய்யப்பட்டனர். என்ன செய்தாலும் இலகுவில் ஜப்பானை மிரட்டவோ ''மிக் 25'' ஐ திரும்பப் பெறவோ இயலாது என்பதை சோவியத் உணராமல் இல்லை. அதனைக் குண்டுவீசித் தகர்க்கக்கூட ஒரு சந்தர்ப்பத்தை ஜப்பான் கொடுக்கவில்லை. இழந்தவன் தவிப்பும் பெற்றவன் குதூகலிப்பும் சொல்லியா தெரியவேண்டும்?

லெப்டினன்ட் பெலெங்கோவைச் சந்திக்க விரும்பிய ஜப்பானின் சோவியத் தூதரக அதிகாரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? என்று தான். அது போல் தன்னைச் சந்தித்துக் கெஞ்சிய அதிகாரிகளின் முகம் முறியத் தனது கருத்துக்களைச் சுதந்திரமாகக் கூறிவிட்டான் பெலெங்கோ. அந்த அதிகாரிகளால் இறுதியில் அவனை வாயாரத் திட்ட முடிந்ததே தவிர வேறில்லை.

இரண்டாம் உலகப்போரின் பின் உலகநாடுஒன்று சந்தித்த பாரிய பின்னடைவு இது எனலாம். தனது அதி உச்ச இரகசியங்கள் அடங்கிய விமானத்தையும், விமானப் படையின் உள்விவகாரங்கள் அதிகம் தெரிந்த விமானியையும் இழந்து நிற்கிறது ரஷ்யா. அதுவும் எதிரிகள் கையில் முழுமையாக விட்டுவைப்பது எப்படி முடியும்?

அமெரிக்க அதிபர் ஜெரால்ட் போட் அவனுக்கு அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கொடுக்க முடிவெடுத்தார். இந்த முடிவு ரஷ்யாவுக்கு வேம்பாகக் கசந்ததில் வியப்பேதும்இல்லை. அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் மாறி மாறிப் பறந்த ரஷ்ய உயர் அதிகாரிகளும் அமைச்சர்களும் விமானியையும் விமானத்தையும் திரும்பப் பெறத் துடித்தனர்.

ரஷ்யா கெஞ்சுவதும் மிரட்டுவதுமாக தனது உத்திகளைத் தொடர்ந்தது. ரஷ்யாவின் பிரசாரம் அமெரிக்காவுக்கு எதிராக முடுக்கி விடப்பட்டது. ஒன்றுக்கொன்று முரணான செய்திகள் வெளிவந்தன.

விமானம் ஆபத்தில் மாட்டி வழிதவறி ஜப்பானில் தரையிறங்கி விட்டதாகவும், ஜப்பானிய — அமெரிக்க அதிகாரிகள் விமானியை வசப்படுத்தி போலித் தகவல்களை தருவதாகவும் ரஷ்யா பிரசாரம் செய்தது.

பெலெங்கோ மன்னிக்கப் படுவான் என்றெல்லாம் அறிவிக்கப்பட்டது. அவனது மனைவி, குழந்தை எல்லோரும் சோக முகத்துடன் தொலைக்காட்சியில் தோன்றினர். அவர்களின் சோகக் கோரிக்கைகள் பத்திரிகைகளில் வெளியாகின. பெலெங்கோவின் மனதைத் தொட ரஷ்யாவால் இயல

(VII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பல்.....

(IV ஆம் பக்கத் தொடர்)

சாமான்கள், ஆடு, மாடு, கோழியள் ஆர்வீட்டை நிக்கு தெண்டு துளாவுற வேலை. எங்க, எதிலை, ஆரிட்டைப் பிடுங்கிறது எண்ட நினைப்பு.

''மாமா! உங்களுக்குச் சரியான கஷ்டம்; இனியும் ஏன் அப்பிடி? மாட்டைக் கொண்டு போய் நான் வளர்க்கிறன்.''

பெருந்தன்மையா எல்லாம் ஒப்படைச்சிட்டன். இல்லா விட்டால் அவள் விட்டுட்டா போகப் போறாள்? நிக்கிற நிலையிலை பிடுங்கிக் கொண்டுதான் போயிருப்பாள்.

''வாங்கி வச்ச தவிட்டுமூட்டையையும் புண்ணாக்கையும் அவளிட்டையே குடுத்துத் துலைச்சு விடுங்கோ. இனியென்ன வைச்சிருந்து ஏன்?''—என்றாள் செங்கமலம்.

''இந்த மாடு வளர்ப்பிலை என்னதான் கண்ட சுகம்? அலைச்சலும் செலவும் தான் மிச்சம். பால் கறக்கிறநேரம் கொண்டு போறாள் யோகக்காறி'' — என்றாள் மகள் விஜி.

''நானென்ன ஆசைப்பட்டதே. தேடி வந்து தள்ளிட்டுப் போட்டாங்கள். இப்ப காலம் சரியெண்டதும் வந்து பிடுங்கிக் கொண்டு போறாங்கள்.''

சேதுபதி வரட்டும். அறிஞ்சால் கவலைப்படுவான். அவனுக்கு ஞாயம் விளங்கும். இவளிடை திமிர்க்கதைக்கு எதிர்க்கதை கதைக்க நான் போக்கிலி இல்லை. இவள் என்னைத் தங்கடை மாடு மேய்க்கிற மாணிக்கம் எண்டு நினைச்சிட்டாள். என்ரை மனுசி; பிள்ளையளுக்கு சரியான மனவருத்தம். இவை நடந்த முறையள்.?

'அப்பா மாடும் கண்டும் வாசலிலை வந்து நிக்குது' அண்டைக்குப் பின்னேரமே மகள் சொன்னாள்.

மேயவிட்ட இடத்தாலை இஞ்ச தேடி வந்திடும். இப்படி தினமும் வாறதும் புஷ்பா கத்தி திட்டிக் கொண்டுவந்து கலைக்கிறதும் வழமையாச்சு,

''என்ன மாமா. மருந்து, மாயம் போட்டு மாட்டை வளைச்சு வச்சிருக்கிறியள். அங்கை நிண்டால் தின்னாது, முடியாது. நினைவெல்லாம் இஞ்ச ஓடியாறதுக்குத்தான். இதோடை இனி என்னாலை ஆட ஏலாது. விக்கவேணும். நீங்கள் வாங்கி வளவுங்கோவன். வேண்டாம் எண்டால் ஆரையாவது தேடிக் குடுப்பம்.''

என்ன மனிதர்கள் எனப் பெருமூச்சு விட்டேன். மாடு அது என் அன்புக்கு அடிமை. அதற்காக விலை கொடுத்து வில்லங்கத்தை வாங்க நான் தயாரில்லை. மனதைக் கல்லாக்கிக் கொண்டேன். அதன் பண்புக்கு விலையும் மதிக்க முடியாது.

''எனக்கு ஏனடி பிள்ளை இந்த மாடு? நான்படுற பாடு போதும்.''

''ஓசி எண்டால் விழுந்து பால் குடிப்பியள். விலைஎண்டதும் பின் வாங்குறியள். என்ன மனுசர் நீங்கள்.?''—எண்டாளே.

எனது பொறுமைக்கும் எல்லை இருக்கு எனஆர் அறிவார்? எனது சங்கடமான நிலைமை செங்கமலத்தையும் மகளையும் கலங்க அடிச்சுது. இவளிடம் இப்படியெல்லாம் கேட்க வேண்டிய விதியா?

மௌனமாக நின்ற அவர்களின் விழிகளில் நீர் கோர்த்து நின்றது. விபுலன் கொதிப்பில் — தவிப்பில்— நின்றான். விட்டால் அவளைப் பச்சையாகத் திண்டிருப்பான்.

எனக்கு மனசு கனத்தது. மாட்டின் அன்பு அவ்வளவு. றோட்டிலை போகிறப்போ பிறகாலை வருகுது; செல்லமா முட்டுது; தடவச் சொல்லி தாடையை, கழுத்தை, நீட்டுது. இவள் பாவி கண்டால்......?

மாட்டுக்கு ஒளிச்சு பாதை மாறி திரியிற நிலைமை எனக்கு. என்னைப் பற்றி என்ன நினைக்குமோ தெரியாது. பாவம் அன்புக்கு ஏங்குது.

இறைச்சிக்கு விற்கவும் அவள் தயார இருக்கிறாள். கன்றும் நல்லா வளர்ந்துவிட்டுது. தகப்பன் வரமுதல் விக்கவேணும் எண்டுதான் துடித்தவள். என்னஆச்சோ.?

நினைவுச் சுழல் சுழன்று மீண்டும் உறங்கிப்போனேன். விடிஞ்சதும் விதானையார் வந்திட்டார்.

''என்ன மணியம் வேளைக்கே வெளிக்கிட்டாச்சு?'' — நான் கேட்டேன்.

''ஓம் பாருங்கோ. இப்ப வேலையள் கனக்க. சனம் திரும்பி வந்து கொண்டிருக்குது. கப்பல், பிளேன் எண்டு போக்கெண்டும் இருக்கு. எல்லாம் எங்கடைபாடுதான் வேலைப்பாடுகள், பாஸ் குடுப்பு, படம் எடுப்பு, பதிவுகள், வழக்குகள் எண்டு ஒரே தடல்புடல்''

''நேற்றும் வந்தனீராம் என்ன விசயம்?''

''சேதுபதியார்தான் கூட்டிக்கொண்டு வந்தவர். ஏதோ கதைக்க வேணுமாம். விசயம் சொல்ல இல்லை. அவற்றை மனதுக்கை இருக்கிறதைப் பிடுங்க ஏலாது பாருங்கோ. பிறகு வாறம். நிப்பியள்தானே?''

''சரி. சரி நேற்று. தம்பியும் உம்மைத் தேடி வந்தவன். பிள்ளைக்கு இண்டைக்கு இன்டர்வியூ எண்டு.''

''ஓம் அதையும் இப்படி கொண்டுவரச் சொல்லுங்கோ. எல்லாம் செய்து தந்திட்டுப் போறன்.''

விதானையார் சொன்ன பக்கத்துவீட்டு நாய்ச் சண்டை நல்ல சுவாரசியம்தான். இப்ப பொலிஸ் கேஸ். இன்னும் கோடு திறக்காததுதான் தாமதம்.

வன்னிக்கு ஆரோ போகையுக்கை அதுகளின்ரை பொமனேரியன் குட்டியளை குடுத்திட்டு போட்டினம். அதுகள் இப்ப வளர்ந்து, குடிபெருகி, குட்டியளும் போட்டு, வீடு முழுக்க ஒரே கும்மாளம், ஒரே குளு குளு.

வந்து பார்த்தாப்போலை குடுத்தவைக்கு ஆசை வந்திடுத்து. குடுத்த அளவா கேட்டால் பறவாயில்லை. கூட்டமா முழுதும் கொண்டு போக நிக்கினம். பத்தாயிரம் செலவிலை கூடு. பல ஆயிரம் செலவிலை மருந்து, மாயம். வெள்ளிக்கிழமையும் இறைச்சிச் சாப்பாடு எண்டு வளர்த்ததுகள்; குடுக்க உடன்படுங்களே?

உப்பிடி ஆசைப்பட்டு வளர்க்கிறவை சொந்த நாய் வளர்த்து இருக்கலாம். எல்லாரும் விட்டிட்டுப் போக, இருக்கிறவைக்கு இப்பிடி ஆசையள் வந்துதானே சோலி கூடிப்போச்சு. இன்னொரு இடத்திலை ஆட்டுக் கொட்டிலுக்கை அலுசேஷன் நிக்குது. ஒரு நாள் இரண்டு ஆட்டுக் குட்டிகள் காலி; இடைக்கிடை கோழியள் மாயம். இப்பிடி இரவல் நாய் வளர்த்து அயலெல்லாம் பகை.

வெள்ளைக்காரன் மாதிரி நாய்க்கு வழக்கு வைக்கிற அளவுக்கு எங்கடை சனம் முன்னேறிவிட்டுது. தாய்ப்பாசம் இருக்கோ இல்லையோ நாய்ப்பாசத்துக்கு குறைவில்லை.

எல்லாத்துக்கும் சாட்சி சொல்ல விதானைமார் படுகிற பாடு, ஆருக்காக கதைக்கிறது?

இனி மிச்சம் இருக்கிற சனமும் திரும்பிவர வழக்குகள் மலியப் போகுது. எல்லாத்தையும் பார்க்கத்தானே் போறம்.

''விதானையார் போட்டாரே?'' — கேட்டபடி வந்தான் சேதுபதி.

''வாங்கோ அண்ணை, நேற்றும் வந்தனியளாம், எப்படி சுகங்கள்? வன்னிப் பாடுகள் எப்பிடி?''

''அதெல்லாம் பிறகு பேசுவம். நீர் என்ன வேலை செய்தனீர்? வீட்டுப் பொறுப்பெல்லோ உம்மட்டை விட்டிட்டு போனனான். விளையாடிப்போட்டு சிரிக்கிறீர்.''

சரியான கொதிப்பில் இவர் நிற்கிறார். ஏதும் விளக்கம் கூறிவிட முடியாது. அவர் பாரம் தந்த லட்சணம் புரியாமல் பேசுகிறார்.

''நான் என்ன பாருங்கோ செய்யிறது. நீங்கள், மகள் எல்லாம் ஒண்டு. நான் பிறத்தி தானே. என்னோடை ஏன் வாறியள்?

''சின்னவளிடை வீடு ஒண்டும் மிச்சமில்லை. அவள் எல்லாம் வித்துப்போட்டாள். யன்னல், கிறில் ஈறா இல்லை. எவ்வளவு எலற்றிக் சாமான்? வீடு காலியாகக் கிடக்கு. உம்மை நம்பின லட்சணம்.''

விபுலன் ஏதோ பேச வாய் எடுத்தான். உள்ளே அனுப்பி விட்டேன். சேதுபதி ஓயவில்லை.

''நீர் ஏன் வீட்டையும் மாட்டையும் குடுத்தனீர்? என்ரை கடிதத்தை கொண்டுவா எண்டு கேட்டிருக்கலாமெல்லே. நீர்தான் எல்லாம் மீட்டுத்தரவேணும்'' அடம் பிடித்தார்.

''அண்ணை தயவுசெய்து என்னோடை கத்தாமல் போங்கோ''

''அவளிலை வழக்கு வைக்கப்போறன். சாட்சி சொல்ல வாரும். நாளைக்கு சின்னவள் வர்ற—நேரம் பாவம் எல்லே. இவள் சண்டாளி.''

''அண்ணை எத்தினை வீட்டிலை ஊரவன் கொள்ளை அடிச்சுப்போட்டான்? ஷெல்பட்டு அழிஞ்சு போச்சு. உதுமகள் தானே எடுத்தது. பிறத்தியே? மனம் ஆறி இருங்கோ. வெளிநாட்டார் இனி வருவினமே? அவைக்கென்ன இதுகளை வைச்சு காவல் காக்கிறீர்?''

''அவளுக்கு சப்போட் பண்ணுறியா ராசரத்தினம்? நீயும் அப்ப எதிரியா வா! வழக்கில சந்திப்பம்.''—சொல்லிவிட்டு சடாரென திரும்புகிறார் சேதுபதி. ★

# விடியலைத்.....

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. இழைத்த தவறுகளுக்கு இப்படிப் பிராயச்சித்தம் தேடல் முடியுமா?

''மிக் 25''ன் இரகசியங்கள் அம்பலம் ஆகப் போகின்றன. ரஷ்யா தனது பாதுகாப்புத் துறையையே மீளாய்வு செய்ய வேண்டிய கட்டம் எழுகிறது. இழப்பு ஈடு செய்யப்பட மாட்டாது. காலம் கடக்கிறது. காரியம் கை நழுவிப் போகிறது.

அமெரிக்காவில் வந்திறங்கிய பெலெங்கோ அங்கே இயற்கையாக மனிதர்கள் வாழும் சுதந்திர வாழ்வைக் கண்டு பிரமித்துப் போனான். இது தனக்காக ஜோடிக்கப்பட்ட சுதந்திர நகரமா என்றும் கூடச் சந்தேகித்தான். இடத்துக்கு இடம் போகப் போக எல்லாம் நிஜமே என உணர்ந்தான்.

விமானியை அமெரிக்காவிடம் ஒப்படைத்த ஜப்பான் விமானத்தை ஒப்படைக்கும் விடயத்தில் முரண்டு பிடிக்கத் தொடங்கியது. தனது நாட்டு சட்டங்களை மீறி உள்ளே வந்த விமானத்தை அது சொந்தம் கொண்டாட நினைத்தது.

விமானத்தைப் பரீட்சித்து பறந்து பார்த்து ஆராய வேண்டும்; அதை முழுமையாகப் பேணவேண்டும் என்பது அமெரிக்காவின் வாதம்.

அதை அங்குலம் அங்குலமாக உரித்தெடுத்து ஆராய்ந்து விட ஜப்பான் துடித்தது. ஈற்றில் அமெரிக்க அதிகாரிகள் சிவில் உடையில் வந்து விமானத்தை ஆராயும் பணியில் உதவலாம் எனவும் ஜப்பான் கேட்டுக்கொண்டது. விமானம் சல்லடை போடப்பட்டது. ஆராய ஆராய விமானம்பலம் இழந்து அதன் பலவீனங்களே வெளிப்படத் தொடங்கின.

தரங்குறைந்த—பாரமான உருக்கு உலோகம், கையினால் வெல்டிங் செய்யப்பட்ட மூட்டுக்கள், செலவு குறைந்த மனித வளம் பயன்படுத்தப்பட்ட தயாரிப்பு முயற்சிகள், வேகத்துக்கும் உயரப் பறப்பதற்கும் ஏற்ற அளவுக்கு செயல் திறன் இன்மை என்பன கண்டுபிடிக்கப்பட்டன. இதில் அதிகம் படிப்பதற்கு ஏதுமில்லை வானில் இதைக் கண்டு இனி அஞ்ச வேண்டியதில்லை என்பது மட்டும் உண்மை. இதை இனிமேல் வெட்டி ஆடலாம் என்ற உண்மைகள் புலனாகின. அதன் சாயம் வெளுத்துப் போனது.

ஆராய்ச்சி முடிந்தாலும் ரஷ்யாவின் கெஞ்சல்களும் மிரட்டல்களும் ஓய்ந்தபாடில்லை. இனிமேல் இதில் ஏதுமில்லை என்ற நிலையில் இதை துண்டு துண்டாக ஒப்படைக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டது. கடத்தல் நாடகம் நடைபெற்று 67 நாள்களின் பின் நவம்பர் 12 ஆம் திகதி விமானம் மூடை முடிச்சுகளாகக் கப்பல் ஏறியது.

கடுமையானபாதுகாப்புக்கு மத்தியில் ஜப்பானின் ஹிற்ராச்சி துறைமுக இறங்குதுறையில் வந்து தரித்த ரஷ்ய கடற்படைக் கப்பலில் விமானத்தின் பாகங்கள் ஏற்றப்பட்டன, விமானம் முழுவதும் ஒப்படைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்து கொண்ட ரஷ்ய அதிகாரிகள் புறப்பட்டனர்.

விமானி லெப்டினன்ட் பெலெங்கோவின் வனவாசம் மட்டும் அமெரிக்காவில் தொடர்ந்தது. அவன் எப்போதுமே ஒரு புதுமை விரும்பி போலச் செயற்படுகிறான். எவரும் எதிர்பார்க்காத அதிர்ச்சிதரும் முடிவுகளை எல்லாம் எடுக்கிறான். ஒரு புரியாத புதிர் போலவும் இருக்கிறது.

ஆம் அவன் மீண்டும் ஒரு சாதனை செய்யத் தயாராகிறான். வெகுதுணிச்சலான பாதையில் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திப் புறப்படத் தயாராகிறான்! ஏன்? ...... எங்கே? ...... எப்படி? ......

(தொடரும்)

# ஸ்ரீ. ல. சு. கட்சியின்...

(V ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்த முதலாவது சந்தர்ப்பம் இதுவே ஆகும்.

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக பேச்சு வார்த்தைகளை முறித்துக் கொண்டபோது ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குவதாக ஐ. தே. கட்சி அறிவித்தது.

அரசின் தீர்வுத்திட்டம் குறித்தும் ஐ.தே.க. வெளிப்படையாக எதிர்ப்பை வெளியிடவில்லை. இது சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுவதற்கான திட்டமா? அல்லது வேறு ஏதாவது தந்திரம் இதில் அடங்கியுள்ளதா? எனக் கூற முடியாதுள்ளது.

இருப்பினும் உள்நோக்கம் எதுவாயினும் ஒன்றை அவதானிக்க முடிகிறது. இனப்பிரச்சினை தொடர்பான பந்துவிளையாட்டு வரலாற்றில் முதன் முறையாக 1994க்குப் பின்னர் எதிர்க்கட்சி ஈடுபடவில்லை. இக்காரணத்தினால்தான் இனப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் உடன்பாடு ஒன்றை எட்ட முடிந்தது போலும்,

எதிர்க்கட்சியின் பொது உடன்பாட்டுடன் ஜனாதிபதி சந்திரிக்கா பிரபாகரனுடன் சமாதானப் பேச்சுக்குத் தயாராகிறார். ஆனால் இந்த முறையும் ஏமாற்று முயற்சிதானா என்பது அனைவரும் எழுப்பும் கேள்வியாகும். இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

அன்று சிங்களத் தலைவர்கள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துதமிழர்களை ஏமாற்றி இனப்பிரச்சினை என்ற பந்தை விரும்பிய பக்கத்திற்கு விரும்பியவாறு அடித்தனர். ஆனால் இன்று சிங்களத் தலைவர்கள் பொது உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளத் தயார்.

1959 இல் இருந்து 1996 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களுக்கும் 1997 இல் நடைபெறக்கூடிய பேச்சுக்களுக்கும் இடையேயான வித்தியாசம் இதுவே ஆகும்.

1959 —1996 கால கட்டத்தில் தமிழ் மக்களுக்கு புதுப் போத்தலில் பழைய 'வைன்' வழங்கப்பட்டது. ஆனால் இம் முறை 'வைனும்' புதிது. போத்தலும் புதிது. இந்த 'வைனை' பிரபாகரன் குடிப்பாராஎன்பதே தற்போதுள்ள பிரச்சினையாகும். ★

# பிறமொழி.....

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

raccoon (மாமிசம் உண்ணும் சிறிய மிருகம்) tomahawk (கைக்கோடரி) tctem (குலக்குறி) போன்ற சொற்கள் ஆங்கிலத்தை வந்தடைந்தன.

அமெரிக்கப் புரட்சிக்குப் பின் வேறுபட்ட வரலாற்றுப் போக்குகளினால் அமெரிக்கா தனித்துவமான முறையில் வளர்ச்சி அடைந்தது. அமெரிக்காவில் ஆங்கிலம் சில புதிய பண்புகளைப் பெற்று வளரலாயிற்று. பிறமொழிச் சொற்கள் ஆங்கிலத்துக்கு ஏற்புடையதா என்று 'அக்கடமி' வைத்து ஆராய வேண்டும் என்று மொழித் தூய்மை இயக்கம் தலை தூக்கியது. மொழியைக் காப்பாற்றுவது தமது கடமை என்று இலக்கண வித்துவான்கள் சிலர் தம்மைத் தாமே நியமித்துக்கொண்டார்கள். றொபின்சன் குருசோ என்ற நூலின் ஆசிரியரான டானியல் குபே ''நாணயத்தைச் சாதாரண மக்கள் தயாரிப்பது எவ்வளவு பாரதூரமான குற்றமோ, அதே போன்று புதிய சொற்களை உருவாக்குவதும் பாரதூரமான குற்றச் செயலாகும்'' என்றார்.

எது எப்படியாயினும், ஆங்கிலம் புதுப்புது பிறமொழிச் சொற்களை ஏற்று உள்ளதைக் காட்டிலும் உயர்ந்து வருகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

(14 - 06 - 1997 முதல் 20 - 06 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | | புதூ* வெ |
| கே | இராசிச் சக்கரம் | | |
| வி | | | ரா |
| | | | சந் செ |

இந்தியாவின் அரசியலில் புதிய திருப்பம் ஏற்படும். எமது நாட்டின் வருமானம் பாதிப்படையும். புதிய பேச்சும் மேற்குலகத்தவர்களின் நாட்டமும் அதிகரிக்கும்: அரசியலில் எவரும் நிதானத்துடன் பேசவோ, செயற்படவோ முடியாது. கால ஓட்டத்தில் மாற்றங்களைக் கிரகநிலைகள் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

**மேடம்:** உருவாக்கத்திற்குச் சாதகமான செயற்பாடுகள் இடம்பெறும். உங்களுக்கு எவரும் உதவுவார்கள் என எதிர்பார்த்து இருக்காதீர்கள். உங்கள் முயற்சிக்கு ஏற்ப ஆதாயங்கள் கிடைக்கும். வாங்க வருவார்கள்; அயலவரும் வாழ்த்திச் செல்வர். ஏழரைச் சனியால் — பொருளால் — அதிக யோசனைகள் ஏற்படும். செலவுகளைக் கட்டுப்படுத்தி வாருங்கள். சகோதரங்கள் வீணாக மனஸ்தாபப்படுவார்கள். தொழில் தானத்தில் மத்திம பலன்கள் கொடுக்கும்.

**இடபம்:** நீங்கள் பொருளைப் பற்றி அதிகம் யோசிப்பீர்கள். அதிக பிரசங்கம் செய்தே காலத்தைக் கழிப்பீர்கள்: கண்கள், பல்லுக்கு நோ வரும். வந்தால் வைத்தியம் செய்யுங்கள். தொழில் ஸ்தாபனத்தில் நண்பர்கள் இடையிடையே கேலி செய்வார்கள். அதைப் பெரிதுபடுத்தாதீர்கள். சிரித்துவிட்டுப் போங்கள். எல்லாம் அமைதியாகும். அல்லது வாக்குக் கலகத்திற்கு ஆளாவீர்கள். பெரியவர்கள், தெய்வபக்தியுள்ளவர்களின் உதவிகள் கிடைக்கும். அந்நிய தேசத்திலிருந்து நற்செய்திகள் வரும்.

**மிதுனம்:** உங்களுக்குப் பலவித யோசனைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியானவர்கள் ஏதாவது சொல்லியபடி இருப்பார்கள். நெஞ்சில் சளி வரும். பிடிவாதத்தைச் சற்றுக் குறைத்து நற்காரியங்களில் கவனம் செலுத்துங்கள். அதனால் முன்னேற்றங்கள் கிடைக்கும். இடமாற்றங்களால் நன்மை அடைவீர்கள். தூர தேசத்திலிருந்து பொருள்வரவு அல்லது நன்மையான செய்திகள் வரும்.

**கடகம்:** உங்களுக்கு தொழிலால் அதிக யோசனைகள் தொடும். வாக்குக் கலகம் மேலிடும். கைகால் உளைவு, வயிற்றில் நோ இருக்கும். எதிர்பாலாரால் வேதனை தேடி வரும். குடும்பத்தில் குறைகுற்றங்களால் வீண் பழி வரும். இனசனங்களுடன் அவதானமாக இருத்தல் வேண்டும். பொருளால் பிரச்சினைகள் இருக்கும். தூரத்து உறவினரால் அடிக்கடி கவலைகள் வரும்.

**சிங்கம்:** எதற்கெடுத்தாலும் தடை தாமதம் இருக்கும் பலன் காணப்படுகின்றது. அடிக்கடி நிதானமற்ற சொற்பிரயோகங்கள் ஏற்பட்டபடி இருக்கும். அட்டமத்துச் சனீஸ்வரன், இராகு — கேது கிரகங்களின் தாக்கங்கள்மாறிமாறி ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் அவதானமாக இருக்கவும். கல்வியிலோ, தொழிலிலோ அவதானமாகச் செயற்படவும்.

**கன்னி:** உங்களைப் பற்றி யாரும் அறியமாட்டார்கள். அடிப்பவரும் நீங்கள்; அணைப்பவரும் நீங்கள்தான். என்னதான் கலக்கங்கள் வந்தாலும் சமாளித்துக் கொள்ளுங்கள். தொழில் ஸ்தானங்களில் ஓடி ஓடிப் பிறருக்கு உதவும் நீங்கள், இந்த வாரம் சற்று அவதானமாக இருத்தல் வேண்டும். அன்பான குடும்பம், கிடைத்த பொருளில் வேதனை எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளல் வேண்டும். மத்திம வருமானம் வரும். புத்திருக்காகவோ அல்லது சகோதரர்களுக்காகவோ அதிக செலவுகள் செய்வீர்கள்.

**துலாம்:** இந்த உலகத்தில் போராடி வெற்றி பெறத் துடிக்கும் நீங்கள், எதற்கும் தயாரான நிலையில் இருந்து செயற்பட்டு வெற்றி அடையலாம். காலில் உளைவுக்குத் தைலங்கள் பாவியுங்கள். வீட்டில் சிறு, சிறு மாற்றங்கள். இராகு — கேது மாற்றத்தால் இனஜனப் பகை ஏற்பட்டாலும் பின்பு சரிப்பட்டுச் சமாதானம் பிறக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் இருப்பினும் அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது.

## மகாதேவா ஜோதிடம்

**விருச்சிகம்:** நீங்கள் எப்பொழுதும் கலகலப்பாகவே இருக்கப் பிரியப்படுவீர்கள். உங்களை விளங்கிக் கொள்ள முடியாது. பணத்தைப்பற்றி அதிகம் யோசிக்காதீர்கள். பணக் கஷ்டம் எல்லோருக்கும் உண்டு. புத்திரர் கல்வி குறித்தும் சகோதரங்களின் மாற்றங்களாலும் அதிகம் யோசிப்பீர்கள். வீண் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் பலதும் பத்தும் நடக்கும். அதிகம் பேசாது அமைதியாக இருந்து சமாளியுங்கள்.

**தனுசு:** உங்களுக்கு ஏட்டிக்குப்போட்டியான சம்பவங்கள் நடக்கும். எதிர்நீச்சலிட்டு எந்தச் சவாலையும் சமாளித்துப் பழகிய உங்களுக்கு இது பெரிய விஷயமல்ல. உள்ளத்தில் கள்ளம் வைத்து உதவுபவர்களைப் பிடியாத நீங்கள் தொழில் ஸ்தானத்தில் அவ்விதம் செயற்படும் ஒருசிலரைக் கண்டறிவீர்கள். குடும்பத்தின் செலவு — சினத்தைக் கொடுக்கும்: யோசனை செய்யச் செய்யும். தந்தை வழியினருக்கு நல்லதல்ல. தெய்வ வழிபாடு நன்மை கொடுக்கும்.


**மகரம்:** உங்களுக்கு அடிக்கடி பொருள் பற்றிய யோசனைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும். பெரிதாக உங்களைப்பற்றிக் கற்பனை செய்துகொள்ளும் நீங்கள், சும்மா இருப்பீர்களா? பெரிய, பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள். சகோதரம் பற்றி அடிக்கடி யோசனை, பயம் மேலிடும். மறைமுகச் சத்துராதிகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும், உங்களின் அவதானங்களால் சமாளித்துக் கொள்ளுவீர்கள். வீட்டில் கொதிப்பும், நாட்டில் அரவணைப்பும் இருக்கும். நிதானமான போக்கு நன்மை தரும்.

**கும்பம்:** நீங்கள் செல்லமாக வளர்ந்தீர்கள். கஷ்டப்பட்டு வந்தீர்கள். உங்கள் குழந்தைகளின் நல்ல நிலைக்காகப் போராடுவீர்கள்: சகோதரங்களுக்காகக் கஷ்டப்படுவீர்கள். இப்படியான பலன்களைக் கடந்து வந்துகொண்டிருக்கும் நீங்கள் விடாது போராடி முன்னுக்கு வர முயலவேண்டும். பல தடை, தாமதங்கள் இவ்வாரம் ஏற்படும். மனம் சோராது செயற்படுங்கள். கஷ்டப்படுபவர்கள் எவரும் உண்மையில் பின் நோக்குவதில்லை. அதிகம் பேசிக்கொண்டிராது, செயலுருவில் காட்டுங்கள். ஏழரைச்சனி, இராகு — கேது பெயர்வுகளால் மாற்றங்கள் சகஜமாகும்.

**மீனம்:** உங்களுக்கு ஏழரைச் சனியின் தாக்கம் உண்டு. சுதந்திரமாக — ஜாலியாக — வாழ்ந்த நீங்கள், கட்டுக்கோப்புக்களை வகுக்க வேண்டும். ஏன் அதிக யோசனை? உங்கள் தொழிலிலேயே கூடிய கவனம் செலுத்தி வாருங்கள். கை, கால் பிடிப்பு, தலைவலி அவ்வவ்போது இருக்கும். ஆயினும் காரியத்தில் கண்ணாக இருந்து இலாபம் அடைய முயலுங்கள். வீட்டில் சில மாற்றங்கள், புத்திருக்காகச் செலவுகள் என்பன சர்வசாதாரணமாகும்.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 02



சொற்சிலம்பம் இல. 02
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ........................................................

விலாசம் : ........................................................

........................................................

— — — இங்கே வெட்டுக — — —

**முடிவு திகதி: 20-06-1997**

### இடமிருந்து வலம்

1. சபைக்குத் தலைவர். 6. காலையில் முற்றத்தில் போடுவது. 7. பூட்டு அவிழ்ப்பது இது. 8. ஓர் அசைச்சொல். 9. மனைவியை இழந்தவன். 11. குடியைக் கெடுக்கும். 12. வேகம். 13. இணக்கம். 17. ஒருமை அல்ல. 18. சந்திரன். 19. வேள்வி. 21. சாரளம். 22. மறைப்பது 23. இன்பம் அல்ல.

### மேலிருந்து கீழ்

1. ஒரே கருவறையில் வந்தவள். 2. பள்ளத்தைத் தாண்ட போடலாம். 3. யாம். 4. கண்ணகியின் சிறப்பு. 5. அழகு. 7. செலுத்துபவன். 9. சளி பிடித்தால் வருவது. 10. விடாய். 11. ஓர்இராசி 14. அண்ணன். 15. சுவர். 16. நோய். 18. இது ஒரு குரங்கு. 20. அலை மோதுவது இங்கே.

### கீழிருந்து மேல்

24. பல.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150.00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100.00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50.00

★ சொற் சிலம்பம் புதிர்ப் போட்டி இல: 1 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளியாகும்.

---

மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் இன்றும் "உயிருடன்" இருக்கும்

# லெனினின் உடலைப் புதைத்துவிடும் யெல்ட்சினின் கனவு நிறைவேறுமா?

சோவியத் ரஷ்யாவின் நிர்மாணச்சிற்பி எனப் போற்றப்படுவர் விளாதிமீர் லெனின். அவர் மறைந்து 75 ஆண்டுகளாகின்றன.

உலக கம்யூனிஸ்டுகளின் தனிப்பெரும் தலைவராகவும் உலகில் விடுதலைக்காகப் போராடும் பல இனங்களால், இயக்கங்களால் இன்றும் கூடப் பின்பற்றப்படும் அரிய கோட்பாடுகளை சிருஷ்டித்தவருமான லெனின் எம்மைப் பொறுத்தவரை இப்போது உயிருடன் இல்லை.

ஆனால் தீவிர கம்யூனிஸ்டுகளையும், மொஸ்கோவின் மூத்த தலைமுறையினரையும் பொறுத்தவரை அவர் இன்றும் உயிருடன் வாழ்கிறார்.

ஆம்...... மொஸ்கோ செஞ்சதுக்கத்தில் விசேட கண்ணாடிப் பேழையில் லெனினை அவர்கள் இன்றும் தரிசிக்கிறார்கள். அவரது உயிரற்ற உடலுக்கு ரஷ்ய விஞ்ஞானம் 'உயிர்' கொடுத்துப் பேணி வருகிறது.

1991 ஆம் ஆண்டு சோவியத் சாம்ராஜ்ஜியம் சிதறுண்டு எல்லைகளை வகுத்துக் கொண்ட பல நாடுகளாகப் பிளவுபட்ட பின்னர் ரஷ்ய அதிபராக வந்த பொறிஸ் யெல்ட்சின் லெனினின் உடல் செஞ்சதுக்கத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்த போது அதற்குக் கடும் எதிர்ப்பு உருவானது. யெல்ட்சினின் முடிவு மிலேச்சத்தனமானது என்று ரஷ்ய நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது,

ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் லெனின் இன்னும் மதிக்கப்படுகிறார். எனவே [illegible] கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

தனது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்து வரும் அதிபர் யெல்ட்சின் அரசியல் காரணங்களைப் புறந்தள்ளி விட்டு மதரீதியான விளக்கங்களை முன்வைத்து அதன் மூலம் லெனினின் உடல் அகற்றப்பட்டுப் புதைக்கப்பட வேண்டும் என்பதை தற்போது வலியுறுத்தத் தொடங்கியுள்ளார்.

''எமது வாதத்தை யேசு கிறிஸ்து மீது நம்பிக்கைகொண்டோர் பக்கம் திருப்புவோம். இறந்த ஒருவரின் உடலை நிலத்தில் மேல் வைத்திருப்பது நல்லதல்ல; எனவே செஞ்சதுக்கத்தில் இருந்து லெனினின் உடல் அகற்றப்பட்டு நிலத்தின் கீழ் புதைக்கப்படவேண்டும்'' என்கிறார் யெல்ட்சின்.

இந்த விவகாரத்துக்குத் தீர்வு காண மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ வாதத்தின் சான்றுகள் அனைத்தும் அகற்றப்பட்ட சுதந்திரமான செஞ்சதுக்கம் ஒன்றைக் காண அதிபர் யெல்ட்சின் கனவு காண்கிறார்.

ஆனால் நாளாந்தம் செஞ்சதுக்கத்துக்கு வந்து லெனினின் உடலைப் பார்த்துச் செல்லும் வெளிநாட்டவர்களும் மொஸ்கோவின் சாதாரணபிரஜைகளும் அவரது உடலைகம்யூனிஸவாதத்தின் சின்னமாகப் பார்ப்பதில்லை.

வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:-

''இது மிகவும் தவறான முடிவு என நான் நினைக்கிறேன். லெனினின் வாழ்க்கை ரஷ்ய வரலாற்றின் ஒரு பகுதி; அது ரஷ்யாவின் சொத்து; ஏன் அது அங்கிருந்து அகற்றப்பட வேண்டும்.? எங்களுக்கு எவரும் வரலாற்றை மறைக்க முடியாது.''
— என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கருப்பையை வாடகைக்கு விட்ட இந்தியப் பெண்மணி

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகர் சண்டிகாரைச் சேர்ந்த இளம் குடும்பப்பெண் நிர்மலாதேவி.

முதல் குழந்தை பிறந்தவுடனேயே இவரது கணவர் முடக்குவாதம் காரணமாகப் படுத்த படுக்கையாகி விட்டார்.

நோயாளியான கணவரையும், ஐந்து வயதுக் குழந்தையையும் காப்பாற்ற முடியாது கொடிய வறுமையில் சிக்கிய நிர்மலா வருமானம் தேடிப் புதிய தொழில் ஒன்றுக்கு உடன்பட்டார்.

கருத்தரிக்கும் ஆற்றல் இல்லாத ஒரு பெண்ணின் கணவருடன் செய்துகொண்ட உடன்பாட்டின்படி அந்தத் தம்பதியினரின் கருவை வளர்ப்பதற்குத் தனது கருப்பையை வாடகைக்குக் கொடுத்து உதவ நிர்மலாதேவி இணங்கினார். அதற்குக் கைமாறாக சுமார் 60 ஆயிரம் ரூபாவை வழங்க அந்தத் தம்பதியர் முன் வந்தனர்.

பிள்ளைப்பேறு இல்லாமற்போய் விடுமோ என்ற ஏக்கத்துடன் வாழ்ந்த அந்தத் தம்பதியினரின் சிசு இப்போது நிர்மலா தேவியின் வயிற்றில் வளர்கிறது.

ஆனால் அப்போதுதான் பிரச்சினையே கிளம்பியது.

சமூகக் கோட்பாடுகளையும் ஒழுக்கத்தையும் மீறிவிட்டார் எனக்கூறி நிர்மலா தேவி மீது வழக்குத் தொடரப் போவதாகப் பொலீஸார் சிலர் மிரட்டியதை அடுத்து அவர் தனது செயலுக்கு நியாயம்கேட்டு நீதிமன்றில் மனுச்செய்தார்.

தனது கருப்பையை வாடகைக்கு விட்டசெயல் நியாயமானது; சட்டபூர்வமானது; அரசமைப்புச் சட்டங்களுக்கு மாறானது அல்ல எனத் தீர்ப்பு வழங்குமாறு நீதிமன்றிடம் நிர்மலா மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமது கணவர், குழந்தை ஆகியோரைக் காப்பாற்றவும், வறுமையைப் போக்கவுமே இதற்குத் தான் உடன்பட்டதாகவும் குழந்தை பிறந்தவுடன் பெற்றோரிடம் அதை ஒப்படைத்த பின்னர் அந்தக் குழந்தைக்கும் தனக்கும் இடையேயான தொடர்புகள் முழுவதும் துண்டிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நிர்மலாவுக்குச் சார்பாக வாதிடும் சட்டத்தரணி பின்வருமாறு கூறுகிறார்:-

பிள்ளைப்பேறு இல்லாத பெற்றோருக்கு உதவ நிர்மலாதேவியைத் தூண்டியது அவரது வறுமை நிலையே ஆகும். இதில் தவறு ஒன்றும் இல்லை.

வேறு எவரோ இருவருக்குப் பிறந்த பிள்ளையைத் தத்து எடுத்துத் தமது பிள்ளையாக வளர்ப்பதை விட வாடகைத் தாய் மூலம் தங்கள் சொந்தப் பிள்ளையைப் பெற்று வளர்ப்பது பிள்ளைப்பேறு இல்லாத தம்பதிகளுக்குப் பெரும் வரப்பிரசாதமானதல்லவா? — என்று கேள்வி எழுப்புகிறார் அவர்

கருப்பையில் கருத்தரிக்கும் ஆற்றல் இல்லாத காரணத்தால் குழந்தைப்பேறு இன்றித் தவிக்கும் தம்பதியர் தங்கள் கருவைச் செயற்கை முறையில் சினைப்படுத்தி வேறு ஒரு பெண்ணின் கருப்பையில் செலுத்தி அங்கு அதனை வளர்த்தெடுத்து குழந்தையாகப் பெற்றுக் கொள்ளும் சம்பவம் மாறிவரும் உலகில் புதுமையான ஒன்றல்ல. ★

# எந்தத் திகதியின் கிழமையையும் கண்டுபிடிப்பதற்கு இலகுவான வழி

ஏதேனும் ஒரு திகதியைச் சொன்னால் அத் திகதிக்குரிய கிழமையை இலகுவாகக் கூறக் கூடிய ஒரு முறையை அன்பர் ஒருவர் அனுப்பி வைத்திருக்கிறார்.

அதற்கு ஒவ்வொரு மாதத்துக்கும் உரிய இலக்கங்களை நீங்கள் முதலில் மனப்பாடம் செய்திருக்க வேண்டும். அந்த இலக்கங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| ஜனவரி | —1 |
| பெப்ரவரி | —4 |
| மார்ச் | — 4 |
| ஏப்ரல் | — 0 |
| மே | — 2 |
| ஜூன் | — 5 |
| ஜூலை | — 0 |
| ஒகஸ்ட் | — 3 |
| செப்ரெம்பர் | — 6 |
| ஒக்ரோபர் | — 2 |
| நவம்பர் | — 4 |
| டிசம்பர் | — 6 |

இனி, எவ்வாறு கிழமையைக் கண்டுபிடிக்கலாம் என்பதைப் பார்ப்போம்.

அதற்கு பின்வரும் நான்கு இலக்கங்களை நீங்கள் கூட்ட வேண்டியிருக்கும்.

★ நீங்கள் குறிப்பிடும் திகதிக்குரிய வருடத்தின் கடைசி இரண்டு இலக்க எண்.

★ அந்த எண்ணை நான்கால் வகுக்கும் போது வரும் எண். (மிச்சம் வருவதை ஒதுக்கி விடுங்கள்)

★ குறிப்பிட்ட திகதி மட்டும்.

★ மாதத்துக்குரிய எண்.

இந்த நான்கு எண்களையும் கூட்டி ஏழால் பிரியுங்கள். எத்தனை மிச்சம் வருகின்றதோ அதனை வைத்துக்கிழமையைக் கண்டுபிடிக்கலாம்.

மிச்சமாக வரும் இலக்கத்துக்குரிய கிழமைகள் வருமாறு:-

| | |
|---|---|
| 1 — | ஞாயிறு |
| 2 — | திங்கள் |
| 3 — | செவ்வாய் |
| 4 — | புதன் |
| 5 — | வியாழன் |
| 6 — | வெள்ளி |
| 0 — | சனி |

உதாரணத்துக்கு

11-06-1997 என்ற திகதியை எடுத்துக் கொள்வோம். நாங்கள் கூட்ட வேண்டிய நான்கு எண்களும் வருமாறு:-

★ வருடத்தின் கடைசி இரண்டு இலக்க எண் —97

★ அந்த எண்ணை நான்கால் வகுக்கும்போது வரும் எண்—24 (மிச்சமாக வரும் 1 என்ற எண்ஒதுக்கப்படுகிறது,

★ சம்பந்தப்பட்ட திகதி —11

★ ஆறாம் (ஜூன்) மாதத்துக்குரிய இலக்கம்—5

ஆகவே 97, 24, 11, 5 ஆகிய எண்களைக் கூட்டி ஏழால் வகுப்போம்.

97+24+11+5=137

137 ஐ 7 ஆல் பிரிக்க நான்கு என்ற எண் மிச்சமாக வரும். 4 என்ற எண்ணுக்குரிய கிழமை புதனாகும்.

எனவே 11-06-1997 என்ற திகதி புதன்கிழமை ஆகும்.

## பெயர் மாற்றத்தால் வந்த குழப்பம்

கிளர்ச்சிப் படைத் தலைவர் லோறன் கபீலா, ஸயர் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி அதைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் அந்த நாட்டின் பெயரை 'கொங்கோ ஜனநாயகக் குடியரசு' என்ற பழைய பெயருக்கு மாற்றியமைத்து விட்டதாக அறிவித்ததும் தெரிந்ததே.

ஆனால் இந்தப் பெயர் மாற்றம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஸயருக்கு அருகில் அதே போன்ற விஸ்தீரணம் உள்ள அயல் நாடு ஒன்றுள்ளது. அந்த நாட்டுக்குப் பெயர் 'கொங்கோ குடியரசு'.

எனவே 'கொங்கோ குடியரசுக்கு' அருகில் 'கொங்கோ ஜனநாயகக் குடியரசு' என்ற புதிய நாட்டை உருவாக்கியிருக்கின்றார் கபீலா. இதனால் இனி, எந்த நாட்டையும் 'கொங்கோ' என்ற தனிப் பெயரில் அழைக்க முடியாது.

ஒன்றில் பழையதை 'கொங்கோ குடியரசு' என்றோ அல்லது ஸயரை 'கொங்கோ ஜனநாயகக் குடியரசு' என்றோதான் அழைக்க முடியும்.

இதே போன்று ஸ்ரீலங்காவினதும் பெயர் 'ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிஸ குடியரசு' என்பதாகும்.

இவ்வாறு 'ஜனநாயகம்' என்ற சொல்லைத் தனது நாட்டின் பெயருடன் வைத்துக் கொண்டு ஜனநாயக செயற்பாடுகளைக் குழி தோண்டிப் புதைக்கும் நாடுகளின் பட்டியலில் அல்ஜீரியா, எதியோப்பியா போன்ற நாடுகளும் உள்ளன என்கின்றது 'நியூஸ் வீக்' சஞ்சிகை. ★

# அமெரிக்க மாணவரின் அறிவுத் திறமை!

விஞ்ஞான சாதனைகளில் முன்னணியில் திகழ்வது அமெரிக்கா. அத்தகைய நாட்டில் உயர்கல்லூரி மாணவர்களிடையே ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறது அரச ஆணைக்குழு ஒன்று. இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கும் திடுக்கிடும் தகவல்கள் சில:-

★ அமெரிக்க சரித்திரம் குறித்து ஒருவருட கல்வியை முடித்திருக்கும் — 17 வயதுடைய — உயர்கல்லூரி மாணவர்களில் 68 வீதமானோருக்கு அமெரிக்க சிவில் யுத்தம் எப்போது நடைபெற்றது என்பது தெரியாது.

★ கொலம்பஸ் 1750 ஆம் ஆண்டுக்கும் பின்னர்தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் எனப் பதிலளித்திருக்கின்றனர் மூன்றில் ஒருபகுதி மாணவர்கள்.

# பிழைக்கத் தெரிந்த பிரிட்டிஷ் இளவரசன்

இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியா மகாராணி தன் பேரன் ஐந்தாம் ஜோர்ஜை இளமையில் வெளிநாட்டில் ஒரு கப்பல் கட்டுந்துறையில் பணிபுரிய அனுப்பியிருந்தார். பேரனுடைய செலவுக்கு அங்கு கிடைக்கும் சம்பளம் போதாது என்று எண்ணித் தானும் ஓர் ஐம்பது பவுண்களை மாதந்தோறும் அனுப்பிக் கொண்டிருந்தார்.

ஆனால் தன் செலவுக்கு இந்தப் பணமும் போதவில்லை என ஐந்தாம் ஜோர்ஜ் தனது பாட்டி விக்டோரியா மாகாராணிக்குக் கடிதம் எழுதியிருந்தார். இனி நூறு பவுண்களாக அனுப்புமாறும் கேட்டிருந்தார்.

பேரனின் கடிதத்தைக் கண்டதும் மகாராணி சிந்தனையில் ஆழ்ந்தார். அதிகமான பணத்தை அனுப்ப விரும்பவில்லை; அனுப்பாமல் இருக்கவும் மனம் வரவில்லை.

அனுப்பாமல் விட்டால் பேரன் மனம் வருந்துவான் என்ற கவலை ஒரு புறம்; அனுப்பினால் பேரன் செலவாளியாகிவிடுவான் என்ற வேதனை மறுபுறம். மகாராணியால் முடிவெடுக்க முடியவில்லை.

பேரனுக்கு கடிதம் எழுதுவார். ஆனால் அவற்றை உடன் கிழித்துவிடுவார். இப்படி சில நாள்கள் கடந்தன.

இறுதியாக ஒரு நாள் ஒரு கடிதம் எழுதினார். பெருஞ்செல்வத்தில் பிறந்து வளர்ந்த குடிமகனாயினும் எப்படி சிக்கனமாக வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது பற்றிய விதிகளை — அதற்குரிய வழிகளை — எல்லாம் நன்கு விளக்கமாக எழுதி கடிதத்தை உறையிலிட்டு அஞ்சல் செய்ய அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தை அஞ்சலிடச் சென்றவனை திடீரென மீண்டும் அழைத்து தபால் நிலையத்துக்குச் சென்று அக்கடிதத்தைத் திருப்பி வாங்கிவா என மகாராணி கட்டளையிட்டார். ஆனால் அந்த நபர் தபால் நிலையம் சென்ற போது கடிதம் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகாராணிக்குப் பெருங்கவலை. பேரன் என்ன நினைப்பானோ? என்ன செய்வானோ? — என்ற கவலையினாலே சுமார் ஒரு கிழமை சரியாக உண்ணாமலும் உறங்காமலும் வருந்தினார்.

பத்தாவது நாள் பேரனிடமிருந்து கடிதம் வந்தது. பேரன் என்ன எழுதியிருக்கிறானோ எனத் தெரியாது பதற்றமடைந்த மகாராணி கடிதத்தை அவசரப்பட்டுப் பிரித்தார்.

கடிதம் மிகவும் சுருக்கமாகவே இருந்தது. ''பாட்டி, இனிமேல் நீங்கள் அனுப்பும் ஐம்பது பவுணையும் அனுப்ப வேண்டாம். நான் பணம் கேட்கும் போதெல்லாம் எனக்கு சிக்கன வாழ்க்கைக்கான விவர விளக்கங்களை எழுதி அனுப்பிக்கொண்டே இருங்கள். அதுபோதும். **''சிக்கனமாக வாழ்வது எப்படி?''** எனவும் நூலின் ஆசிரியர் விக்டோரியா மகாராணி என்றும் குறிப்பிட்டு நீங்கள் அனுப்பிய கடிதத்தை ஒரு புத்தக வியாபாரிக்கு ஆயிரம் பவுணுக்கு விற்றுவிட்டேன்'' என அக்கடிதத்தில் இருந்தது.

இக்கடிதத்தை எழுதிய சிறுவன்தான் பிற்காலத்தில் பிரிட்டிஷ் பேரரசனாக விளங்கிய ஐந்தாவது ஜோர்ஜ் மன்னன் ஆவான். ★

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## 'செஸ்' என்ற பெயர் வந்தது எப்படி?

பண்டைய இந்து மன்னர்கள் விளையாடிய 'சதுரங்கம்' தான் இன்றைய 'செஸ்' விளையாட்டின் மூலம் எனக் குறிப்பிட்டு, கடந்த வார சஞ்சீவியில் ''முதல் 'செஸ்' சம்பியன்கள்'' என்ற தலைப்பில் பிரசுரமான துணுக்குக் குறித்து, மேலதிக தகவல்களை கொக்குவிலைச் சேர்ந்த சி. அ. பாலசிங்கம் என்ற வாசகர் அனுப்பி வைத்திருக்கின்றார். பயனுள்ள அத்தகவல் உங்கள் சிந்தனைக்கு இதோ:-

இந்து இதிகாசங்கள், புராணங்கள், வரலாற்று நூல்களில் இருந்து தேர், யானை, குதிரை, காலாள் எனப் படைகள் நால்வகைப்பட்டிருந்ததை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. மேலும் இவை சதுரங்கப் (நால் வகைப்) படைகள் எனவும் வழங்கப்பட்டு வந்துள்ளன. Chess என்ற உள்ளக விளையாட்டு இதன்வழி பிறந்ததாகும்.

ஆங்கில மொழியில் சொற்களை உருவாக்குவதில் Acronym என்ற ஒரு முறையுண்டு. சொற்களின் முதலெழுத்துக்களைத் தொகுத்து புதிய சொல் ஒன்றை உருவாக்குவதே அந்த முறையாகும்.

சதுரங்கப் படையில் உள்ள தேர் (Chariot), குதிரை (Horse), யானை (Elephant) காலாள் (Soldier) ஆகிய சொற்களின் முதல் எழுத்துக்களை ஆங்கில மொழியில் பன்மை விகுதியான 'S' (எஸ்) என்ற எழுத்துடன் சேர்ந்து உருவானதுதான் Chess,

அறுபத்து நான்கு கட்டங்களைக் கொண்ட பலகையில் முப்பத்திரண்டு ஆட்டக்காய்களைவைத்து.இருவர் எதிரெதிரே அமர்ந்திருந்து படைநகர்வுபோல் எதிராளியின் காய்களை வெட்டி முன்னேறி, வெற்றியை ஈட்டும் விளையாட்டைச் சதுரங்கம் என்று அழைப்பது பொருத்தமானதே.

ஆனால் சகுனியும் தருமரும் மோதியது சதுரங்கத்தில் அல்ல; சொக்கட்டான் ஆட்டத்திலாகும். வேதனை செய்யும் சூதாட்டமும் அதுவே. பெரும் பொருளைப் பந்தயமாக வைத்து விளையாடும் ஆட்டமது.

## உடைகளின் பெயர்கள்

பெண்கள் அணியும் நவநாகரிக உடைகளில் 'மக்ஸி', 'மிடி', 'மினி' ஆகியவற்றுக்கு முக்கிய இடமுண்டு. ஆனால் இந்தப்பெயர்கள் எப்படி வந்தன என்பது பெண்களாகிய உங்களுக்குத் தெரியுமா?

ஆகக்கூடிய 'மக்ஸிமம்' (Maximum) நீளத்துக்கு— கால் பாதம் வரை—நீண்ட உடையாக அணிவது 'மக்ஸி'.

ஆகக் குட்டையாக—'மினிமம்' (Minimum) அளவுக்கு —கட்டையாக அணிவது 'மினி'.

இரண்டுக்கும் நடுவில் மீடியம் (Medium) அளவில் — முழங்கால் வரை நீளத்துக்கு அணிவது 'மிடி'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கலக்குக் கலக்கிய அமைச்சரவை மாற்றம்

## உள்ளும் புறமும்

குறுமுனி

"இதோ வருகிறது! அந்தா வருகிறது!!" என வெகுசனத் தொடர்பு சாதனங்களும் —

"இப்போது வராது! வரவே மாட்டாது!" என சில உயர்மட்ட அரசுப் பிரமுகர்களும் —

மாறி - மாறி கூறி வந்த அமைச்சரவை மாற்றம் கடைசியாகக் கடந்த வாரம் வந்தே விட்டது.

பல்வேறு அமைச்சுக்களையும் ஒரு கலக்குக் கலக்கி, குலுக்கி, கலந்து அமைச்சுப் பொறுப்புக்களை மாற்றியமைத்துக் கொடுத்திருக்கின்றார் ஜனாதிபதி.

ஆனால் அது சில அமைச்சர்களை மட்டுமல்லாமல், பல கட்சிக் கூட்டமைப்பான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது.

### பௌஸியின் சீற்றம்

என்றும் நான் தான் சுகாதார அமைச்சர் என்றும், அமைச்சுப் பதவியை மாற்றினால் அரசிலிருந்து வெளியேறி விடுவேன் என்றும் வீறாப்புப் பேசிய பௌஸி இந்த அமைச்சரவை மாற்றத்துடன் அடங்கிப் போனார்.

தனது அமைச்சுப் பதவி மாற்றப்பட்டது பற்றித் தெரிந்ததும் — ஜனாதிபதிக்கு முன்பாகவே — அமைச்சர் நியமனக் கடிதத்தை மேசையில் தூக்கிப்போட்டு — தனது சீற்றத்தை பௌஸி வெளியிட்டாராயினும், உடனடியாகவே சோடா 'காஸ்' அடங்குவது போல அடங்கி, அமைச்சுப் பதவியைத் தக்க வைத்துக் கொண்டார்.

பௌஸி சுகாதார அமைச்சராக இருந்த போது டாக்டர்கள், தாதிமார்கள், மருத்துவ ஊழியர்கள் என பல தரப்பினரும் மாறி மாறி வேலை நிறுத்தத்தில் குதித்து, மருத்துவ சேவையே ஒரே குளறுபடிக்குள் சிக்குப் பட்டுக்கிடந்தது.

ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் இந்தவிவகாரத்தில் தலையிட முயற்சித்த போதெல்லாம், முதலில் அமைச்சரை மாற்றுங்கள் என மருத்துவ சேவையாளர்கள் ஒரே குரலில் அடம் பிடித்து நின்றனர்.

இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் ஒரே கல்லில் தீர்வு கண்டு விட்டார் ஜனாதிபதி.

பௌஸியின் சீற்றத்துக்கு அமைச்சுப் பதவி மாற்றம் மட்டும் காரணமல்ல.

இது வரை காலமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள்ளும் மூத்த முஸ்லிம்பிரமுகர் தான் ஒருவரே என்று மார்தட்டி நின்றவர் பௌஸி. ஆனால் பிரதி அமைச்சராக இருந்த அலவி மௌலானாவுக்கு முழு அமைச்சர் பதவி மட்டுமல்லாமல் — முக்கிய பொறுப்பான மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பதவியையும் வழங்கியதன் மூலம் கட்சிக்குள் பௌஸிக்கு நிகரானவராக அலவி மௌலானாவைத் தூக்கி நிறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி.

இதனால் கடுப்படைந்து போய் இருக்கின்றார் பௌஸி.

கடந்தஉள்ளூராட்சித் தேர்தல்களின்போது வேட்பாளர்கள் நியமனத்தில்— பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் — பௌஸியுடன் முரண்டு பிடித்து மோதிக் கொண்டிருந்தவர் அமைச்சர் அஷ்ரப்.

அமைச்சரவை மாற்றத்தை அடுத்து அலரி மாளிகையிலிருந்து அஷ்ரப்பும், அலவி மௌலானாவும் கைகோர்த்தபடி சிரித்துப் பேசிக் கொண்டு, ஒரே காரில் பள்ளிவாசல் ஒன்றுக்குப் புறப்பட்டுச் சென்றதும் பௌஸியை மேலும் வெறுப்பேற்றவைத்து விட்டதாம்.

### வர்த்தகப் பிரமுகர்கள் மகிழ்ச்சி

அமைச்சரவை மாற்றத்தால் மகிழ்ந்த மற்றொரு குழுவினர் வர்த்தகப் பிரமுகர்கள் ஆவர்.

தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஸ நீக்கப்பட்டு புதிய அமைச்சரும் சட்டத்தரணியுமான ஜோண் செனிவிரத்னவிடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சராக மகிந்த ராஜபக்ஸ இருந்த போது தொழிலாளருக்கு அதிக உரிமைகளை உறுதிப்படுத்தும் 'தொழிலாளர் சாசனம்' ஒன்றை சட்டமாக்கும் முயற்சியில் ஒற்றைக் காலில் நின்றவர்.

ஆனால் வர்த்தக வட்டாரங்கள் ஜனாதிபதியின் கையைக் காலைப் பிடித்து அந்த முயற்சியை முறியடித்து விட்டன.

தொழிலாளர் சாசனம் கொண்டு வரப்பட்டால் வெளிநாட்டு முதலீடுகள் வாபஸ் பெறப்பட்டுவிடும்; நாட்டில் புதிய வெளிநாட்டு முதலீடுகள் மேற்கொள்ளப் படமாட்டா என்ற பூதத்தைக் காட்டியே மகிந்த ராஜபக்ஸவின் முயற்சிக்கு அப்போது தடைபோட்டு விட்டது பலம் மிக்க வர்த்தக வட்டாரங்கள்.

ஆனால் எப்படியும் தொழிலாளர் சாசனத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவேன் என கங்கணம்கட்டி முயற்சித்துக் கொண்டிருந்தார் மகிந்த ராஜபக்ஸ. தொழில் அமைச்சர் பதவியிலிருந்து அவர் தூக்கப்பட்டதால் வர்த்தக வட்டாரங்களுக்கு இனிமேல் நிம்மதியாகத் தூக்கம் வரும்.

★ ★ ★

### டக்ளஸுக்கு அமைச்சர் பதவி?

இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது சிறிமானி 'குறூப்புக்கு' கல்தாகொடுத்திருக்கின்றார் ஜனாதிபதி.

தவிரவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சுப் பதவியும் கிழக்கு மாகாணப் புனர் வாழ்வு அமைச்சு என குறுக்கப்பட்டுள்ளது.

அக்கட்சியைச் சேர்ந்த ஹிஸ்புல்லா முக்கியமான தபால், தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் பதவியிலிருந்து வேறு முக்கியமற்ற பிரதி அமைச்சர் பதவி ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தையே பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசுக்கு சிறிமானி 'குறூப்' மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களின் ஆதரவு அவசியம். ஆனால் அப்படியிருக்கும்போது அமைச்சரவை மாற்றத்தின் போது இந்த இரண்டு பிரிவினரையும் முனைறத்துக் கொள்ள ஜனாதிபதிக்கு தெரியம் வந்தது எங்ஙனம்?

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ. பி. டி. பியின் எம். பிக்களின் முழு ஆதரவு தனக்கு உண்டு என்பதாலேயே ஜனாதிபதி மேற்படி இரு தரப்பினரையும் பகைத்துக் கொள்ளத் தயங்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

என்றாலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப், அமைச்சரவை மாற்றத்துக்குப் பின் ஜனாதிபதியுடன் நேரில் பேசி பிணக்கைத் தீர்த்துக் கொண்டு விட்டார்.

அனேகமாக தபால், தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் பதவி மீண்டும் ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்படலாம் எனத் தெரிகின்றது.

அஷ்ரப்பிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வடக்கு மாகாணபுனர்வாழ்வு அமைச்சுக் குறித்து இரு விதமான கதைகள் அடிபடுகின்றன.

டக்ளஸ் தேவானந்தாவுடன் நேரில் பேசி ஓர் உடன்பாடு காணப்பட்டால் அந்த அமைச்சை அவருக்கு ஜனாதிபதி வழங்குவார் என்பது ஒரு தரப்புத் தகவல்,

ஆனால் வடமாகாண மீள் குடியமர்வு, அதிகாரசபையின்(RRAN) தலைவர் சோமபால குணதீர ஊடாக வட பகுதி புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஜனாதிபதியே நேரடியாகக் கவனிப்பார் என்கின்றது மற்றொரு தரப்பு.

டக்ளஸ் அமைச்சராவதாக இருந்தால்கூட, அவருடன் பல விடயங்கள் குறித்து முன்னரே ஜனாதிபதி சந்திரிகா பேசி இணக்கம் காண வேண்டியிருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

# மகளிருக்கு எதிரான அடக்குமுறைகள்

## ஐ. நாவின் திடுக்கிடும் புள்ளி விபரம்

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் —

தேகாரோக்கியத்துக்கான சுகாதார வசதிகளை வழங்குவதில் பாரபட்சம் —

கர்ப்பம் தரிப்பதைத் தீர்மானிப்பதற்கான உரிமை வழங்கப்படாமை —

ஆகிய பிரதான விடயங்கள் மகளிர் சமூகத்துக்கு எதிராக இன்று கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளில் முக்கியமானவையாகும்.

— இவ்வாறு தெரிவித்திருக்கின்றது ஐ. நாவின் சனத்தொகை நிதியத்தினால் வெளியிடப்பட்ட — 'உலக ஜனத்தொகையில் 1997 ஆம் ஆண்டின் நிலைமை'—என்ற அறிக்கை.

கடந்த மாத இறுதியில் இந்த அறிக்கை பகிரங்கப் படுத்தப்பட்டது.

கர்ப்பம் தரித்தல், தாய்மை அடைதல், குழந்தையைச் சுமத்தல் ஆகிய




விடயங்களில் தனது சுய விருப்பத்தைத் தேர்ந்தெடுத்துச் செயற்படுத்துவதற்கு பெண்களுக்கு இன்று உரிமை மறுக்கப்படுகின்றது. இதுவே வருடம் தோறும் மில்லியன் கணக்கில் உயிரிழப்பு, அங்கவீனமாதல், நோயாளியாதல் போன்றவை இடம்பெறுவதற்குக் காரணமாகின்றன.

இந்த விவகாரங்கள் தொடர்பாக மேற்படி அறிக்கை அம்பலப்படுத்தும் முக்கிய புள்ளி விவரங்கள் வருமாறு:—

★ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கர்ப்பம் தொடர்பான பிரச்சினைகளில் — ஒரு நிமிடத்துக்கு ஒருவர் — என்ற விகிதத்தில் வருடாந்தம் ஐந்து லட்சத்து 85 ஆயிரம் பெண்கள் உயிரிழக்கின்றார்கள்.

★ உரிய வைத்திய வசதிகள் இல்லாததால் வருடந்தோறும் சுமார் இரண்டு லட்சம் தாய்மார் பிரசவத்தின்போது மரணமடைகின்றார்கள்.

★ சுமார் 15 கோடி பெண்கள் கர்ப்பம் தரிப்பதற்கு இடையிலான காலத்தை நீடிக்க விரும்புகின்றார்கள். ஆனால் அந்த விருப்பத்தைச் செயற்படுத்துவதற்கு வாய்ப்பான வசதிகளோ, அனுமதியோ அவர்களுக்கு இல்லை.

★ கர்ப்பம் தரிப்பதைத் தவிர்ப்பதற்கான முறைகளை சுமார் முப்பத்தைந்து கோடி தம்பதியர் சரிவர அறிந்து வைத்திருக்கவில்லை.

★ வருடந்தோறும் கர்ப்பம் தரிக்கும் 17 கோடி ஐம்பது லட்சம் பேரில் ஆகக் குறைந்தது ஏழு கோடி ஐம்பது லட்சம் பேர் விருப்பம் இன்றியே கர்ப்பம் தரித்துவிடுகின்றார்கள். இது வருடாந்தம் நாலரைக் கோடி கருக்கலைப்புகள் ஏற்படக் காரணமாகின்றது. இவற்றில் சுமார் இரண்டு கோடி கருக்கலைப்புகள் பாதுகாப்பற்ற வழிமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன,

★ குழந்தைப் பேறு மற்றும் பாலியல் முறைகளால் பரவும் தொற்று நோய்கள் காரணமாக வருடாந்தம் பத்து லட்சம் பேர் உயிரிழக்கின்றனர்.

★ வருடம் தோறும் மூன்று கோடி முப்பது லட்சம் பேர் பாலியல் தொற்று நோய்களுக்கு ஆளாகின்றனர். அவர்களில் அரைவாசிப் பேர் 'டீன்—ஏஜ்' வயதுகளைச் சேர்ந்தவர்களாவர்.

★ சுமார் 12 கோடி பெண்கள் இனப்பெருக்க உறுப்புகள் தொடர்பான அங்கவீனத்துக்கு உள்ளாகியுள்ளனர். மேலும் இருபது லட்சம் பேர் வருடாந்தம் இத்தகைய அங்கவீனத்துக்கு உள்ளாகும் ஆபத்து நிலை காணப்படுகின்றது.

★ கற்பழிப்பு மற்றும் அது போன்ற பாலியல் வல்லுறவுகள் குறித்து முறையாக முறைப்பாடுகள் செய்யப்படுவதில்லையாதலால் அது குறித்துத் திட்டவட்டமான புள்ளிவிவரங்களைப் பெற முடியாத நிலையே காணப்படுகின்றது.

★ உலகின் பல்வேறு சமூகங்களில் இருந்தும் சுமார் ஆறு கோடி பெண்கள் கருக்கலைப்பு மற்றும் பாலியல் வல்லுறவுகள் போன்ற செயல்கள் காரணமாகக் காணாமற் போயிருக்கின்றார்கள்.

ஐந்திற்கும், பதினைந்துக்கும் இடைப்பட்ட வயதுடைய சுமார் இருபது லட்சம் பெண்கள் வருடந்தோறும் பாலியல் சந்தையில் புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்றார்கள்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

மகளிருக்கு உரிய சுகாதார வசதிகளை வழங்குதல் —

பாலியல் உறவு — கர்ப்பம் தரித்தல் போன்ற விடயங்களில் சுயாதீனமாக முடிவெடுக்கக்கூடிய உரிமை மகளிருக்கு இருப்பதை சட்டபூர்வமாக உறுதிப்படுத்தல்—

குடும்பக்கட்டுப்பாடு தொடர்பான ஆலோசனைகளை மகளிருக்கு வழங்குதல் —

போன்ற சிபார்சுகள் உலக நாடுகள் அனைத்திலும் நடைமுறைப் படுத்தப்படு [illegible] வேண்டும் என்றும் அந்த அறிக்கை ஆலோசனை தெரிவித்திருக்கின்றது.

- கவி -

# இராமன் அழகை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருணை பொழிபவன்.

எனவே, இவ்வுவமையும் பொருந்தாமற் போக, சலிப்படைகிறான் கம்பன். இத்துணை தமிழாற்றல் இருந்தும் இராமன் அழகை உவமைக்குள் அடக்க முடியாமற் போனது கண்டு, தவிக்கிறான் அவன்.

சொல்லிவிட வேண்டும் எனும் ஏக்கம். சொல்ல முடியாத தவிப்பு, தன் தமிழால் முடியாது போன இயலாமை அனைத்தும் ஒன்று சேர்ந்து விரக்தியின் உச்சநிலைக்கு அவனைத் தள்ள, வார்த்தைகளைக் கடந்து நிற்கும் இராமன் அழகால் அதிசயமுற்றும், தன் நிலைக்கு இரங்கியும் 'ஐயோ' எனும் வார்த்தை அவனை அறியாமல் பிறக்கிறது. அவ்வார்த்தை கொண்டே அடுத்த அடியை ஆரம்பித்து, இராமனின் அழியா அழகை வியந்து கவிதையை நிறைவு செய்கிறான்.

**'வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும்**
**போனான்**
**மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ**
**ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்?**

இங்கோர் அதிசயம் நிகழ்கிறது. இராமன் அழகை கம்பனின் உவமைகளால் விளங்க முடியாத நாம் வியப்பினாலும் இயலாமையினாலும் கம்பனிட்ட 'ஐயோ' எனும் சொல்லால் அதை உய்த்துணருகிறோம்.

எங்ஙனம்?

இராமனழகை உவமிக்கச் சொற்களின்றி கவிச்சக்கரவர்த்தி கம்பனே இயலாமையால், 'ஐயோ' எனச் சலிப்படைதலும், இராமனழகு கண்டு 'ஐயோ' என வியப்படைதலும் அறிய முடியா இராமன் அழகினை கற்போர்க்கு உணர்த்தி விடுகின்றன. உவமைச் சொற்களில் தோற்ற கம்பன், இயலாமையாலும் வியப்பாலும் இட்ட 'ஐயோ' எனும் சொல்லால் இராமன் அழகைக் கற்போர்க்கு உணர்த்தி, வெற்றி கொள்ளும் பாங்கு தனித்துவமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org